MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR. MADRAS-41.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

4050

ஸ்ரீகுமாரதேவர்

அருளிச்செய்த

# சாத்திரக்கோவையும்,

# பெரியநாயகியம்மன்பதிகமும்,

ஸ்ரீசிதம்பரசுவாமிகள்

அருளிச்செய்த

# நெஞ்சுவிடுதூதும்,

திருத்துருத்தி

இந்திரபீடம் கரபாத்திரசுவாமிகள்

ஆதீனத்திற்குரிய

## ஈசூர் - சச்சிதாநந்தசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

பி-ஆறுமுகமுதலியாரவர்களால்

பல்பிரதிகளைக்கொண் டாராய்ச்சிசெய்வித்தபிரதிக்கிணங்க

முதற்பதிப்பு. காப்பி 1000.

K. P. SINGAHAVALU MDR MADRAS

சென்னை.

ஜீவகாருண்யவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1904.

வன்பளிப்பு

உ

சிவமயம்.

# கருத்து.

---

முக்கியகவனிப்பு:—இப்பதிப்பிற்கு முன்னர் சிலரச்சிட்டிருந்த பிரதிகளிலுள்ள (இச்சாத்திரக்கோவைகளைப்) பரிசோதிக்குமளவில் யாதும் வரிசைக்கிரமமா யில்லாமையானும், ஒன்றுக்கொன்று பேதமாயிருப்பதைப்பற்றி, ஒருவாறுசந்தேகங்கொண்டு, (மூல ஏட்டுப்பிரதிகளில்) எவ்வாறிருக்குமோ ! எனவெண்ணி, சில மடாதிபர்களுக்கும், சில வேதாந்திகட்கும, சில பேரறிவுடையோர்கட்கும், அடியேன்சிரசாஷ்டாங்கமாக (இக் குமாரதேவர் சாத்திரக் கோவைகட்கு மூல ஏட்டுப்பிரதிகளிருக்கில்) அடியேன்பேரில் தயவிட்டு அனுப்பித்துக் கொடுக்கவேண்டுமென்று (பல நிரூபமெழுதியும்) பதில் சரிவரக்கிடைக்காமல் பிரகு ஒருவாறுதுணிந்து, "அரசனெவ்வழி யவ்வழிகுடிகள்" என்றும் நீதிவாக்கியத்தைக் கடைப்பிடியாகக் கைக்கொண்டு, முன்ன ரச்சிட்டபிரதிகளை வெகுவாய்ப் பரிசோதிப்பித்து, அடியேன் (இச்சாத்திரக்கோவையை) யச்சிட்டிருப்பதுடன், விருத்தசைலத்தின்கண்ணே யெழுந்தருளியிருக்கும் (பெரியநாயகியம்மன் பேரில்) ஷை (ஸ்ரீ-குமாரதேவர்) அருளிச்செய்த (பதிகமுஞ்) சேர்த்து நன்குமதிக்கத்தக்கக் கடிதத்தி லச்சிட்டு முடிவுபெற்றிருக்கின்றன.

| | |
|---|---|
| ஆப்பவுண்டு புத்தகம் க-க்கு | அணா-அ 0 |
| கலிகோ [டை புல்பவுண்டு] புத்தகம் க-க்கு | அணா-க0 0 |

இப்படிக்கு,

**கே, பெ - சிங்காரவேலுமுதலியார்,**


நெ, 39. அம்மன்கோவில்தெருவு,

கிருஷ்ணாங்குளம் சென்னை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



# ஆதீன வரலாறு.

## துறையூர்-சிவப்பிரகாசசுவாமிகள்.

பேறையூர்-சாந்தலிங்கசுவாமிகள்,

ஸ்ரீ-குமாரதேவர்,

சிதம்பரசுவாமிகள்,

ரெட்டி-சிதம்பரசுவாமிகள்,

பழனிசுவாமிகள்,

கூவாலத்துச்சுவாமிகள்,

புலியூர்ச்சுவாமிகள்,

குழந்தைவேல்சுவாமிகள்,

முத்தையசுவாமிகள்,

MAHAMAHOPADHYAYA
V. SWAMINATHAIYAR LIBRARY.
UR. MADRAS-41.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## குருபூசைநாட்கள்.

ஸ்ரீ-குமாரதேவர் = { புரட்டாசிமீ பூர்வபக்ஷம் சதுர்த்தசி.

குழந்தைவேல்சுவாமிகள். } = ஆடிமீ அசுவனி.

—*—

## சாத்திரங்களின் அட்டவணை.


| எண். | சாத்திரங்களின் விபரம். | பாடற்றொகை. | பக்கம். |
|---|---|---|---|
| ௧ | மகாராஜாதுறவு | ௧௧௭ | ௩௫ |
| ௨ | சுத்தசாதகம் | ௧௫ | ௬௪ |
| ௩ | விஞ்ஞானசாரம் | ௧௮ | ௮௫ |
| ௪ | அத்துவிதவுண்மை | ௧௦௧ | ௧௦௪ |
| ௫ | பிரமானுபூதிவிளக்கம் | ௧௦௨ | ௧௨௨ |
| ௬ | ஞானவம்மானை | ௧௦௦ | ௧௩௨ |
| ௭ | வேதாந்ததசாவத்தைக்கட்டளை | — | ௧௩௭ |
| ௮ | வேதாந்ததசகாரியக்கட்டளை | — | ௧௩௯ |
| ௯ | சகசநிட்டை | ௧௧ | ௧௪௨ |
| ௧௦ | உபதேசசித்தாந்தக்கட்டளை | — | ௧௪௪ |
| ௧௧ | பிரமசித்தியகவல் | — | ௧௪௮ |
| ௧௨ | சிவதரிசன அகவல் | — | ௧௫௯ |
| ௧௩ | ஆகமநெறியகவல் | — | ௧௬௧ |
| ௧௪ | வேதநெறியகவல் | — | ௧௬௪ |
| ௧௫ | பிரமானுபூவ அகவல் | — | ௧௬௭ |
| ௧௬ | சிவசமரசவாத அகவல் | — | ௧௭௧ |
| — | பெரியநாயகியம்மன்பதிகம் | ௧௦ | ௧௭௫ |


சாத்திரங்களின் அட்டவணை முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ-குமாரதேவர்

# சரித்திரச்சுருக்கம்.

ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்த ஸ்வரூபமே ஒருருவாகத் திருமேனிகொண்டருளிய ஸ்ரீ குமாரதேவர் முற்பிறப்பில் பரமசிவத்தைநோக்கி மல்லிகார்ச்சுன பர்வதத்தில், நிஷ்காமதவஞ்செய்கையில், அந்தச்சுவாமிகளோடுகூட வேறொருவர் அந்தப்பர்வதத்தின்கண்ணே தவஞ்செய்துகொண்டிருந்தார்; அப்போது பரமசிவம் அவரது தவத்திற்கிரங்கிப் .பிரத்தியட்சமா யெழுந்தருளிவந்து, அப்பனே? உனக்கு என்னவரம்வேண்டுமென்று கேட்குமளவில், அவரோ ஒன்றைக்கருதி! மற்றொன்றைக் கேட்டமாத்திரத்தில், பரமசிவம் திருவுளத்தில் முனிவுகொண்டு, அடா நீ ஜடாமுனியாகக்கடவதென்று ஜபிக்க: அதுகேட்டு அவரும் திடுக்கிட்டெழுந்து நின்று சுவாமி? யான் கருதிவந்ததைக்கேளாமல் ஊழ்வினைச்சேட்டையால் தவறிப்போனேன் பரம்பொருளே! இனி யாதுசெய்யவல்லேன். அச்சோ! இச்சாபம் அடிமைக்கு, எக்காலத்தில் விமோசனமாகுமென்று அடிவணங்கிகேட்க, அடா நீபோய், விருத்தாசலத்தில் மணிமுத்தாநதிக் கரையில் வளர்ந்தோங்கிருக்கின்ற அரசமரத்தின்மேலிருந்தாயாகில், இந்தப்பர்வதத்தில் உன்னோடு தவஞ்செய்துநிற்கின்ற எமது அன்பனாகிய ஒருவன் கர்நடதேயத்தில் இராஜனாகஅவதாரஞ்செய்து, சிறிதுநாள் அரசுபண்ணி, பிறகு விரகதியுண்டாய்

பேரையூர்ச் சாந்தலிங்கசுவாமிகளிடத்தில் அநுக்கிரகம்பெற்றுக் கொண்டு மேற்படி ஆசிரியருத்தாரப்படி விருத்தாசலம்வந்து நீ இருக்கின்ற அரசமரத்தினீழலில் இருப்பான். அப்போது, அவனைக்கண்டு வணங்கிக்கேட்டால், அவன் விமோசனஞ் செய்வானென்று திருவாய்மலர்ந்தருளியமாத்திரத்தில், அந்தஜடாமுனியும், சுவாமி? அவருக்கு முத்தித்திசை எப்போதென்று கேட்க; அடா? அந்த அன்பன் இதற்குமுன்னர், ஐந்துசுத்ததேகமெடுத்து நம்மைநோக்கி நிஷ்காமதவஞ் செய்திருக்கிறான்; இஃது ஆருவதுதேகம். இன்னம் ஒரு தேகத்தில் முத்தியைப் பெருவானென் றருளிச்செய்ய. அதுகேட்டு ஜடாமுனியும் பாக்கியமென்று பரமசிவனிடத்தில் விடைபெற்றுக் கொண்டுபோய், மேற்சொல்லிய அரசமரத்தின்மேலிருந்து எப்போது விமோசனகாலம் நேரிடு மென்று வழிபார்த்துக்கொண்டிருந்தான்.

ஸ்ரீ குமாரதேவரோ என்றால், பரமசிவத்தின் திருவருட்படி அருளே திருவுருவாகக்கொண்டபோதினும், ஆசிரியர்வேண்டியிருப்பதால், கந்நடதேயத்திலவதரித்துச் சிறிதுநாளரசுசெய்து பிறகு துறவுபூண்டு ஒருநாள், தம்மிடத்திலுள்ள மந்திரிமார்களில் முதல் மந்திரியானவரால் தமது சரித்திரமுழுதும் பேரையூர்ச் சாந்தலிங்கசுவாமிகளுக்குத் தெரிவித்தபின்பு தாமேபோய் மேற்படி சுவாமிகளைக்கண்டு வணங்கிநிற்க; அதுதெரிந்து சுவாமிகளும் இவரது பரிபாகத்தை நோக்கும்பொருட்டுத் தம்மிடத்திருக்கும் கையேட்டுத் தம்பிரானைப்பார்த்து அப்பா இவனைப்பார்த்தால் அரசனைப் போலிருக்கின்றது, இவனிந்தவழிக்குப் பாத்திரவானல்லன், ஆதலால் இவனை அரசுக்கே போகும்படி சொல்லென்று சொல்ல: அதற்கு அந்தத்தம்பிரானும் சுவாமி? இவ்வரசனிடத்தில் அதிதீவரபக்துவமுடைய சற்சீஷருக்குள்ள பதினெண்குறியும் உண்டாயிருக்கி

தே யென்று சைகையாகச்சொல்ல, சுவாமிகளும் (முன்பே அறிந்ருப்பதால்,) ஆனால் இவனை நமது எருதுக்குப் புல்லறுத்துப்போச்சொல்லென்று கட்டளையிட்டருள, அவ்வாறே தம்பிரான் அரிரளும், புல்லுகட்டுங் கயிறுங் கொடுத்தனுப்ப, மேற்படி ஸ்ரீ குமாரதவரும் அத்திருப்பணியைச் சிரசாவகித்துக்கொண்டு வயலுக்குப்பாய் பள்ளர்கள் புல்லறுப்பதைப்பார்த்து, தாமும் அவ்வாறே அறுக நினைத்து இடக்கையால் புல்லைப்பற்றி வலக்கையிலுள்ள அரிவாரப் புல்லின்மேற் பூட்டாமல் இடக்கைமேற்பூட்டியிழுக்க கையறுட்டமாத்திரத்தில் மேற்படி வலக்கையைப்பார்த்துக் கோபித்தார்; 'வ்வற்புதக்காட்சியைக் கண்ணுறக்கண்ட மேற்படிபள்ளர்கள் நீர்;ரையா? என்று கேட்க, நான் பேளாயூர்ச்சாந்தலிங்கசுவாமிகள்ரதனத்திற்குப் புல்லறுப்பவனென்று சொல்ல, அதுகேட்டு அப்பளர்களே ஆச்சரியமடைந்து, இவர் அரசனைப்போலிருக்கிறதென்றண்ணி, அப்பள்ளர்களே புல்லறுத்துக்கட்டுக்கட்டி அவர் திருமு.மேல் வைக்க அச்சுமைபொறுமல் திருமுடிசாய்ந்து போவதைக்ண்ட பள்ளர்கள் அப்புற்சுமையை எடுத்துவந்து மேற்படி மடாலத்து வெளியில் வைத்துப்போனார்கள்.

இவ்வாறு இரண்டுநாள் சென்றபின்பு, மூன்றாவதுநாள் மேற்டி புற்சுமையை எடுத்துவந்தபள்ளன் இவர் சேதிமுழுதும் கையே.டுத் தம்பிரானுக்குத் தெரிவிக்க, அவரும் இவர் கையறுப்புண்ட'சதியை சுவாமிகளுக்குக் குறிப்பாகத் தெரிவித்தனர்; சுவாமிகநம் ஸ்ரீ குமாரதேவரைப் பார்த்து சோதனை நிமித்தம் முனிவுகொரபவர்போல் கோபிக்க அவரும் உண்மையாகவேபயந்து ஒருபுறம்துங்கி இருந்துவிட்டார்.

பிறகு அன்று இராத்திரி சுவாமிகள் கையேட்டுத் தம்பிரானைழைத்து அப்பா? எங்களிருவருக்கும் வெவ்வேறே கட்டமுதுகட்டி

ஒரு தண்டத்தில்மாட்டி அரசனிடத்திற் கொடுத்து நம்மோடு கூட அனுப்பிவையென்று கட்டளையிட்டருள: அவரும் அவ்வாறே செய் தனுப்பிவைக்க, சுவாமிகள் முன்னும் ஸ்ரீ குமாரதேவர் பின்னுமா ய்ப்போகையில், சிலதூரம்போய் சுவாமிகள் இவரைத்திரும்பிப்பா ர்த்து என்ன தாமதமென்றதட்ட, அதுகேட்டு இவரும் பயந்து சுவாமி? ஒருபுறம் அச்சுலிங்கம், மற்றொருபுறம் கணுயுத்தம் இழுக் கின்றதே! என்றுசொல்ல, அக்குறிப்பையறிந்து சுவாமிகள் தமக் குத்தாமே ஆனந்தபரவசமடைந்து, பிறகு அவ்விடத்திலுள்ள ஓர் குளக்கரைமேலிறங்கி இருவரும் ஒன்றாக உட்கார்ந்து இரண்டன்ன த்தையும் ஒன்றாகச்சேர்த்து ஸ்ரீ குமாரதேவர் சுவாமிகளுக்குப் பரி மாற மேற்படி சுவாமிகள் நைவேத்தியங்கொண்டபின், சேடமான மகாப்பிரசாதத்தைத் தாமும் உட்கொண்டு, சிறிதுநேரம் அவ்விடத் தில் இருவரும் சிற்சிலவிஷயங்களை வசனித்துக்கொண் டிருந்து; பிறகு மடாலயத்திற்குவந்துசேர்ந்து, சிலநாள்கழித்து, மேற்படி சுவாமிகளிடத்தில் அநுக்கிரகம்பெற்றுக்கொண்டு சாதனைசெய்து முதிர்ந்தகாலத்தில் ஒருநாள் சாந்தலிங்கசுவாமிகள் இவரை மகா ராஜா என்றுபெயரிட்டழைத்து, அப்பா? நீ விருத்தாசலத்துக்குப் போகவேண்டுமென்று கட்டளையிட்டருள: அங்ஙனே நல்லதென்று விடைபெற்றுக்கொண்டு விருத்தாசலத்தைநோக்கி வருகிறவழியில் சின்னசேலத்திற்குக் கீழ்ப்புறயானகாட்டில் இவர் நிமித்தம் அன்பு கூர்ந்து பழமலைநாதரே ஒரு பிராமணரூபமா யெழுந்தருளிவந்து தண்ணீர்ப்பந்தல் வைத்துக்கொண் டிருந்து இவரைக்கண்டு அப் பா? நீஆயாசமாய்ப்போகிறபடியால் நால்வகைஜலமு மிருக்கின்றன, உனக்கு வேண்டியமட்டும் சாப்பிட்டு விடாய்தீர்க்கலாமென் றுபசரி த்துத் தண்ணீர்கொடுக்க: இவர் அதைச்சாப்பிட்டு தாகநிவிர்த்திசெ ய்துகொண்டு, விருத்தாசலம் வந்துசேர்ந்து, மணிமுத்தா நதிக்கரை யிலிருக்கின்ற அரசமரத்து நீழலில் நடந்துவந்த ஆயாசத்தினால் சற்

இஜேப்பாறச்சயனித்து பிரமானந்த நித்திரையி லெழுந்தருளி நந்தனர்.

அதுசேதி பெரியநாயகியாரறிந்து தனதபிடேகத்திற்குச் சுவ பாத்திரத்தில் வைத்திருந்த பசுவின்பாலே ஏந்திக்கொண்டு ஓர் ராமணஸ்திரீயைப்போல அங்கு இவரிடத்தில்வந்து தலேப்பக்க லுட்கார்ந்து தனது திருமடியின்மே லிவரது முடியைத் தூக்கி வத்து அந்தப்பாலேப் புகட்டினபின்பு, இவர் ஆயாசந்தீர்ந்து கண் ரவிழித்துப்பார்த்து நீ ஆரம்மா? என்று கேட்க, அப்பா? குமார வர்? நான்தான் பெரியநாயகி, நீ எப்போதும் என்னிடத்தில்தா ன் சுகமாயிருவென்று திருவாய்மலர்ந்தருளி உடனே மறைந்தரு ளுள். பிறகு, ஸ்ரீ குமாரதேவர் அம்மா! உன் கிருபைக்கு அடி ய யாது கைம்மாறு செய்யவல்லேன்! என்று பலவிறு தோத்திர செய்து அங்ஙனே பரவசமாய் இருந்தார்.

இதை மேற்படி ஜடாமுனி, தேடியிருந்தபொருள் கிட்டிற்றெ வெண்ணி அம்மரத்தைவிட்டுக் கீழேயிறங்கி பிராமணவுருவமாய் ந்து அதிவினயத்துடன் அடிவணங்கிநிற்க: இவர் அந்தஜடாமுனி யப்பார்த்து நீ யார்? என்றுகேட்க: நான் ஜடாமுனியென்று சொ ல; நீ இவ்விடத்திற்கு வந்தகாரியமென்னவென்று கேட்டமாத்தி த்தில், ஜடாமுனி தனதுசரித்திரமுழுதும் விவரமாகச்சொல்ல, அ கேட்டு ஸ்ரீ குமாரதேவரும் சந்தோஷமாய் ஜடாமுனியின் சாபநி ர்த்திசெய்து, சிறிதுநாள் அவ்விடத்தில்தானே கரபாத்திரஞ்செய் க்கொண் டிருக்குங்காலத்தில், அவ்விடத்திலுள்ள ஒரு குடும்பியா ரவன், இவரை மகானென்றறிந்து நாள்தோறும் உண்மையாய்த் ரிசனஞ்செய்துகொண்டேவர, அவனுக்கு நாளுக்குநாள் சகலசம் த்தும் அபிவிர்த்தியடைந்து வருகையில், ஓர்நாள், அவன் ஸ்ரீ குமா தேவரைக்கண்டு வணங்கி சுவாமி? அடியேனுக்கு ஏதேனும் ஓர்

திருப்பணி கட்டளையிட்டருள வேண்டுமென்று வருந்திக்கேட்க' ஸ்ரீ குமாரதேவரும் அப்பா? அப்படி உனக்கிஷ்டமிருந்தால் ஸ்ரீ பே ரியநாயகியார் சந்நிதானத்திற்கெதிராக ஒரு மண்டபங்கட்டிவை யென்று கட்டளையிட்டருள, அவனும் அப்படியே மகாபாக்கியமெ ன்று மண்டபங்கட்டும்படி எத்தனித்துக்கட்டும்போது உத்திரக்கல் மேலேறாமல் வருத்தமடைந்து ஸ்ரீ குமாரதேவருக்குத் தெரிவிக்க' ஸ்ரீ குமாரதேவரும் விபூதியைக்கொடுத்து இதை அந்தக்கல்லின்மே ரில் போட்டுத் தூக்கென்றுத்தரவுசெய்ய, அப்படியேசெய்து முடித் தபின்பு, அந்தக்குடும்பியும் சந்தோஷித்தனாய் ஸ்ரீ குமாரதேவரை வணங்கிநின்று சுவாமி? தேவரீருடைய பிரபாவத்தை யின்னதென் றளவிட்டுச்சொல்ல ஆராலாகுமென்று நானாவிதமாகத் தோத்திரஞ் செய்ய, ஸ்ரீ குமாரதேவரும் அவனை அழைத்துக்கொண்டு போய் கோபுரவாயிலிற் செய்துவைத்திருக்கும் இரண்டு துவாரபாலகருடை யமுதுகும் உரைபட்டிருப்பதைக் காண்பித்து இவர்களுக்குத் தவன கஞ்சி காய்ச்சி நைவேத்தியம் பண்ணென்று கட்டளையிட்டருள, அவனும் மகாபாக்கியமென்று அப்படியே செய்வித்துக் கிருதகிருத் தியனானான்.

பிறகு ஒருநாள், ஸ்ரீகுமாரதேவரும், ஓர் குடும்பி வீட்டுவாயிலில் கரபாத்திரத்திற்குச்சென்று கையேந்த, அவர்கள் இவரது மகிமை யை யறியாதவர்களாய் தங்கள் வீட்டில் சமைத்துவைத்திருந்த மச்ச த்தை அன்னத்தோடுகலந்து இவர்கையிற்பரிமாற, அதுதெரிந்து ஸ்ரீ குமாரதேவரும் அங்ஙனே குளத்தின் நீரருகிற்செல்ல, அந்தமச் சம் உயிர்பெற்று குளத்திற்குதித்துப் போய்விட்டது.

இப்படியிருக்க, ஒரு குஷ்டரோகியானவன் தனதுதேகவருத் தம் நீங்கவேண்டுமென்று நாள்தோறும் இடைவிடாமல் ஸ்ரீ குமார தேவரைக்கண்டு தரிசனஞ் செய்துகொண்டேவருகையில் ஒருநாள் அதிகவாதனையினால் சகிக்கப்படாதவனாய் ஸ்ரீ குமாரதேவரது திரு வடியில்வந்து வீழ்ந்து கோவென்று அலறி முறையிட, ஸ்ரீ குமார தேவரும் அப்பா? நாம் வயித்தியனல்லவேயென்னலும், அவனும்

சுவாமி? தேவரீரது திருக்கையினால் விபூதியாகிலுங்கொடுத்தால் எனதுரோகம் நிவர்த்தியாகுமென் றிரங்கிக்கேட்க, ஸ்ரீ குமாரதேவருந் திருவுளமிரங்கி விபூதியையள்ளி அவனது இடைக்கையில்வைத்து வலக்கையால் மூடிக்கொள்ளச்சொல்லி பழமலையார் சந்நிதானத்தினுள் ஒரு மாடத்திலிருக்கும் விக்கினேஸ்வரனைக் குறியாகக் காண்பித்து, நீ அந்தவிக்கினேஸ்வரர் முன்னேபோய் இரண்டு கண்களையுமூடிக்கொண்டு நின்று அங்கேநடக்கின்ற அதிசயத்தை நமக்குவந்து சொல்லென்று கட்டளையிட்டருள: அவனும் அப்படியே போய் நின்றமாத்திரத்தில் அவனுக்குச் சுழுத்திபோற்றோன்ற, அத்தருணத்தில் அந்தவிநாயகக்கடவுள் தமது துதிக்கையைநீட்டி இவனது இடக்கையிலிருந்த விபூதியைத் தொட்டதுபோலக் கண்டுவிழித்து ஸ்ரீ குமாரதேவ ரிடத்திற்குவந்து விண்ணப்பஞ்செய்த மாத்திரத்தில் ஸ்ரீ குமாரதேவரும் ஆனந்தமாய் அந்த விபூதியைத்தொட்டுத் தரித்துக்கொண்டு, அவனையும் தரித்துக்கொள்ளும்படி உத்தரவுசெய்ய, அவன் அப்படியே தரித்துவருங்காலையில் அவனது குஷ்டரோகம் நிவர்த்தியாகிச் சவுக்கியமடைந்தான்.

இப்படியிருக்கின்றநாளையில், ஒருநாள் ஸ்ரீகுமாரதேவரும் திருவாரூர் மஹோற்ஸவத்திற்குப் போயிருந்தபோது, இரதோச்சவத்தினம் தியாகராஜப்பெருமான் இரதமேறி மாடவீதி திருக்கோலம் வருகையில், அந்த இரதத்திற்கு நேரே ஸ்ரீ குமாரதேவர் தரிசனஞ்செய்துக்கொண்டிருப்பதை இரண்டு சைவர்கள் கண்டு, ஒருவர்க்கொருவர் விகடமாய் வீரசைவமருளைப் பார்த்தீர்களோவென்று பேசிக்கொள்ள, அந்தவிகடவார்த்தையை ஸ்ரீ குமாரதேவர்கேட்டு இரதத்தில்வருந் தியாகராஜப்பெருமானைப்பார்த்து தியாகராஜப்பெருமானே! "வீரசைவம் மருளானால் இரதம் நடக்க, அருளானால் இரதம்நிற்க,, என்று திருவாய் மலர்ந்தருளினவுடனே இரதம் நின்றுவிட்டது: பிறகு ஸ்ரீ குமாரதேவர் கொஞ்சதூரத்திருந்த ஒரு மரநீழலி லுட்கார்ந்திருந்தார். இரதம் நின்றுவிட்ட சேதிதெரிந்த தர்ம்மகர்த்தராகிய தஞ்சாவூர் அரசன் இரதமானது நிலைவந்து சேர்ந்த பிறகு போஜனஞ்செய்கிறதென்னும் நிச்சயமுடையவனாதலால் என்னசெய்வோமென் றச்சமுற்று, இவ்விடத்தில் நடந்த இரகசியந்தெ

ரியாதபடியினால் சாயங்கால பரியங்தமும் அந்த இரதம்நடக்கும்படி அனேகபிரயெத்தினங்கள் செய்வித்தும் அஃது சற்றுகிலும் அசைவியாது நிற்பதைப்பார்த்து, இனியென்ன செய்யக்கூடும்! இது யாரா லுற்ற இடறு! அந்தோ! வீணில்விரதம் தவறுதலகிறதே! எம்பெருமானே! என்று வியசனமுற்று மெய்சோர்ந்துவாடி பிறகு தேறியிருக்குங்காலையில், மேற்படி அரசன் அவ்விடத்தில் நடந்த இரகசியத்தைக் கேள்விப்பட்டு ஸ்ரீ குமாரதேவர் இருக்குமிடத்திற்கு வந்து அவரைக்கண்டு வணங்கி விண்ணப்பஞ்செய்ய ஸ்ரீ குமாரதேவரும் அரசனைப்பார்த்து இம்மறுளனிடத்தில் உங்களுக்கு என்ன அலுவல் போங்களென்றுசொல்ல, அரசனும் சுவாமி? இந்தப்பிழையை மன்னித்து, இரதத்தை நடப்பித்தருள வேண்டுமென்று வெகுவாகத் தோத்திரஞ்செய்ய, அதற்கு ஸ்ரீ குமாரதேவரும் திருவுளமிரங்கி அந்த இராஜனுடனுஞ் சேனைகளுடனும் எழுந்தருளிவந்து இரதத்தின்முன்னேநின்று தியாகராஜப்பெருமானைப்பார்த்து எமது தயாநிதியே! "வீரசைவம் அருளானால் இரதம்நடக்க, மருளானால் இரதம்நிற்க" என்று திருவாய்மலர்ந்தருளின மாத்திரத்தில், இரதம் சடுதியில் நடந்து யாவருங்களிக்க நிலையிற்போய் நின்றது.

இப்பால் ஸ்ரீ குமாரதேவர் மறுபடியும் விருத்தாசலம் வந்து அவ்வரசமரத்தின்கீழ் வாசம்பண்ணிக்கொண் டிருக்குங்காலையில், பிரதேசத்திலுள்ள ஓர் மாந்திரீகன் விருத்தசைலத்திலுள்ள பத்திரகாளியைத் தன் கைவசமாக்கிக்கொள்ள எண்ணினவனாய்த் தனது நாட்டைவிட்டு மணிமுத்தாநதிக்கு வடதிசையாகவருகையில், மேற்படி பத்திரகாளியறிந்து அச்சமுற்றவளாய் ஒரு ஸ்திரீயைப்போல ஸ்ரீ குமாரதேவரிடத்திற்குவந்து அவரைப் பிரதக்ஷண நமஸ்காரம் பண்ணி அவருக்கெதிரே நிற்க, அதுகண்டு ஸ்ரீ குமாரதேவரும் நீ யார்? என்றுவினவ; சுவாமி? நான் பத்திரகாளி, என்னைத் தன்வசஞ்செய்துகொள்ளும்படி ஒரு சண்டாளன்வருகிறான்: அதனால் பயந்துவந்தேனென்று விண்ணப்புஞ்செய்ய, அதற்கு ஸ்ரீ குமாரதேவரும் என்னால் உனக்கு ஆகவேண்டியதென்னென்றுவினவ, பத்திரகாளியும் சுவாமி? தேவரீரது திருவடிகளை அடியாள் சிரசின்மேல் வைத்தால்எனது ஆபத்துநீங்குமென்றுவிண்ணப்பஞ்செய்ய, ஸ்ரீ குமா

ரதேவரும் திருவுள மிரங்கி, அங்ஙனே நல்லதென்று பத்திரகாளிசந்நிதிக் கெழுந்தருளிவந்து, அந்த விக்கிரகத்தின் முடிமேல் தமது திருவடியைத் தூக்கிவைத்தமாத்திரத்தில், அம்மாந்திரீகனுடைய இரண்டுகண்களும், அவன் மனவிருள்போலவே இருளடைந்தன: அதுதெரிந்து அந்தமாந்திரீகனும் பயங்கொண்டு இந்தஸ்தலத்தில் பெரியோர்கள் வாசஞ்செய்திருக்கின்றனர்போலுமென்றெண்ணி, அவ்விடத்தில் விசாரிக்க: ஸ்ரீ குமாரதேவர் எழுந்தருளியிருப்பதைக் கேள்விப்பட்டு அவரிருக்குமிடந்தேடிவந்து, அவரைக்கண்டு வணங்கிநிற்க, ஸ்ரீ குமாரதேவரும் அவனைப்பார்த்து நீயார்? என்றுவினவ, சுவாமி? நான் மாந்திரீகன், நான் இவ்விடத்திற்கு இந்த உத்தேசமாய்வந்த இடத்தில், எனக்கு இவ்வகையான ஆபத்துநேரிட்டது, இதைத் தேவரீரே தீர்த்தருளவேண்டுமென்று வெகுவாகத் தோத்திரஞ்செய்துநிற்க; ஸ்ரீ குமாரதேவரும் சற்றேதிருவுளமிரங்கி அடா? உன்சரீரமுள்ளவரையிலும் இந்த மாந்திரீகத்தை விட்டிருப்பாயாகில் உனக்கு ஒரு கண்மாத்திரந்தெரிய அநுக்கிரகஞ்செய்வோமென்னலும், அம்மாந்திரீகனுமப்படியே நல்லதென்று ஸ்ரீ குமாரதேவரது திருவடியைத்தொட்டுச் சொன்னவளவில், ஒருகண்தெரிந்து தன்னுடைய தேசத்திற்குப் போயினான்.

இப்பால் ஒருகுடும்பியானவன் புத்திராபேக்ஷையினால் ஸ்திரீயுந் தானும் நெடுநாளாய் வியசனப்பட்டுக்கொண்டு ஸ்ரீ குமாரதேவரைக்கண்டு நாள்தோறுந்தரிசனம்பண்ணிவருகையில், ஒருநாள் ஸ்ரீ குமாரதேவர் திருவுள மிரங்கி மேற்படி குடும்பிக்கு விபூதியளிக்க, அவ்விபூதிப்பிரசாதத்தால் அவர்களுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் பிறந்து அவர்கள் வளர்ந்து, ஐந்துவயதாகிப் பள்ளிக்கூடத்தில்வைத்து வித்தியாப்பியாசஞ் செய்வித்தபிறகு, அந்தப்பிள்ளைகளுக்கு இலக்கணப்பியாசஞ் செய்விக்கவேண்டி. இலக்கண்வித்துவானாகிய சிதம்பரப்பிள்ளை யென்பவரை மதுரையிலிருந்து வரவழைத்து மேற்படி இரண்டுபிள்ளைகளுக்கும் இலக்கணப்பியாசஞ் செய்வித்துவருங்காலத்தில், ஒருநாள் ஸ்ரீ குமாரதேவர் குக்ஷிபாதை நிமித்தம் அந்தக்குடும்பிவீட்டுக்குவருகையில், மேற்படி சிதம்பரப்பிள்ளையென்னும் உபாத்தியாயர் இவரிடத்தில் மதிப்பற்று இறுமாந்திருப்பதைக்கண்டு அவரைத் தடுத்தாட்கொள்ளத் திருவுளங்கொண்டு அவரை

நோக்கி, ஓர்வாக்கியத்தைக் கூறி அதற்குப்பயன் வினவ, அவருக்கென்ன வித்வசாமர்த்தியமிருந்தபோதினும், இந்தச்சந்நிதானத்தில் நாவெழாமையால் பயன்கூறாதுமயங்கிநின்று சற்றேதெளிவுண்டாகி ஸ்ரீ குமாரதேவரது திருவடியில்விழுந்து வணங்கி, சுவாமி? அடிமையைமன்னித்து இரக்ஷித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து, அதுமுதல் துறவுபூண்டு மேற்படி ஸ்ரீ குமாரதேவரது பின்னாகச் சாயைபோற்றொடர்ந்து தானுங் கரபாத்திரம் பண்ணிக்கொண்டிருந்தார், அவரது ஆராமையையும், மெய்யன்பையும், ஸ்ரீ குமாரதேவரறிந்து அவரைத்தமது ஆசிரியர்நக்தும் திருப்பேரூருக்குக் கூட்டிக்கொண்டு நடந்து, மடாலயத்திற்குச் சமீபமாகப்போகையில் விடியற்காலையாகையினால் எழுந்திருந்து வெளியேவந்துநிற்கிற, தம்பிரான்களைக்கண்டு, சுவாமிகளிருக்குஞ் சமையமெப்படியென்று வினவ, சுவாமிகள் பரநிட்டையி லெழுந்தருளியிருக்கின்றதெனக் கூற, ஆனால் நாம்பணிசெய்வோமென்று நினைத்து ஸ்ரீ குமாரதேவர் சாணச்சட்டி யெடுத்துக்கொண்டு திருமெழுகிட சிதம்பரசுவாமிகளும் திருவலகெடுத்துக்கொண்டு திருவலகிட்டார்: இத்திருப்பணி முடித்தபின்பு, சுவாமிகள் திருக்கண்விழித்தருளிய சேதிதெரிந்து இவ்விருவர்களும் மடாலயத்துட்சென்று சுவாமிகளைக்கண்டு வணங்கிநிற்க, சுவாமிகளும் ஸ்ரீ குமாரதேவரைப் பார்த்து அப்பா? உன்னை யடுத்துநிற்கின்றவன் யார்? என்றுவினவ, தென்னாட்டுச் சைவனென்றுசொல்ல, இவனை ஏனழைத்துவந்தாய்? என்றுகேட்க, அதற்கு ஸ்ரீ குமாரதேவர் மௌனமாயிருந்து விட்டார்; இப்படி இரண்டுதினஞ் சென்றபின்பு, சிதம்பரசுவாமிகளது நடையைக் கையேட்டுத் தம்பிரானறிந்து சுவாமிகளை வணங்கிநின்று சுவாமி? இத்தச்சைவன் மிகுந்தவல்லவனாயிருக்கிறபடியால் இவனைத்திருவடிக்கு ஆளாக்கிக் கொள்ளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய அதற்குச் சுவாமிகளும் மேற்படி தம்பிரானைப்பார்த்து அப்பா? நமக்கிருக்கிற சந்ததிபோதும்; நமது சந்ததிக்குச் சந்ததி நெடுநாளா யில்லாதிருந்து, இப்போது கிடைத்தபடியால் அப்படியே செய்விக்க வேண்டுமென்று கட்டளையிட, அதற்குத் தம்பிரான் மௌனமா யிருந்துவிட்டார்; இப்படி இரண்டு

நாள்கழிந்தபின்பு,மூன்றாவதுநாள் சாந்தலிங்கசுவாமிகள் ஸ்ரீகுமாரதேவனை அழைத்து நீ உன்னிருப்பிடம் போவென்று சொல்ல, ஸ்ரீகுமாரதேவரும் இவன் இவ்விடத்தி லிருக்கட்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, சுவாமிகள் இவ்விடத்தில்வேண்டாம், நீயேயழைத்துக்கொண்டு போவேன்று சொல்ல, ஸ்ரீகுமாரதேவரும் இவனைக்கொண்டுபோய் அடிமை என்னசெய்கிறதென்று கேட்க, சுவாமிகளும் ஸ்ரீகுமாரதேவரைப் பார்த்து அப்பா? நீ இவனைக்கொண்டுபோய்ப் பக்குவமறிந்து உனக்குச்சொன்னதை இவனுக்குச் சொல்லிவையென்று கட்டளையிட, ஸ்ரீகுமாரதேவரும் மகாப்பிரசாதமென்று விடைபெற்றுக்கொண்டு இருவரும் விருத்தாசலம் வந்துசேர்ந்து, பிறகு சிதம்பரசுவாமிகளது பக்குவஞ்சோதித்து அநுக்கிரகஞ் செய்தருளினார். இவர்தான் திருப்போரூர்ச்சந்நிதானம் விளக்கிய சிதம்பர சுவாமிகள்.

இப்படி நடந்துவருங்காலத்தில் பெரியநாயகியாரும் ஸ்ரீகுமாரதேவரால் சாஸ்திரஞ்செய்விக்கும்படி திருவுளங்கொண்டு ஸ்ரீகுமாரதேவரது யோகில்வந்து அப்பா ? குமாரதேவா நீசாஸ்திரஞ் சொல்லவேண்டுமென்று திருவாய்மலர்ந்தருள, ஸ்ரீகுமாரதேவரும் அம்மா ? அடிமையாற் சொல்ல முடியாதென்று விண்ணப்பஞ் செய்ய, பெரியநாயகியாரும் ஆனால் நாமே உனது நாவில்நின்று சொல்லி முடிக்கிறோ மென்றனுக்கிரகித்து, அங்ஙனே இந்த ஷோடசமகா சாஸ்திரங்களையுஞ்சொல்லி முடித்தருளினார். இப்படி அனந்தமகத்துவங்களைச்செய்து அந்தத்தில் ஸ்ரீகுமாரதேவரும் சொரூபசாக்ஷாத்கார பரிபூரணதிசையையடையுஞ் சமயமறிந்து, இரண்டாவது அடிமையாகிய ரெட்டி - சிதம்பரசுவாமிகள் ஸ்ரீகுமாரதேவரைப் பார்த்து சுவாமி ? தேவரீர் பரிபூரணமானபின்பு அடியார்கள் தரிச

ணஞ்செய் துய்யும்பொருட்டு ஓர் திருப்பணி கட்டளையிட்டருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்கு ஸ்ரீகுமாரதேவர் நாயட மறைந்தும் நமதுபெயரிருக்கவேண்டுமாவென்று அகண்டபரிபூரண சாக்ஷாத்கார சொரூபவியாபகத்திற் கலந்தருளினார். இப்பால் ரெட்டி சிதம்பரசுவாமிகளும் ஸ்ரீபெரியநாயகியார்கட்டளைப்படி ஸ்ரீகுமாரதேவர் திருநாமத்தினால் கோயில்மடாலய முதலாகியதுகளுஞ் செய்வித்து, பிறகு தாமும் பரிபூரணதிசையை யடைந்தருளினார்.

ஸ்ரீகுமாரதேவர் சரித்திரச்சுருக்கம் முற்றிற்று.

இஃது, ஷை சுவாமிகள் மரபிலுள்ள அடியார்களில்

ஒருவரால் தெரிந்து சுருக்கமாக

எழுதப்பட்டது.

ஸ்ரீ-குமாரதேவர் திருவடிவாழ்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சிதம்பரசுவாமிகள்.

திருவாய்மலர்ந்தருளிய

# நெஞ்சுவிடு தூது.

## காப்பு.

தஞ்சமென்றோர்க் கின்பந் தருகுமர தேவன்மே
னெஞ்சுவிடு தூது நிகழ்த்தவே - விஞ்சும்
பழமலைவா மூழத்துப் பாழிமத வேழக்
கழலிணைவா ரீசமே காப்பு.

## கலிவெண்பா.

பூவாய்த்தகற்பகப்பூம் பொங்கரிடத்திற்சிறந்தோன்
றூவாய்த்தசெங்கமலத் துள்ளிருந்தோன்-மாவாய்த்த (௧)

மார்பகத்தோனுகமுற்றோர் வஞ்சகக்கூற்றைக்கடந்த
சீர்மிகுத்தகாயத் திறன்முனிவோ-ரேர்மிகுத்த (௨)

மாணிக்கப்பைவிரித்து வாழூரகர்பாருறைவோ
ராணிப்பொன்போன்றமறை யாகமங்கள்-பேணி (௩)

யுருவேயருவே யொளியேவெளியே
யருளேயருளே சிவமே-பொருளேயென் (௪)

றேத்துஞ்சகசொருப மின்னருளேயோர்வடிவாய்
நாத்துதிசெய்பேரு நயந்தருளி-தீர்த்தனென (௫)

வந்தபிரானுயேன் மலதிமிரம்போக்குதற்கென்
சிந்தைகுடிகொண்ட செழுஞ்சோதி-வந்தனைசெய் (௬)

யன்பர்க்கெளியா னதிகரேயாயிடினும்
வன்பர்க்கரிதாய மாணிக்க-மன்புக்கு (எ)

மந்தரமேமத்தாக வாசுகியேநாணைக்
சந்திரன்றாணுக்கடலே தாழியா-வந்தரர்தம் (அ)

வன்பிற்கடைய வருமமுதம்போன்றெழா
தன்பிற்பெருகியெழு மாரமுதந்-துன்பத் (கூ)

திரையாழிவீழ்ந்தவரைத் தீதறியாமுத்திக்
கரைமேல்விடுக்குமொருகப்பல்-விரவிவரு (க0)

மாகமேயாதி யநேகபிரபஞ்சமெலா
மேகமாய்க்காட்டு மெழிற்சித்தன்-மாகசுர (கக)

ரேமாக்கவெம்மனே ரியாருமிருமாக்கக்
கோமாக்கருணைமழை கூர்மேகம்-பாமரருங் (கஉ)

கண்டபொழுதேதகசிந்து கசிந்துள்ளுருகித்
தொண்டுசெயமேவுஞ் சுவைக்கரும்பு-பண்டு (கங)

பிரமனகந்தை பிறங்காதடங்கப்
பரமவொளியாய் படர்ந்து-சிரமணந்த (கச)

கோடிபடைத்துக் குலவுலகெலாந்தானாய்
மூடிநிலைபெற்ற முதுகிரியா-னீடிக் (கரு)

குறிஞ்சியுணின்று குறவர்குடில்சாடி
மறிந்துவிழமாலியானை மாய்த்துச்-செறிந்த (கசா)

வகிலுங்கழையுணியு மந்திரையாலுந்திச் .
சிகிநிறச்செம்பாலைவெப்பந் தீர்த்துப்-பகாரிய (கஎ)

முல்லைபுகுந்து முடைகெழுமுமாய்ச்சியர்தம்
மல்லையொத்தமுல்லை பறித்தெறிந்தங்-கொல்லை (கஅ)

தயிர்ச்சாடிமத்துடனே தாங்கிமருதத்
தியற்பள்ளரார்ப்ப வெழுந்து-வயற்புடைக (ககூ)

ளேரிகுளங்க ளெலாநிறைத்துநெய்தநிலஞ்
சாரவெழுந்து தகும்பரவர்-சேரும் (௨0)

வலைமலையெலாந்துணித்து வன்படவுதள்ளிக்
குலவுகடலோடுறவு கொண்டு-நிலவுலைய (௨௧)

மாழமொடுநீள மளத்தற்கரிதாகி
யேழ்கடல்வெள்ள மெனச்சிறந்து-மூழ்குமவர் (௨௨)

தம்மையழுக்கறவே தான்றுடைத்தலன்றியுயிர்
வெம்மையழுக்கு மிகத்துடைத்து-செம்மைதரு (௨௩)

வீட்டின்பவெள்ளத்து மேன்மைபெறவேமூழ்க
காட்டுமணிமுத்தா நதியுடையான்-மீட்டரிய (௨௪)

மெத்துகடமாதி வெறும்பொய்க்கதிட்டானச்
சத்தெனுமோர்மேன்மைத் தகுகாடன்-மொய்த்து (௨௫)

ரும்பேருருவமாய் மன்னுபொருளெல்லா
மொரீருங்கேசுகமான ஊரான்-விரும்பியமெய்ப் (௨௬)

பத்திப்பழவடியார் பைந்தமிழ்ச்சொன்மாமலரால்
வத்திக்கக்கட்டுபா மாலையான்-முத்திபெற (௨௭)

வோரறிவுகாணுமிடத் தொன்றென்னுஞ்சுட்டாது
சீரறிவாய்நின்றமனச் செம்பரியா-னோர்மருவு (௨௮)

பக்குவகான்கானபெரும் பாதங்கள்சோதிதர
மிக்கமறையாகமமாம் வெண்மணிகொண்-டுக்காத (௨௯)

விச்சைஞானங்கிரியை யென்னுமுத்தானம்பொழிந்தங்
கச்சமறத்துறந்த வாசையறற்-றச்சமது (௩0)

கோடாகவேந்திக் குளிர்கருணைமெய்யுணர்வாம்
வீடாதகண்கண் மிகவிழித்துச்-சேடா (௩௧)

ரிரண்டற்றவத்துவித மென்னுங்கைநீட்டித்
தெருண்டதவம்பத்திச் செவிகொண்-டிருண்டபெருந் (௩௨)

தத்துவசாலங்களென்னுஞ் சாற்றுங்கவளமுண்ட
சுத்தமெனுஞ்சீர்வாய் துலங்கவே-பொய்த்த (௩௩)

கருமவீக்கூட்டங் கடியாதுவீசுந்
தருமமாநல்வா றயங்க-வொருமையிலா (௩௪)

வாறுசமயக் குருடரறியாத
வீறுபரிபூரணமா மேனியுடன்-கூறுமலம் (௩௫)

போகமுனிந்துயிரின் போதமழித்துத்தோன்று
மாகமிகளைத்து மறிவாணையான்-றாகமுடன் (௩௬)

வந்துதனையடைந்தோர் வன்பவநோய்தீர்ப்பதற்கே
யந்தமறக்கட்டு மருட்கொடியான்-சந்ததமுஞ் (௩௭)

சேமநிதிபோற்றிகழ்மறை நான்கிற்சிறந்த
சாமமறையூர் தகுமரசோன்-காமர்செறி (௩௮)

கஞ்சனும்வேளுங் கடுங்கூற்றுந்தன்னடியார்க்
கஞ்சநடாத்துதிரு வாணையான்-விஞ்சியபே (௩௯)

ரின்பமுளந்ததும்ப வெல்லோருங்கொண்டாடு
நன்குமரதேவனெனு நாமத்தான்-மன்பயிலுஞ் (௪௰)

சாதனநான்கானபெருஞ் சம்பத்தைக்கைப்பிடித்து
மாதனமாதர் மனை துறந்து-தீதறுசீ (௪௧)

ருள்ளிருந்தஞானம் புறனுமுதித்தாங்கு
வெள்ளைநிறநீறணிந்து மேனியெலாங்-கள்ளமுறு (௪௨)

காமனைவென்றதிருக் கண்ணிற்பிறந்தகனல்
யாமவனைவெல்வதற்கீ தாமென்று-தாமறுசீ (௪௩)

ரக்கமணிமாலை யதுதரித்துமவ்வுருப்பின்
மிக்கபணியாய் மிகப்பூண்டு-தொக்கபகை (௪௪)

கொல்வார்மஞ்சற்றேய்த்துக் கூறைகொளுமாறவித்தை
வெல்வூன்கருதும் விருதாக-நல்லசெக்கர் (௪௫)

காவிதோய்துண்டங் கருதுமுழநான்குகட்டி
மேவுகருவிப்படையை வெல்வதற்கு-தாவிலாக் (௪௬)

கச்சைகட்டினாற்போ கனவுதரபந்தனமே
லெச்சமறக்கட்டி யிடர்ப்பிறவி-யச்சம் (௪௭)

பிரிந்தவெனக்காட்டுமொரு பெற்றிபோற்றோன்றுய
விரிந்தசடையின்றாழ விட்டு-திருந்து (௪௮)

றுயிரங்கமீதி லுயர்பரமலிங்கஞ்
செயலறவேதோன்றுந் திறம்போற்-பயனார் (௪௯)

மருமத்திலிங்க மகிமையுடன்றாங்கிக்
கருமத்துரிசு கழன்றே-யொருமித்த (௫0)

நெஞ்சுடனேவீடுதொறு நீடுபிச்சையேதெனினும்
வஞ்சமறவேகரத்தில் வாங்கியுண்டு-விஞ்சுங் (௫௧)

குருபரனாமக் குமாரதேவன்பாற்
றிருவடிபெற்றஞ்ஞானந் தீர்ந்தே-யுருநாம (௫௨)

முள்ளவெலாஞ்சத்சித்சுகமாவொருங்குணர்ந்து
தெள்ளியபேரின்பவெள்ளந் தேக்கியே-விள்ளலிலா (௫௩)

தெல்லாஞ்சிவமாய்க்கண் டேபெற்றமாதவரு
மல்லார்திருவுடனே வாழ்ந்தாலு-நல்ல (௫௪)

விடையன்பாற்கும்ப மிருஞ்சென்னிதாங்கித்
தொடருமறிக்குட்டி யுடன்றோற்பை-புடையெடுத்துக் (௫௫)

கம்பளந்தண்டாதி கைக்கொளினுமச்சென்னிக்
கும்பமிசைநெஞ்சுவைத்த கொள்கைபோ-லெம்பிரான் (௫௬)

றாளிலேநெஞ்சுவைத்துத் தாங்கும்பிபோனடிக்கு
மீள்கிலாவன்புடைய வித்தகரு-மாளாத் (௫௭)

தகைமையுடையோராய்த் தக்கபணிசெய்தே
யகமுமுகமுமலர் வாருஞ்-சுகசொருப (௫௮)

மொன்றென்றேசொன்னா லுலகமேதென்றிடவே
நின்றபழுதையிடை நீளரவ-மன்ற (௫௯)

வுதிக்குமாறப்பொருளி லுண்டாமென்றோத
விதித்தபழுதை விளங்கின்-மதித்தபாம் (௬0)

பேகுமதுபோ லெழிற்சிவங்கண்டும்மூலக
மோகாதிதோன்ற லெலனையென்ன-மோகமறக் (௬௧)

கானலினீரில்லையெனக் கண்டுநீர்தோன்றுதல்போ
வீனமில்பொய்யாத்தோற்ற மென்றிசைப்ப-வான (௬௨)

பழுதையினிற்பாம்பும் பகர்கானனீரு
மெழுமோதகையை யிவைதாங்-குழுமியே (௬௩)

நானாவாயோர்பொருளி னண்ணுவதேதென்றிசைப்ப
வானாதபொன்மண்ணி லாபரணா-நானா (௬௪)

கடமாதிதோன்றுமொரு காரணம்போற்றோற்றுந்
திடமாநீகாணென்று செப்பத்-திடவா (௬௫)

னொருவன்றொழிலா லுளவாமிவைதா
மருவுமிவையாவ ரால்வந்த-துரையெனவே (௬௬)

விண்ணிணிடைப்பீலி வெயிற்குஞ்சர்தோன்றுவபோ
னண்ணுமெனவே நயந்துரைப்ப-வெண்ணுமவை (௬௭)

பற்பலவானாலும் பகருருவொன்றுமிலைதாக்
துப்புடைகாணவுருவாய்த் தோற்றுவதென்-செப்புகெனச் ()

காந்தருமாநகர்போற் காணெனவேயர்ககர் தான்
போந்தவிவகார மின்றாய்ப்பொய்யாகு-மெய்ந்த (௬௯)

விவற்றுள்விவகார மெய்வதெவனென்னக்
கவற்றுள்கனவுவி வகார-நவிற்றுதல்போ (௭0)

லாமென்றுரைப்ப வதுவினைவின்வாதனையாக்
தோமுறுபொய்வாதனைதான் றாய்தாய-சேமப் (௭௧)

பொருட்கேதெனவந்தப் பூரணத்திற்றோன்றுந்
தருக்கவினைவாகுந் தானென்-றுரைப்ப (எ௨)

வதற்குவினைவெழுமோ யாதென்றுகேட்பக்
கதித்தகனவிலை கண்டா-யிதைப்பொய்யென் (எ௩)

றன்னதுகேட்டி யுளஞ்சற்றசைந்தக்கான்
மூன்றும்பரமுயிர்கண் மொய்த்தெழுந்த-மன்னு (எ௪)

வுலகமிவைதோன்று முளமிறந்தாலிந்தக்
கலகமெலாம்பொய்யாய்க் கனவை-யிலகியதோர் (எ௫)

மெய்யொன்றேயாகு மிளிருமுளத்துருவ
னையாவுருவமொடு நாமமாம்-பொய்யுளந்தா (எ௬)

னுன்னினைவுதீதென்றே யூகத்தானோக்குமிடத்
தந்நினைவுநாமவுரு வாகுங்க-ணந்நினைவு (எ௭)

கோடிகணத்திற் குதித்தெழலாலிவ்வுலகு
நாடற்கருவுருவ நாமமாய்ப்-பீடுபெறத் (எ௮)

தோற்றுவினைவைத் துணித்தாற்சற்சித்சுகமே
மாற்றற்கரிதாய் வயங்கலுறுஞ்-சாற்றுமிதா (எ௯)

லுள்ளமேயிவ்வுலகா மிவ்வுலகேயுள்ளமா
முள்ளமலாதேயுலக மொன்றில்லை-யுள்ளே (அ௦)

மதுரந்தருஞ்சாத்தன் வன்கோயின்முன்னே
சதுரங்கமாபலமாத் தங்குங்-குதிரைகரி (அ௧)

தேராளுளும்பெயருஞ் செப்பியபேர்கொள்ளுருவு
தேராதுபொய்யென்று நீக்கியே-தேருமிடத் (அ௨)

துற்றிடுமுக்காலத்து முள்ளமண்ணேமற்றெல்லாம்
வெற்றவெறும்பொய்யாய் விடுமிவ்வபோற்-சொற்ற (அ௩)

பெயருருவமானவெல்லாம் பேணாதுநீக்கிற்
செயிரறுசித்தொன்றே திகழு-மியல்பாங் (அ௪)

கடலிற்றிரைநுரை காண்டிவலைமொக்கு
ளிடமுற்றெழினு மிதுபொய்-திடமுறமெய் (௮௫)

யாவதெதுவென் றறியுமிடத்தப்பொருளின்
மேவுதிரைநுரை வெண்டிவலை-தாவியெழு (௮௬)

மொக்குளெனும்பெயரு மொழிபெயர்கொள்ளுமுருவு
மொக்கவெறும்பொய்யா முருசியுடன்-றக்க (௮௭)

நெகிழ்ச்சிகுளிர்ச்சிமய நீரொன்றேமெய்யாம்
பகுக்குமவைபோலப் பாரிற்-றொகைக்கரிதாய்க் (௮௮)

காணுமுருநாமங் காணாதுபொய்யாகு
மாணுறுசற்சிற்சுகமே வாய்மையாம்-மாணா (௮௯)

இருப்பதுசத்துச்சித்தா லெண்ணுருவநாம
மிருப்பதுபோற்றோன்றும்வே றில்லை-யுரைப்பரிதாய்த் (௯0)

தோன்றுதல்சித்துச்சித்தாற் றோன்றுமுருநாமந்
தான்றனித்துத்தோன்றுவது தானில்லை-யான்றசுகந் (௯௧)

தானேயுளதிதனாற் றங்குமுருநாம
மானசுகம்போ லணுகியிடு-நானேத (௯௨)

வேறேதுமில்லை விரிதிரையாதிகடாங்
கூறுசலமொன்றே குறிக்குங்காற்-றேறிற் (௯௩)

பொருளொன்றேயாகும் புனிதமுறுநெஞ்சாற்
றெருளொன்றிக்காணென்று செப்ப-வருளொன்று (௯௪)

நெஞ்சுடையரென்று நிகழ்த்திவழுத்திப்பணிந்து
தஞ்சமெனப்பொருந்திச் சார்வாரு-மெஞ்சலிலா (௯௫)

தெம்மருங்குஞ்சூழ்ந்துவர வின்னியங்களைவகையின்
சும்மைக்கடலின் றொனிகாட்ட-மெய்ம்மைதரு (௯௬)

மோரார்பரிபுரண வின்போர்வடிவாகிப்
பேரோதவந்த பிரான்வந்தான்-சூரான் (௯௭)

மிடியாயிருள்போக்கு மேதகையான்வந்தான்
வடிவாலுவமையிலான் வந்தா-னடியார் (கூஅ)

பவத்துயரைமாற்றும் பரிந்துவந்தான்வந்தான்
றவத்தலைவர்சற்குரவன் வந்தா-னுவக்கு (கூகூ)

முதுகிரியான்வந்தான் முகிலனையான்வந்தான்
வதிசவுறுபேரின்பன் வந்தா-னதிக (க00)

கவிராசர்போற்றுங் கனகழலான்வந்தான்
றவிராததண்ணளியான் வந்தா-னவியாத (க0க)

ஞானகிரணமுறு நற்சூரியன்வந்தா
னீனமொன்றுமில்லா விறைவந்தான்-றேனனைய (க0உ)

நற்குமரதேவனெனு ஞானபரன்வந்தானென்
றெற்பெருகுசின்ன மெடுத்தியம்பச்-சொற்பிரமன் (க0ங)

முன்னேரனமாய் முடிகாணணீண்டிரண்டே
ழன்னமாக்காண்குவலென் றங்கெழல்போல்-பொன்னார் ()

கவரிபுடையிரட்டக் கண்டோர்க்கிவனே
தவரில்லையில்லையென்று சாற்று-முவமையா (க0டு)

வாலவட்டம்வீச வடியார்களங்கநோய்
சாலவொட்டாதோட்டுந் தகைமையா-யேலு (க0சு)

மெனதுகளங்கமுந்தி ரென்றிந்துவந்து
தனதுபணிசெய்யுந் தகைபோ-லினமருவு (க0எ)

முத்துக்குடைநிழற்ற முத்திபெறவேண்டுமென்றே
ரித்திசைவாரீர்வாரீ ரென்றென்று-மொய்த்து (க0அ)

கரத்தாலழைப்பதுபோற் காணுர்கொடிக
ளுரைத்தாற்போலெவ்விடத்து மோங்க-வுரைப்பரிய (க0கூ)

மெய்யர்கரமாமேக மென்மலர்களாம்பெரிய
துய்யமழையெங்குஞ் சொரியவே-செய்ய (கக0)

மறைமுடிவுகாட்டு மணியேயெமது
குறைதவிரவந்தபெருங் கோவே-நிறையு (ககக)

மதியேசெழும்பாகே வானமுதேநீரோ
நதியேயுலகுயிர்க்கோர் தாயே-கதியேயெந் (ககஉ)

தாதையேசெந்தருவே தண்ணளியேநாயடியேன்
றீதையேபோக்குமிருந் தெய்வமே-யேதுாட் (ககங)

டிமிரதிவாகரனே செய்யமுதுகுன்றிற்
குமரதேவேயென்று கூறித-தமிழ்தெரிந்த (ககச)

வந்திகர்பல்லாண்டிசைப்ப மாமசரதோரணமுஞ்
செந்திருவுமோங்குந் திருமறுகி-லந்தணளி (ககரு)

மோனந்தயங்கி மொழிபொருளெல்லாந்தாஞ
மானந்தபோதகமீ தாங்கேறித்-தானக் (ககசு)

சவங்கள்சிறப்பத் தநதுமரதேவ
னுவந்துபவனிவர வுற்றே-நவஞ்சேரு (ககஎ)

மவ்வீதியுள்ளோ ரனைவோரும்வந்துவந்து
செவ்விபெறவே செறிந்தெங்குந்-தீவ்வாத (ககஅ)

விம்மேனிகொண்டதிவ னெம்மனேருள்ளிருந்த
பொய்ம்மையறவென்றே புகழ்வாரு-மெம்மானே (ககக)

யோர்வடிவுகொண்டதிது வுண்மையாமெங்கனெனி
லேர்வடிவாற்காணலா மென்பாருக்-தேர்வரிய (கஉ0)

பூரணமாகோத்குவிழிப் புண்டரிகனென்பாரு
மேரிணங்குபேரின்ப னென்பாருஞ்-சீரிணங்கு (கஉக)

கற்றோர்க்கினிய கரும்புகாணென்பாரு
முற்றுனெமக்கிவனென் றோர்வாரு-முற்று (கஉஉ)

விளமையானேனென்பாரு மெம்போல்வார்க்குற்ற
வளமையுானென்பாரு மாகிப்-புளகமுடன் (கஉங)

கொள்ளப்பணிந்தவர்கள் கொண்டாடும்வேலைதனி
னள்ளத்தமியேனு நண்ணியே-விள்ளாது (௧௨௪)
மின்றிரண்டுமொய்த்ததொரு மேன்மைபோலேமிளிருந்
தென்றிரண்டுபின்றாழ்ந்த செஞ்சடையு-நன்றிதரு (௧௨௫)
மூன்றுபிறைநிரையா மொய்த்ததெனப்புண்டரஞ்சே
ரான்றதிருநெற்றி யழகிணையுந்-தோன்றுந் (௧௨௬)
தூளக்கமிலாமதிபோற் சோதிமுகமும்
வளக்கமலநோக்கிணையின் வாகுங்-கிளக்குமறை (௧௨௭)
யஞ்சமுதித்தங்கழகு தருநாசியையும்
விஞ்சோர்மொழிமலர்வாய் மென்னகையுந்-தஞ்சமுறு (௧௨௮)
மந்தரமோரிரண்டின் மாமுடிமேலோரிரண்டு
சுந்தரபானு துலங்குவபோற்-சந்தமுறுங் (௧௨௯)
காதிணையிற்பூண்ட கனகசெப்புக்குண்டலங்க
ளதறவேகாட்டுமிரு திண்புயமு-மோதவிடம் (௧௩௦)
போக்கியிளிறும் புனிதத்திருமிடறு
நோக்கிணைக்கின்பென்ற நுவன்மார்பு-நீக்கரிதா (௧௩௧)
மையந்திரிவகற்றி யச்சமறவிச்சயஞ்சொற்
செய்யமுறைகொண்ட இருக்கரமு-மையனுறு (௧௩௨)
சீவபரமிரண்டுந் தேருமிடத்தேகமென்று
மேவியசின்முத்திரைகொண் மென்கரமுந்-தாவிலாச் (௧௩௩)
செக்கர்வானம்பவளச் செம்மலையைச்சூழ்ந்ததுபோற்
றக்காவித்துகில்சேர் தண்ணிடையுந்-தொக்கவதின் (௧௩௪)
மேலொருமின்சூழ்ந்து விளங்குதல்போலத்திகழு
மேலுதரபந்தனத்தி னின்னழகுஞ்-சாலவே. (௧௩௫)

MAHAMAHOPADHYAYA,
… NATHAIYAR LIBRARY.

பற்றிவிடாத பழவடியார்க்கின்பவெள்ளம்
வற்றாதளிக்கு மலர்ப்பதமு-நற்றவரு (க௩௬)
மாணிக்கமால்வரைமேல் வண்சேபோர்த்ததுபோற்
காணத்திருநீற்றுக் காப்பணிந்தே-யாணிப்பொன் (க௩௭)
மேனியையுமம்மேனி மீதிலேயக்கமணி
யாளியிலாலிங்க மமைத்ததையு-நானோதக் (க௩௮)
கண்ணினைக்கோரின்னமுதாக் கண்டுபணிந்தேத்தி
யுண்ணினைவுதோன்றா துறுபோதி-லெண்ணவொணா (க௩௯)
மெய்யரெலாநிற்ப வினையேனைத்தானோக்கி
யையனருண்மாலளித்தா னன்றுமுதற்-றுய்ய (க௪0)
வவன்றருமின்பம்பெறவே யாசைமிகக்கொண்டே
னுவந்தவன்பாற்றூதுவிட வுன்போ-னிவந்த (க௪௧)
கடல்சூழுலகனைத்துங் காண்கிலேனெஞ்சே
யிடல்போக்குந்தூதாநீ யின்றுத்-திடமாகச் (க௪௨)
செல்லவேவேண்டுஞ் சிறியேனுயிர்த்துணையே
நல்லவெனக்குதவு நாயகமே-புல்லறிவா (க௪௩)
னேயென்பிறந்திறந்த நாளெல்லாமென்னுடனே
நீயேபிரியாது நின்றதனா-னீயேயென் (க௪௪)
றாதையுந்தாயுந் தமரும்பெறுநட்புஞ்
சூதையேசெய்வார் துணைவரோ-நீதயவா (க௪௫)
யென்பாலொருமித்திங் கேகாந்தமாயிருந்தா
னுன்போலுமென்போலு மொப்பாரா-ருன்பெருமை (க௪௬)
யாகமமுமாரணமு மானபலகலையு
மியோகிகளுந்தாமே யுணாக்குங்காண்-மோகக் (க௪௭)

கருத்தடங்கின்முத்தியது கையகலிற்கட்டென்
றுரைத்ததரனுமைக்கென் றுன்னி-விரித்து (கசஅ)

புகழ்ந்ததலவே புகலரியநெஞ்சே
மிகுந்தபிறப்புவீ டென்னுந்-தகுந்தொகைக்குக் (கசகூ)

காரணமுநீயே கருதுமுலகமெலா
மேரிணங்குநின்னையல்லா தில்லைகாண்-பாரிணங்கு (கரு0)

நீசற்றசைந்தா ணிகழுமுலகாகு
நீசற்றுந்தோன்றாது நின்றக்கான்-மாசற்ற (கருக)

மெய்ச்சிவமேயாகு மிளிருமிதாலுன்பெருமை
யச்சிவந்தானே யறியுங்காண்-மெச்சு (கருஉ)

முறவாலுயர்வா லுனைப்பேசவெனக்குச்
சிறிதாருளரதனாற் பேணி-யறவாழி (கருங)

யானகுமரதேவன்பா லன்புடனே தூதுசெல்ல
நான்கருதியுன்பா னவிற்றினே-னியான்புகலு (கருச)

மவ்விறைவனென்று மமருமிடஞ்சொல்லக்கேண்
மௌவன்மணக்கு மலர்ச்சோலை-செவ்விதரு (கருரு)

முத்தாநதிசூழ் முதுகிரியாமாங்குநீ
வித்தாரமாய்ச்செல்லு வேலைதனிற்-கத்துஞ் (கருசா)

சமயரெனும்பொய்வேடர் தம்மைமிகநாடி
யமருமுறவாமென் றணுகேல்-கமைவி (கருஎ)

லரிவையர்தாமென்றியம்பு மாமாவைநாடேல்
கருதுவிடயமெனுங் கானின்-மருவு (கருஅ)

நெறிதப்பிப்போயதனு ணின்றுமயங்கேல்
பொறிமத்தமாவொடுபோ ராடேல்-செறிவுற்ற (கருகூ)

காமமெனும்பங்கத்திற் காலிடேல்கோபமெனுந்
தூமவழன்மிதித்துத் துள்ளியிடேஞமவுரு (௧௬௦

முன்பின்புடைபெயர்ந்து முன்னிநோக்காதேயி
யன்பெலாமோருருவே யானவரு-மின்பமய (௧௬௧

மாகியிருப்போரு மரியதவச்செல்வர்களு
மேகமெனுந்துணிவை யெய்தினரு-மோகமறு (௧௬௨

வீரசைவநாயகரும் வேதமுனிவரரு
மோராகமசைவ வுத்தமரும்-பாரோரு (௧௬௩

நாற்றிசையுஞ்சூழவவர் நாப்பணுடசேசூழ
மேற்றிகழுமிந்து விளங்குதற்போற்-போற்றுங்

குமாரதேவென்னு ங் கோமானிருப்ப
னமாவென்றவன்சபையைநாடி-யெமாலன்பு (௧௬௫

தன்னடிக்கீழ்வைக்கத் தருகருணைசெய்தானைப்
பொன்னடியென்சென்னி பொறித்தானை-மன்னு (௧௬௬

பவளமலையுபய பாரிசத்துஞ்செம்மை
திவளருவிதூங்குந் திறம்போ-னவமார் (௧௬௭

கழுநீர்த்தொடையல் கலந்தபுயத்தானை
வழுத்தபாமாலை மன்னைத்-தொழுவார்க்கு (௧௬௮

வேண்டியவேண்டிய வெல்லாமிகவளிக்கு
மீண்டியதெய்வ மிருத்தருவை-மாண்டறியா (௧௬௯

வானந்தசெல்வ மளிக்குஞ்சிந்தாமணியை
வானந்துதிக்கவரு மாதவத்தை-தீனனே (௧௭௦

னேதுபிழைசெய்தாலு மேழையேனுங்கிரங்கித்
தீதனிவனென்னாத தெய்வத்தை-யோதும் (௧௭௧

---

! நமா என்பது நமஸ்காரம்.

பழமலையான்பாகம் பதியாவிளமை
யழகுடனேவாழுமுமை தம்மை-வழுவாது (௧எ௨)

நாதசச்சிதானந்த சாகரத்தினூடாடுஞ்
செந்திருவாழுங் குமரதேசிகனை-சிந்தைநீ (௧எ௩)

பொன்னேமரகதமே பூரணமேயாரணமோ
யன்னேமுதுகிரியா ராரமுதே-மன்னேயென் (௧எ௪)

றேத்திப்பணிந்தங் கெழுந்துகரஞ்சிரமேற்
சேர்த்துபின்கைகட்டிச் சென்றுநின்று-தீர்த்தனை (௧எ௫)

யுன்பவனிகண்டங் குனதுகடைக்கண்ணோக்க
மன்புடனேபெற்ற வரிசைவதா-னின்பப் (௧எ௬)

பெறுவதலாலவித்தைப் பேரிருளில்வாடி
யுறுவளோயாவு முதிக்கச்-செறியும் (௧எஎ)

பகுதியெனும்பௌவத்துப் பாடொலியினாலே
மிகுதிவருந்துவளோ மேனி-யகமென்னு (அ௧எ)

மூலவகங்காரமெனு மூரிமதவேளினாற்
சாலமயங்கத் தகுவளோ-கோலியே (௧எ௯)

கத்துசமயக்குயிலின் காரொலியாலானந்த
நித்திரைபண்ணாது நிகழ்வளோ-சுத்தமுறுஞ் (௧அ0)

சாத்திகமாயையெனுஞ் சந்திரனால்வெம்புவளோ
காத்தாள்வாய்மற்றிவளைக் காணென்றே-யாத்தன் (௧அ௧)

றிருவடியில்விண்ணப்பஞ் செய்துவணங்கி
யிருமைதருமிவ்வுலக மெல்லா-மொருமைபெறு (௧அ௨)

பேரின்பமாகியென்றும் பேராதிருந்தவிந்தச்
சீரின்பநாயேன் செறிந்தோங்கத்-தாரன்பா (௧அ௩)

யின்றிவளுக்கீத லெழில்வள்ளாலென்றியம்பி
நன்றெனவேசம்மதிப்ப நன்குரைத்து-மன்றலுறு (௧௮

சற்குமரதேவன் றருங்குவளைமாலைநெஞ்சே
யிற்பெறவேவாங்கிவா வின்று. (௧௮

## ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள் நெஞ்சுவிடுதூது

## முற்றிற்று.

—:0:—

## துதி.

எவ்வுயிர்க்குந் தாயா யிருந்தின் பமுதளிக்குஞ்
செவ்வி தரு சற்குமர தேவன்பா-லவ்வியந்தீர்
நெஞ்சமே செங்குவளை நீண்மாலை வாங்கிவரச்
செஞ்சவே தூதாகிச் செல்.

ஸ்ரீ-குமாரதேவாயநம:

4050

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகுமாரதேவர் அருளிச்செய்த

சாத்திரங்கள் பதினாறனுள்

முதலாவது

# மகாராஜாதுறவு.

## பாயிரம்.

[கணபதிமுதலிய ஐவர் வணக்கம்.]

அமரர்கள்பரவுந் திருமுதுகுன்றி லாழத்துப்பிள்ளையைச் சிகரிக், குமரசற்குருவையிமகிரிராஜ குமாரியாய்பெரியநாயகியை, *மும லமுமொருங்கே யகற்றிடுமுக்கண் முதல்வனைச் சாந்தநாயகனை, கம தெணப்படியே முடிந்திடத்தினமு நாடிநின்றிறைஞ்சி வாழ்த்திடுவாம். (க)

[முக்குருவணக்கம்.]

மறைமுடிவதனில் விளங்கிடு மொளியே மனிதனாப்போலவந் தெனது, சிறைதவிர்த்தாண்ட சிவப்பிரகாச தேசிகன் றன்னைமற்ற வன்றன், நறைமலரடியைப் போற்றிடுஞ் சாந்தநாயகன்றன்னை மற்ற வன்றன், நிறையருள்பெற்ற பழனிமாமுனியை நெஞ்சினுளிருத்தியேபணிவாம். (உ)

---

* ஆணவம், காமியம், மாயை ஆக - ௩.

[ஆழத்துப்பிள்ளையார் துதி.]

தொய்யின்முலைக்கோ டிரண்டுகவான் றுதிக்கைமூன்று விழி
ரிசில், துய்யசைவ முதன்மதமூன் றுலங்கவரு மொண்பிடியுலக
உய்யவுதவுமொருகளிற்றை யுலவாவிருத்தசைலத்தில், வையம்பர
மாழத்து வாழைங்கரனை மனநினைவாம். (௧

[விருத்தாம்பிகை துதி.]

வேறு.

இருட்கலிவலியின் ஞானநன்னெறிக ளிறந்துயிர்கொடு நெ
மேவி, மருட்கொடுகலங்கா வகைகலியென்றும் வந்தணுகாப்பதித
னில், தெருச்சத்திகருணை யுருவதாய்நின்று தெளிவிக்குமிறைவிடெ
ங்குருவோர், அருட்கடல்பெரிய நாயகியுலகுக் கனை முதல்வியை
பணிந்திடுவாம்.

[சபாநாயகர் துதி.]

திங்களார்சடையிற் கங்கைநீர் துளிப்பத் திருந்திழை யுமையு
ங்களிப்பப், பொங்கராவொடுநற் புலிமுனிவர்கண் மால்போதயன
ரர்கள் போற்றத், துங்கநான்மறைக டுதித்திடவைந்து தொழில்வ
ந்திடப் பொதுவதனிற், செங்கழலதிர நடனஞ்செயும் பொருளை
தினம்பணிந்திடரொழித்திடுவோம்.

[சிவகாமியம்மை துதி.]

வேறு.

அருளுருவாயுயிர் கடமக்கன்னையாகி யஞ்ஞானந்தனை யகற்
மலமாக்கி, மருளில்தாய்மெய்ஞ்ஞானமாகு முத்திவாய்த்திடவே க
தருளிவாஞ்ஞை ரேத்த, இருள்கெடவே மிளிருமிருங் கழல்களார்
விறைபுரியுந் திருநடத்தாற் களித்துவாழுந், தெருண்மருவு மறை
ன்கும் பரவுந்தில்லைச் சிவகாமசுந்தரியைச் சிந்தைசெய்வாம்.

[விநாயகர் துதி.]

வேறு.

செக்கர்போன்றொளிர் முக்கட்சிலம்பினை
மிக்கபேரருள்வேலையையோர்கொம்பால்
தக்கவன்பர்க்குதவுந்தருவினை
இக்கதைதனிறைவேறவிறைஞ்சுவாம். (எ)

[சுப்பிரமணியர் துதி.]

வேறு.

கடிகமிழ்கரியகூந்தற்கனிமொழித்துவர்வாய்த்தெய்வப்
பிடிதனக்கோட்டால்வள்ளிப்பெண்கொடிபடருஞ்செய்ய
படிபுகழ்புயமாங்குன்றிற்பாயவணகழுநீர்நீப
மடலவிழ்செழுந்தார்ச்செவ்வேண்மலரடிவணக்கஞ்செய்வாம். (அ)

[அடியார் துதி.]

வேறு.

வண்டுழாயலங்கன்மாயவன்மலர்மேல் வதிந்தநான்முகன் மறை
யறியாத், தொண்டைவாய்ச்செண்டை விழிக்கழைமொழியொண்
டொடியிடையுமையையோரிடத்திற், கொண்டகோனருளைப் பொரு
ளெனக்கருதிக் குலவியசாதனந்தரித்து, மண்டியவடியார்யாவர்மற்
றவர்தாண் மனத்திலுஞ்சிரத்திலும் வைப்பாம். (௯)

[அவையடக்கம்.]

வேறு.

சகரர் தம்வலியையுந்தடந்திரைக்கடல்
அகலமும்பின்புளோரக * ழிலஞ்சிதான்

---

* இலஞ்சி - குளம்.

புகழுறவிளக்கலேபோலவிச்செயுள்
தகைதருகலைஞர்நூறனை விளக்குமால். (௧0)

[நூனுதலியபொருளும், நூற்பயனும், நூலாசிரியர்பெயரும்.]

வேறு.

திங்களொண்கவிகைத் திகிரியந்திணிதோட்டிகழ்கடற் றூனை மாராஜன், அங்கண்மாநிலத்திற்றுறந்து வீடடைந்தவரியவிக்காதை யைத்தமிழால், இங்குமாதவத்தோ ரிசையுமென்றிசைப்ப விசைத்த னவீடுறக் கேட்டோர், கொங்கவிழ்பொழில் சூழ்பழமலையுறையுங் குமாரதேவென்னுமாமுனியே. (௧௧)

[வாழ்த்து.]

வேறு.

சிவன்றிருவுருவாமைந்துசின்மயவெழுத்தும்வாழி
நவந்தருநீறும்வாழிநயனாநன்மணியும்வாழி
கவின்றருங்குமாரதேவன்கழலிணையிரண்டும்வாழி
அவன்றிருவடியார்தம்மோடாருயிரனைத்தும்வாழி. (௧௨)

பாயிரம்-முற்றிற்று.

---

## நூல்.

[நைமிசாரணிய வாசிகளாகிய சவுனகாதிரிஷிகள் மஹாராஜன் சரித்திரஞ்சொல்லும்படிவேண்ட சூதமஹாமுனிவர் சொல்லத்தொடங்கல்.]

### வேறு.

தருக்கிளர் நைமிசாரணியத்திற்றங்கிய முனிவர்கள் சூதன், வரப்பணிந்தேத்திக் கதைகள்பற்பலவாவகுத்துரைத்தனை மஹாராஜன், திருக்கதையெங்கட்குரைத்திலையது நீசெப்பெனச்சுருதியிற் சொல்லுஞ், சருக்கமில்காதை யிதுவெனத்தொகுத்துத் தோமறக்கேண்மினென்றுரைக்கும். (௧)

[இதுமுதல் எ-பாட்டானும் அரசன் சிறப்புக் கூறப்பட்டது.]

குழைத்ததண்சினைத் தேமாவினொண்கனித்தேன் குலவியபலவினற்பலத்தேன், தழைத்திடுகதலிப் பழமுகுத்திடுதேன் றுன்றிரண்டிலஞ்சியிற்றதும்பி, விழுத்தகுவயலிற் பாய்தரவிளையுமிகுகருநாடதேசந்தான், இழைத்தநற்றவத்தாலுயிரெலாம் புரந்தங்கிருந்தரசாளுமோர்குரிசில். (௨)

### வேறு.

மஞ்சமரிஞ்சிசூழ்மாபுரத்திருந்
தெஞ்சலிலெண்டிசையிறைவர்தாடொழத்
தஞ்சமென்றடைந்தவர்தம்மைக்காத்திகல்
வஞ்சகர்க்காய்மஹாராஜமன்னனே. (௩)

### வேறு.

தருநிழலரசவைகுஞ்சதமகன்றிருவின்மிக்கான்
உருவினின்மதனின்மிக்கானுலத்தினிற்பலத்ததோளான்

செருவினிலரியேறன்னான்றேனெடுஞிமிறும்பாட
முருகுடைந்தொழுகுந்தாரான்மூவுலகளிக்கும்வேலான். (௪)

வேறு.

அரசர்வந்திடுதிறையளக்குமுன்றிலான்
முரசுகளனுதினமுழங்குமன்றலான்
கரைபொருதிரையெறிகடலந்தானையான்
அருவரைமார்பினான்யாளிமொய்ம்பினான். (௫)

அரசர்தமமுடியுழுதவிருந்தாளினான்
எரிதவழ்திகிரியையேந்துந்தோளினான்
மருவலர்வலியினைமாற்றும்வாளினான்
தருநிதிக்கொடையினான்றருக்குநாளினே. (௬)

வேறு.

கவரியோடாலவட்டங்காரிகையார்கள்வீசப்
பவளவாயரயலுபயன்னார்பாக[illegible]யுதவமுத்தத்
தவளவாணகையார்கீதந்தனிநடஞ்செய்யநின்று
குவலயமன்னர்போற்றக்குணாகடற்றனைசூழ. (௭)

இந்திரனாலயம்போலிலங்கியமண்டபத்தில்
சுந்தரமிருகராஜன்சுமந்தபூவணையின்மீது
வந்திருந்தவனிதன்னைமனுநெறிமுறையிற்காத்தே
அந்தமில்போகந்துய்த்தங்கிருந்திடுமரசர்கோமான். (௮)

[அரசன் றனக்குப் புத்திரனில்லாமையால்

வியாகுலமுறல்.]

தூம்புடைப்பிறையெயிற்றுத்துத்தியீராயிரந்தோட்
பாம்பினாற்பரிக்கலுற்றபாரினைப்பரிக்கப்பின்னர்

மேம்படுபுதல்வர்கடம்வீறுடைவயிற்றில்லென்று
தேம்படுதெரியன்மார்பின்சிந்தையாகுலங்களுற்றான். (௯)

[இதுமுதல் உ-பாட்டானும் தீர்த்தயாத்திரைமுதலிய
புண்ணியங்கள் செய்தமை கூறப்பட்டது.]

கங்கையேமுதலாமிக்ககடவுண்மாநதியிற்றோய்ந்தும்
பங்கயாசனன்மாறிங்கட்பவளவார்சடையான்றன்னை
அங்கையாற்பூசைசெய்துமதிதிகட்களித்துந்தீயில்
பொங்குமாகுதிகளீந்தும்பூவலம்வந்துந்தேவர். (௰)

ஆலயஞ்சாலையக்கிராரந்தனவனங்கள்
கோலமாரிலஞ்சிகூபங்குளம்பலசெய்துமீரெட்
டேஹீமாதானத்தோடேயிரணியமுதலீரைந்து
சாலந்தானிமீந்துந்தருமமெண்ணான்குசெய்தும் (௧௧)

[இதுமுதல் உ-பாட்டானும் புத்திரோற்பத்தியும் சாதககன்ம
முதலியன செய்தமையுங் கூறப்பட்டன.]

தவம்பலபுரிந்தும்வேந்தன் றனயனைப்பூத்தபின்னர்ப்
பவந்தனைத்துடைத்தேன்மேலாம்பரமநற்பதமுமுண்டென்
றுவந்துசாதககன்மத்தோடொழிவறுகருமமெல்லாம்
நவந்தரச்செய்துநாமமன்மஹாராஜனென்றே. (௧௨)

வேறு.

வேதநீதியிற்கூறுவியன்றா
ஓதவெண்ணெண்கலையுமுணர்த்துவித்
தேதமற்றகுரவற்கிரணியம்
போதுமென்னப்பொழிந்தனன்கொண்டல்போல். (௧௩)

[இரதமூர் தன் முதலியவற்றிற்பயிற்றுவித்தலும், விவாகத்துக்குப் பிரயத்தினஞ்செய்தலுங் கூறப்பட்டன.]

கொடிநெருங்குங்கொடிஞ்சியந்தேர்பரி
கடிமலிர்ந்தகயமொண்சிவிகையிப்
படியிலூரப்பயிற்றுவித்தாசிலா
வடிவிலங்குமகற்குமணஞ்செய்வான். (கச)

[அரசாகளுக்கு விவாகப்பத்திர மனுப்புதலும், அவர்கள் வந்துசேர்ந்தமையுங் கூறப்பட்டன.]

மடங்கலன்னபலமுள்ளமாமன்னன்
இடங்கொளெண்ணெழுதேசத்திறைவர்க்கு
முடங்கல்போக்கினன்கண்டுமுடிமன்னர்
தடங்கொள்சேனைகள்சூழ்வரச்சார்ந்தனர். (கரு)

[இதுமுதல் உ-பாட்டானும் நகரமலங்கரித்தல் கூறப்பட்டது.]

வேறு.

வடிகொள்வெண்சுதையாற் பித்திகைதீற்றி வானுறமணிக்கொடிநிரைத்துக், கடிநறுஞ்சாந்தங்குங்குமந்தன்னுற் கமழ்தரமறுகெலாமெழுகிப், பொடிகொள்சிந்துரத்தாற் கோலமேபுனைந்து பூமலர்பொரிநனிசிதறிக், கொடிகொண்மூதெயின்மேன் மாடமொன்சிகரிகோதறப்புதுக்கிரேகுலவ. (கசு)

வேறு.

கதலியுங்கமுகுநட்டுக்காவணமலங்கரித்துப்
புதியதோரணங்கள்கட்டிப்பொற்குடஞ்செறித்துத்தீபம்
இதமுறவெங்கும்வைத்தேயிந்திரன்நகரம்போல
மதுவலர்த்தாமநாற்றிமாபுரியலங்கரித்தார். (கஎ)

[இதுமுதல் ௩-பாட்டாலும் பெண்ணின் சிறப்பும், விவாகஞ்செய்தலுங் கூறப்பட்டன.]

வேறு.

வில்விலங்குகைவேந்தர்மரபினில்
நல்லசாமுத்திரிகநூலன்கதாச்
சொல்லிலக்கணத்தோடுதுரிசிலா
முல்லைமாலைமுருகுவிரியவே. (௧௮)

வேறு.

மூவுலகதனிலுள்ளமுகிழ்முலைக்கருங்கட்செவ்வாய்ப்
பாவையரெழிலிற்போதன்பகுத்தெடுத்துயிரோடேய
ஓவியந்தீட்டினனென்றுலகினிலுரைக்கச்செய்ய
பூவுறைதிருவிரும்புயபொற்புடனவதரித்தே. (௧௯)

வேறு.

இலங்கியவாலொண் டளிர்குழைத்தினிய விருதனக்கோங்கினையரும்பி, நலங்கிள * ராம்பல் குமிழிரு குவளைகண்ணுசெஞ்சரோருகமபூத்துத், துலங்கிய புயலைச்சுமந்திரு தாளாற்றேமிலாமின்னென நுடங்கிப், பலந்தரப்படருங் கொடியினைவேதப் பண்பினின்மன்றல்செய்வித்தே. (௨௦)

[மஹாராஜனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்தல்.]

அருந்ததிகணவன் முதன்முனிவரர்க ளருமறைக்கிழவர் கடம்மால், பொருந்தியகங்கைப்பூம் புனலாட்டிப் பொன்னவமணிகளாற்

---

* ஆம்பல் - அதரத்துக்கும், குமிழ்-நாசிக்கும், குவளை-கண்ணுக்கும், சரோருகம்-முகத்துக்கும், புயல்-கூந்தலுக்கும் உவமை.

குயின்ற, விரிந்திடுமடங்கன்மென்ற விசேற்றியிளிர் நவமணிமுடிக வித்துப், பருந்தடர்வேலான் பௌவமீர்புவியைப் பரியெனத்தோ ன்றல்பாலளித்தான். (உக)

[மஹாராஜன் மனைவியோடு வாழ்ந்திருந்தனெனச்
சூதமஹாமுனிவர் சொன்னதைக்கேட்டு, இரு
டிகள் பின்னும் வினவச் சூதமஹாமுனி
வர் சொல்லத் தொடங்கல்.]

சோகமேயின்றி யிருந்தனன்வேந்தன் றேன்றலுயபார்பொது நீக்கி, ஏகமாச்செங்கோ லெங்கணுஞ்செல்ல வெண்டிசைவிசயமுஞ் செய்தே, மாகநூடென்னப்போகமேதுய்த்துமடந்தையோடிருந்தன னென்றான், வாகைவேலவன்பினென்செய்தானென்ன மறைவர்க் குயர்முனிவருக்கும். (உஉ)

[இதுமுதல் உ-பாட்டானும் மஹாராஜன்முத்திக்கு ஞானமே
சாதனமென் றுணர்தல் கூறப்பட்டது.]

மனைவியுந்தானு மோர்நினைவாகி மாறுபாடின்றி யோர்காலுந், தனையுணர்யோகி தந்தைதாய் கடவுடங்களை யனுதினமிறைஞ்சி, அனையவருரைத்த நெறிதனினடந்து மருத்தங்கண்மனதினிற்றரித் தும், வினையமதுடனே றான்முறையவரை வினவியுஞ் சிலபகல் போக்கி. (உங)

தனியிடமதனிலிருந்திருவர்களுந் தங்களிற்றுமுணர்ந்துசாவித் துனிசெய்மாமாயைப்பிறப்பதுநீங்கிச் சுகமதையடைந்தனுதினமும் இனிமையதாகவிருக்கலா ஞானத்தென்றெணிஞானிகட்சார்ந்து தனியவர்பாதபூசனைபுரிந்து நாடொறும்வினவினர்நன்றாய். (உச)

[இதுமுதல் ௩-பாட்டானும் அந்தஞானஞ் சற்குருசேவையின்றி விளங்காதெனத்துணிதல் கூறப்பட்டது.]

இருவரிலரசன் றனக்கறிவோங்க * விருவகைச்சார்வையு மகற்றிக், கருவுடற்காவறனையுங்கைவிடுத்துக் கருத்தசையாதுமெய்யுணர்வை, மருவிடிலகப்பற்றற்றுமேல்வீடு வாய்த்திடுமெதற்குமெய்ஞ்ஞானக், குருவருளின்றி விளங்கிடாதெனவே கொண்டனன்மனத்தினிற்றுணிவே. (௨௫)

மனைதனிலாசைபொருந்தியேநின்று ? மகிதனின் ஞானியாமெனவே, தனைமிகமதிப்போன் றன்னைவந்தொருவன் றந்திடுஞானமென்றிரந்து, வினவன்மட்டையினைப் பருகுவோன்றன்னை வேண்டித்தென்னம்பழந்தனையே, இனம்பணித்திரிவோன்புத்திபோன்மெனவே யியம்புவர்முற்றுணர்பெரியோர். (௨௬)

வேதவாகம சாத்திரபுராணங்கள் விளங்கவே கற்றுணர்ந்தவற்றைத், தீதறவெவர்க்குந்தெளிவுறவோதிச் செப்பியவந்நெறியதனிற் சாதகமிலாதகுருவினையொருவன் றானடைந்தானந்தம்வினவல், ஏதமாங்கழுதைதன்னைக் குங்குமத்தினியல்புகேட் டிடுதல்போன்மென்றே. (௨௭)

[சற்குருவையடைந்து விண்ணப்பித்தல்.]

சீவர்களிடத்திலருள்சிவபத்தி திருந்தியதுறவுமெய்ஞ்ஞானம்
ஆவதோர்வடிவாம்வேதமாமுனியை யமலவாரணியத்திலடைந்தே
தேவர்கடேவேதுன்பமோர்காலுஞ் சென்றிடாமுத்திதாவெனய்திச்
சாவதும்பிரப்புநீங்குமோர்நெறியைச்சாற்றெனத்தாழ்ந்திடமுனிவன்.

---

* இருவகைச் சார்வு=உயிர்ச்சார்வு, பொருட்சார்வு; [வைராக்கியதீபம்] ௨௧-வது பாட்டில் காண்க. ? மகி-பூமி.

[சற்குரு மாணாக்கனுக்கு உபதேசித்தல்]

இருவகைச்சார்வாம் புறப்பற்றைநீக்கி யிச்சையின் மீட்டதினினைவு, மொருவியேயுடற்காவலையுங்கைவிடுத்தே யுட்கரணங்கள் வாதனையும், குருவருணெறியேயொடுக்கிடில்வீடுங் கூடுந்தானாகவேபவத்தின், கருவழிந்திடுமிந் நெறியைநீவிரைவிற் கைக்கொண்டுசெல்லெனவுரைத்தான். (௨௯)

[மஹாராஜன் சிலகாலத்தின்பின் தனித்திருந்து
உபதேசமொழிகளைச் சிந்தித்தல்.]

* அந்நெறிகுருவாலையமுந்திரிவு மகன்றிடத்துணிவதாக்கேட்டு, முன்னெறியான வரசியற்கையினின் முயன்றனன்சிறிதுநாளொரு நாட், பின்னெறியதனை நினைந்தனைவரையும்பெயர்ந்திடவிடைகொடுத்தரசன், மன்னெறிக்கோல மகன்றந்தப்புரத்தில் வதிந்தனனொருவனாய்த்தனித்தே. (௩௰)

[இதுமுதல் ௨-பாட்டானும் தன்னைவந்து கண்ட அரசர்
முதலாயினோர்க்கு இனி அரசியற்றலை வேண்டாது
துறவுபூண்டு வீடடைவேனென்பது
கூறப்பட்டது.]

அரசர்களமைச்சர்புரோகிதர்பெரியோ ரனைவருமவ்விடத்தேகி
அரசனைநோக்கிநித்தியகரும மகன்றுவாளாவிருந்திடுதல்
அரசிலக்கணமன்றெனவவர்வேண்ட வவர்களைநோக்கியேவேந்தன்
அரசியற்கையினைவேண்டலனென்னை யறியவேவேண்டினனன்றே.

ஆண்டதோரரசுதனிலும்போகத்து மாசையற்றேனினிவேண்டேன், மாண்டதோர்வனத்தி லொருவனாய்த்தனித்தே மனத்தசைவறுத்துவீடடைவேன், பூண்டவென்மனமிங்கினித்திரும்பாது போ

---

* இப்பாட்டு - மெல்லினவெதுகை.

4050

கத்தைப் பொருளெனவெண்ணி, வேண்டலனீங்க ளரசனுவேறே
விதித்துக்கொளுங்களென் றுரைத்தான். (௩௨)

[இதுமுதல் ௩-பாட்டானும் இராச்சியத்தை விடலாகாதென
மந்திரிமார் வற்புறுத்த மஹாராஜன் இராச்சியத்தின்
றுன்பமும் முத்தியினின்பமு முரைத்தல்
கூறப்பட்டது.]

ஆதியினினது தாதையுநினையே யரசினினிளமையிற்சூட்டத்
தீதின்றியுனது புயவலிமையினிற் செகமதைத்தாங்கினையினிமேல்
நீதியினுணியமதியினுதரவி னின்னைப்போலொருவர்மற்றுளரோ
ஈதியற்கையதன்றிவ்வுடலுடனே யிச்செல்வமன்றிவேறுளதோ.

அலதுநீயேயினவனியுங்காப்பற் றவத்திலேயிலைந்திடும்யாமும,
சலனமதுறுவே மித்தகைமெமைநீ தவிக்கவிட் டேகுதல்கடனன்,
றிலகிடவெமக்கீதருளெனவுரைச்ச ரியமபிடவரசனும்பார்த்தே, உல
கமெய்யெனவெண் ணுறுமதியுடையோர்க்குரைப்பினுமுணர்வுதியா
தால். (௩௪)

இவ்வரசியற்கையற்பமற்றிதனு லெய்திடேர்துன்பினுக்களவின்
றவ்வகையதனை யூகமின்மையினு லறிகிலிர்நீங்களின்பென்றே
எவ்வகைநினைந்தீரினியெக்காலுங்கட் கீதின்பமலதெனத்தோன்றும்
ஒவ்வமற்றிதனுக்கூகமேதோன்று துங்களுக்குலகயூகுதிக்கும். (௩௫)

[மஹாராஜன்துறவறம்பூண்டு நகரைவிட்டுப்போம்போது
நகரத்தார் போய்ப்புலம்பல்.]

என்றும்ற்றனேக மாவிரித்தரச னெடுத்தமைச்சர்கடமக்கியா
ம்பி, நின்றபின்னவரைநிறுமெனநிறுத்தி நிதிதனும்பொன்மனைவிடு

MAHAMAHOPADHYAYA,
... SWAMINATHAIYAR LIBRARY

த்தே, சென்றுபின்னகர வீதியினடக்கத் திரண்டனைவர்களும் பின்
றொடர்ந்து, வன்றுயரடைந்து வாடியேமெலிந்து வாரியினோசையி
னழுதார். (௫௬)

[இதுமுதல் ௨-பாட்டானும் நகரத்தாருடைய துக்கத்தைச்

சாந்திபண்ணுதல் கூறப்பட்டது.]

அவரவர்வினையினவரவர்வருவா ரவரவர்வினையளவுக்கே
அவரவர்போகமென்றதேயாயி னொருக்கார்துணையதாகுவர்கள்
அவரவர்தேகமுளபொழுதுடனே யாதரவாரெனநாடி
அவரவரடைதனெறிகன்மத்தடையு மாதரவாதரவாமோ. (௫௭)

வினையுளவளவுங்கூடியெநிற்கும் வினையகன்றிடிற்பிரிந்திடுமால்
வினையினால்வருமாதரவினியற்கை மெய்யுணர்வத்தனையலவே
வினையிலையுங்களிடத்தினானிருக்க மெய்யுணர்வொன்றையேநாடி
வினையறுகானம்புகுதவேவேண்டி விரும்பினேனீர்விடுமிங்ஙன். ()

[உறவினர்கள் தமதுறவுபாராட்டி அரசனைத்தடுத்தல்.]

எனறுநல்வேந்தனேதிலார்போல வேகினனனைவருங்கண்ணீர்
நின்றெதிர்சொரியவாய்விட்டேயலறி நின்றனர்தமர்கள்பின்னேகி
இன்றெமையாவர்காத்தளித்திடுவ ரினியைநீயேகுதனீதி
அன்றெனவுரைத்தாரவர்களைநோக்கி யரசனீதுரைத்தனனன்றே. ()

[அரசன் உறவும் பகையும் வேறுவேறெனக்கூறல்.]

வேறு.

உறவாகுமெனவெனைநீர் தொடர்பதியல்பன்றாகு முயிர்கட்கெல்லா
முறவாகுஞானநனி பகையாகு மஞ்ஞானமுய்த்து நோக்கி

உறவானவதையடைந்து பகையானவிதைநீங்கியொருமையாக
உறவாதரனக்குத்தானேயென மற்றுறவுவிடுத்துறையுமென்றான். ()

[தாய்தந்தையர் அரசனைத் தடுத்தல்.]

தந்தைதாயிருவருந்தயபுதல்வனெனும் வாஞ்சையினாற்றம்பின்
னேகி, மைந்தவா வெங்களிருவரையுமெவர்காப்பதற்கு வைத்தாய்நீ
தான், சிந்தைதானுனக்கெங்கே மகனேயுன்றிருமுகத்தைத் திருப்பி
க்காட்டாய், நொந்துதான்பெற்றவயிறெரிகின்றதெனவுரைக்க நோக
கிமன்னன். (௪௧)

[அரசன் நீவிர் தாய்தந்தையரன்றெனல்.]

அறிவைநோக்கிடிலதற்குத்தாய் தந்தையிலையிவ்வுடலதனைநோக்கி
லிறையுநீருபாதானகாரணமன் ° றிருமாயையினிலுண்டாகுங
குறியிலாவிங்காயின் மண்ணிலெனைப்பெறு தவறிலை யக்கொள்கைநீரு
நிறையுமதியிலரோநீர் நில்லுமெனவிருவரையுநீத்துப்போனான். (௪௨)

[மனைவி ஆவலுடன்வந்து தடுத்தல்.]

அரிவையர்கடமக்கிலக்கணங்கூறு நூலதனிலதனையெல்லா
முரிமையதாவுடையவளாமினியமனை தொடர்ந்தேகியுருகிநின்று
பரிவினுடனடிகளிற்பணிந்தரற்றியே பதைபதைத்துப்பனிகண்பாயத்
தரியனுமைவிடுத்துலகமதனிலொரு கணமேனுஞ்சாவேனென்றாள்.

[அரசன் நாயகன் வேறெனக்கூறல்.]

நின்னுடையநாயகனை நினதுள்ளேயுறநோக்கி நிற்கமாட்டா
துன்னுடையநாயகனென்றென்றனையே கருதிநீயுழல்வதென்னே
மின்னனையவிடையாய்கேளனைவருக்கு நாயகனோர்மேலாமீசன்
அன்னவனையேதேடிப்போகின்றேனெனவரசற்கரிவைசாற்றும். ()

° இருமாயை=சுத்தமாயை, அசுத்தமாயை.

[மனைவி பெண்களுக்குக் கணவனையின்றிக் கதியில்லையெனல்.]

ஞானமானதுபொதுவேநூலதனிற் றுறவதற்கு நவில்வதில்லா
ஏனமாதினையலவோ விடுகவெனவறையுப்பதியானவுன்னை
ஈனமாவிடுகவென வறையுமதோ துறவறமிங்கெனக்கென்சொல்லும்
ஆனதாலுமையொழிந்து கதியிலையேயெனவெண்ணியானடுத்தேனெ
ன்றாள். (௪ரு)

[அரசன் மறுத்துக்கூறுதல்.]

ஆகமத்தின் விதிதவறுதறைந்தனை நீவிவேகியேயாவாயானும்
தேகமுதற்பிரபஞ்ச மதனினசைவிடுத்துவனஞ் செல்லாநின்றேன்
நாகமுலையாயெனுளாதடுத்தலுன்றன் விரதமலநாடுதன்னிற்
போகுதியென்புவலைவிடுத்தேதில்லைப்பேரலகன்றுபோகாநின்றான்.

[இதுமுதல்-உ-பாட்டானும் மனைவி புலம்பிக்கொண்டு
மாதுலன்வீட்டிற்குப்போய்விடல் கூறப்பட்டது.]

விரிவாயஞானமதை யுணர்ந்தாலு மடந்தைபதிவிலங்க நிற்றல்
அரிதாயதகைமையினுலேங்கியே பதைபதைத்தங்கவனைநோக்கித்
தரியாதுகதறியேவினை தனையே நொந்துதான்றளர்ந்துநின்று
தெரியாதுமறைந்தவிடந்தனின் மிகவுமுருகியேதேம்பிவீழ்ந்து. ()

வேந்தனேயுனைவிடுத்து முலகமதிலிருக்கவோ விதித்தானீசன்
தீர்ந்ததோவுமக்கெனக்கும் வினைதானுமின்றளவிற் சேர்ந்துநிற்கும்
போந்தவுமையெக்காலங்காண்பேனு னினியெனவேபுலம்பிமாதும்
சார்ந்தனள்பின்றிரும்பியேநகரதனின்மாதுலன்றன்சார்புதன்னில்.

---

* இப்பாட்டு-ஆகிடையிட்ட-வெதுகை.

[இதுமுதல் ௫-பாட்டானும் அரசன் வனத்திலே
ஞானியாய்த் திரிதல் கூறப்பட்டது.]

அரசனந்நகர்விடுத்துத் தேசநாடுகளுமகன் றடவிசென்றே
இரவுபகலதனிலையே நிலையாகவிருந்தவர்க ளிடமேசேர்ந்து
பரகுருவினுபதேசத்தரியபொருள் வினவியவர்பகரக் கேட்டுத்
திரமனமாயொருவராற் கலங்காதஞானியாய்த் தீரனாகி. (௪௯)

வேறு.

நகர்தனிலேகிப்பிச்சை நண்ணியேமனைகடோறும்
அகமகிழ்ந்தங்கையேற்றே யவ்விடத்தருந்தியாங்கே
செகமுளோர்பேயென்றெண்ணிச் சிரித்திடநாணமின்றி
இகபரத்திச்சையற்றே யேகனாயுலாவலுற்றான். (௫௦)

பொருந்திவாழிடமொன்றாகிற் பொருந்திடும்பற்றென்றெண்ணி
இருந்திலனோரிடத்து மெங்கெங்குமொருவனாகித்
திருந்தியசமாதிவிட்டுத் திரும்பிடாதுறைக்கவுன்னி
இருந்திருந்திடங்களெங்கு மேகமேநோக்கினின்றான். (௫௧)

தோன்றிடுமுலகமெங்கே தோன்றிடுமென்னநோக்கித்
தோன்றிடுநினைவிலென்றே தோன்றியநினைவுதானும்
தோன்றிடுமிடத்தைப்பார்த்துத் தோன்றிடுஞ்சொரூபத்தென்றே
தோன்றிடும்பொருள்களெல்லாஞ் சொரூபமேயென்றுகண்டான். ()

தோன்றிடும்பொருள்களுண்டாய்த் தோன்றியேயின்பமாகித்
தோன்றிடுமதனாலந்தச் சொரூபமேயென்றுகண்டு
தோன்றிடுஞ்சொரூபந்தன்னிற் றோன்றுமீதசத்தேயென்று
தோன்றிடுஞ்சொரூபந்தானாய்த் துளக்கமற்றிருந்தான்வேந்தன். (௫௩)

கடிநகர்தோறுஞ்சென்றுங் கானகந்தோறுஞ்சென்றும்
படிவலமாகவந்தும் பார்வைமாறுட்டமின்றி
மடிவிலாமனத்தனுகி மாசிலாநிலைமைபெற்று
முடியுடைவேந்தர்வேந்தன் முத்தியேவடிவமானுன். (ருச)

முத்தியேவடிவமான முடியுடைவேந்தர்வேந்தன்
எத்திசைதனக்கும்ராஜ னெமைவிடவேறில்லென்று
சத்தியமாகவெண்ணித் தன்னிடமதனிற்றன்னைச்
சுத்திசெய்தனைத்துமாகிச் சுயஞ்சோதியாகிநின்றுன். (ருரு)

தன்னையேயன்றியொன்றுந் தானுதியாவிடத்தின்
பின்னையேயொத்தவைய மித்தைகற்பிதமதென்றும்
பொன்னையேயன்றிவேறு பூடணமிலதுபோல
என்னையேயன்றியொன்றுமில்லெனத் தேர்ந்தான்வேந்தன். (ருசு)

உலகினைவேறதாக வுணர்ந்திடிற்பந்தமாகும்
உலகினைத்தானேயாக வுணர்ந்திடின்முத்தியாகும
இலகிடத்தோன்றலெல்லா மென்னினைவேயென்றெண்ணி
இலகிடக்கண்டுவேறற்றிருந்தனனிளமைவேந்தன். (ருஎ)

ஏகசக்கரமதாக விருந்தரசாள்வோன்செல்வப்
போகமுந்திரணமாமப் போதநாட்டரசியற்கை
யூகபுந்தியினுலாசா னுபதேசத்தாளவந்தச்
சோகமற்றிடுகோடெய்தித் தொழிலெல்லாமுடித்தான்மன்னன். (ருஅ)

பந்தம்வீடென்றுமில்லை பரம்பொருளொன்றேயென்றும்
தந்தஞ்சங்கற்பத்தாலே சாலமோகிப்பர்தீயோர்
அந்தமாதிகளுமில்லா வரும்பொருணமேயென்று
சந்ததநோக்கியந்தத் தற்பரந்தானேயானுன். (ருகூ)

குறைவிலாநிறைவதாகிக் குளிர்ந்திளைப்பாறிவேந்தன்
இறையளவேனுந்துன்ப மின்றியேயின்பமாகி
உறைவிடமின்னதென்ன வோரிடமின்றியெங்கும்
நிறைவதேயிடமாய்நின்றா னிகரின்மாராஜன்றானே. (௯௰)

எங்குமாய்நிறைந்துநின்ற வேகராச்சியமதாள்வோன்
தங்குதலின்றியெங்குந் தானெனக்கண்டதூயோன்
† இங்குறைந்தகன்றபாண்டத் தியல்பினெஞ்சருவபற்றி
அங்குருவகற்றிநின்றா னானந்தியாகிவேந்தன். (௯௧)

சீவன்முத்தர்கள்பாணிற்குஞ் செப்பியமனத்தரூபம
மேவரும்பரமமுத்தி மேவிடினாசமாகும்
தாவருநிலைமைநன்றாச் சற்குருவருளாற்பெற்றுக்
சேவலமாகிநின்றான் கேடிலாஞானவேந்தன. (௯௨)

[இதுமுதல்-௪-பாட்டானும் மந்திரி அரசனிடத்திற்போய்
அவன் றன்மையைக் காண்டல் கூறப்பட்டது.]

இத்தகைஞானம்பெற்றே யெழின்முனியாகியெங்கும்
சித்தனாய்த்திரிதறன்னைச் செப்புமுன்னமைச்சர்தமுள்
வித்தகனொருவன்கேட்டு வினவிடவேண்டுமென்றே
கத்தனாமரசைத்தேடிக் கண்டடிபணிந்துநின்றான். (௯௩)

பூவணையாகிவானம் பொருந்துமேற்கட்டியாகித்
தீவமதாகியிந்து செங்கதிர்வீசுங்காற்று
மேவுசாமரமதாகி விடுதலைமனைவியாகிக்
கேவலமின்பமாகிக் கிளர்ச்சியாய்நின்றான்வேந்தன். (௯௪)

ரதமுதற்சேனைசூழ ரத்நசிங்காசனத்தில்
விதவலங்காரத்தோடு வீற்றிருந்தரும்வேந்தன்

---

† இங்கு=பெருங்காயம்.

உதவுகோவணணாய்மேனி யுருத்தெரியாதநீறாய்
முதன்முடிவிரித்துநின்றான் முனிவனாயொருவனாகி. (௩௫)

கரிரதமிவர்தலின்றிக் கானடையாகியெங்கும
உரியதோர்மனையூணின்றி யூரெங்குமுண்பானாகி
அரியராசாங்கக்கோல மகற்றியேதவாங்கமாகித்
திரியுமவ்வரசைநோக்கிச் செப்பினனமைச்சன்றானே. (௩௬)

[இதுமுதல்-௨-பாட்டானும் மந்திரி அரசனை
வினாவுதல் கூறப்பட்டது.]

அவனியினினக்குமேலோ ரரசனுமில்லையிந்தத்
தவவடிவாகியெங்குஞ் சரித்திடவெற்றினுக்கோ
நவமதாயுடலிதோடே நண்ணுவதெனையீதன்றி
இவணெனக்கருளவேண்டு மெனக்கறிவோங்குமாறே. (௩௭)

பதத்தினைவேண்டின்முன்னம் பற்றிநின்றில்லறத்தைப்
பதப்படநிறுத்தியேகல் பண்பதாமேலர்முத்திப்
பதத்தைவேண்டிடிலோஞானப் பார்வையிற்கூடுநீயெப்
பதந்தினைவேண்டியிந்தப் பரதேசியானதென்றான். (௩௮)

[இதுமுதல்-௩-பாட்டானும் அரசன் மந்திரிக்கு
விடுத்த விடை கூறப்பட்டது.]

அமைவுடையமைச்சின்மிக்கோ யடைவுடன்வினவிக்கேட்டாய்
இமையளவேனுஞ்சித்த மிதுவதுவெனவோடாது
சமைவுடன்கேணீசொன்ன சங்கைக்குத்தரங்கணன்றாய்
நமைவிடவேறோர்வேந்து நாட்டிலையென்பதொக்கும. (௩௯)

பதமதைவேண்டினில்லைப் பதப்படநிறுத்தியேகல்
இதமென்றாலொக்குமுத்தி யெய்துதன்ஞானப்பார்வை

வீதமதிற்றோன்றுமென்றாய் விருப்பமாய்க்குடும்பபாரத்
திதமதாயழுக்துவோருக் கெங்ஙனம்பார்வைதோன்றும். (எ0)
மனமிருபொருளைப்பற்ற மாட்டாதட்டாவதான
இனமவைபுறநோக்கான வேதிறற்கூடும்வீடு
கனவுண்ணுக்காகுமில்லங் கருதியபுறநோக்காகும்
அனகவிவ்வூகந்தோன்ற வறைகுவகாமேகேளாய். (எக)

வேறு.

தென்றிசைநடப்போர்கங்கை சென்றுதோய்ந்திடுவரோதான்
அன்றியுமவனிவாழ்க்கைக் கமைச்சர்களுடனேகாந்தய
ஒன்றியேயூகஞ்செய்வோ ருலகவேந்தாயினோர்கள்
நின்றிதைநோக்காயில்லி னிறப்பவர்மூத்திசேரார். (எஉ)
பாசந்தான்பகையதாகப் பார்வைப்பற்றிடிற்பாசத்தில்
பாசந்தான்வைத்துப்பின்னும் பற்றவுங்கூடுமோதான்
பாசந்தான்பகையதென்றே பகருநூன்மட்டேகற்றோர்
பாசந்தான்விடவுமாட்டார் பூரமெலாமெனவாய்ப்போக்கும். (எரு)
அந்தமாதியுமிலாவீ டடைந்துடற்பிறப்பறுக்கச்
சுந்தரஞானம்போதுந் துறவறமேதுக்கென்றே
மந்தநிகாரியோரை மதித்துநூலுரைக்குஞ்செய்தி
அந்தமதானபேருக் கத்தகைவிளம்பாதென்றும். (எச)

வேறு.

தோன்றுகின்றபொருளியல்புந் தோற்றுவிக்கும்பொருளியல்பும்
தோன்றவுனக்கியாமுரைக்கச் சோகமறவேகேட்டிடுவாய்
தோன்றுபொருள்களநித்தமுமாய்த் தூய்மையின்றித்துக்கமுமாய்த்
தோன்றுந்தோற்றுவிக்கும்பொருள் சுகமாய்ச்சுத்தநித்தமுமாம். ()
பாலனெனபருவம்போம் பன்னுகுமாரப்பருவம்போம்
கோலமானதருணம்போங் கோலையூன்றிக்குனிந்தெழுந்து

காலன்மாய்க்கவனைவர்களுங் கல்லென்றழுதுபேர்மாற்றி
ஏலப்பிணமென்றொருபெயரிட் டிடுகொட்டிடுதலொருதலையே. (௭௬)

கருவினின்றுமழிந்துபோங் கண்டகுழந்தையினுங்குமரப்
பருவந்தனிலும்போந்தருணப் பருவந்தனிலுமழிந்துபோய
உருவநடுங்குமூப்பதினு மொடுங்குமெந்தக்காலையினும்
ஒருவியழிதலியல்பாகு முலகத்துடலின்வாழ்க்கையுமே. (௭௭)

பஞ்சபூதமழிந்துபோம் பானுத்திங்களுடுக்கள்போய
வஞ்சவசுரர்மடிந்திடுவர் மாகர்பதம்போம்வல்லரக்கர்
துஞ்சுவார்கள் * போகிபதந் துஞ்சும்பிரமன்பதந்தானும
துஞ்சுந்திருமால்பதந்துஞ்சந் றுஞ்சாதொன்றேபரமபதம். (௭௮)

தோலிரத்தமெலும்பிறைச்சி சுக்லமேதைமச்சையொன்றாய்த்
தூலிகரித்தவுடம்பாகுந் தொட்டவெவையுந்தன்வடிவாய்க்
கோலியடக்கிக்கொளுமிதனைக் கூறுகூறாநோக்காது
போலியுணர்வோர்மகிழ்வெய்தும் புனிதமென்றும்பரமபதம். (௭௯)

அரந்தையதனையொழுங்காக வறையக்கேணீயவனியெல்லாம்
பரந்தசிருட்டிதிதியொடுக்கம் பண்பாய்நிகழுஞ்சிருட்டிதனில்
பொருந்துபெரியதுன்பைந்து போய்மாண்டுறிலதெண்மடங்கே
இருந்ததிதியுமிரண்டாகு மிளமையென்றுமூப்பென்றும். (௮௰)

விருத்தபருவமிகத்துன்பம் விளங்குமிளமையிரண்டவையின்
வருத்துபிணியின்மிகத்துன்பம் வளமையிளமைமூன்றாகும்
கருத்ததறியாக்குழந்தையென்றுங் குமாரமென்றுங்காளையென்றும்
அருத்தமறியாததிற்றுன் மடையும்பாலப்பருவத்தில். (௮௧)

தந்தைதாயாராசிரியர் தாங்கண்முனிதறனக்கஞ்சிச்
சிந்தைகலங்குங்கவுமாரஞ் சிறந்தகாளைப்பருவத்தின்

---

* போகி=தேவேந்திரன்.

முந்துபசிநோய்சாமநோய் முடுகித்தணிக்கப்பொருட்ட
இந்தப்புவனத்திரவுபக லிடையறாததொழிற்றுன்பம். (௮௨)

பொருளுண்டாகிற்காப்பதனாற் பொருந்துந்துன்பமரசாகின்
ஒருதம்மிருததவரசரா லுதவுந்துன்பமொருகுடைக்கீழ்
நிருபனாகினோய்மரண நேருமென்னும்பயத்தானாய
வருவதெனையோமறுமையினி லென்றும்வாடித்துன்புறுமே. (௮௩)

மாகர்க்கசுரர்பகையுளது மகிழ்ச்சிவாட்டமிகவுமுள
தாகத்தகலாநோயுமுள தனங்களுளதுநசையுளது
போகத்தழுந்தன்மிகவுளது பொன்றலுளதுகற்பத்தே
சோகத்திறங்களிவையுடைய துறக்கத்தென்னைசுகமுளதே. (௮௪)

தேவர்மனிதர்துன்பத்தின் றிறங்களிவ்வாறாகியிடில்
ஆவகிழா மிருகமுத லசரமீறாமைவகையில்
ஓவலில்லாததுன்புக்கோ ருவமையில்லைநிரயத்தில்
நோவதுன்பஞ்சொல்வதெனை நோயேபவத்திற்சுகயவீடே. (௮௫)

வேறு.

இந்தவிழிவையுடைய விந்தமாயையசத்தே
அந்தவுயர்வையுடைய வந்தப்பிரமஞ்சத்தே
தந்தமனத்திற்றேர்ந்தோர் தள்ளியஃதைநிற்பர்
உந்தன்மனத்தினன்றா யூகித்தமைச்சபாராய், (௮௬)

பொய்யென்றிதனையறிந்தோர் பொருந்திநிற்பதுளதோ
மெய்யென்றதனையறிந்தோர் மேவாதிருப்பதுளதோ
ஐயமுளதோவிதனி லமைச்சபாராய்நன்றாய்
உய்யவறிவிலாதோ ருழல்வர்நீக்கமாட்டார், (௮௭)

---

* விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், ஆக-௫.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நிலையம்.

பொய்மையைமெய்யென்றறிந்து போதமின்மையாலே
மெய்மையைப்பொய்யென்றெண்ணி மெலிந்தேயுழல்வருலகர்
பொய்மையைப்பொய்யென்றறிந்து போதகுருவினருளின்
மெய்மையைமெய்யென்றறிந்தே மெலிவுதீர்வருயர்ந்தோர். (அஅ)

துன்பந்தோன்றிலெவருந் துறந்தேகராய்த்தனித்தே
இன்பந்தேடலியற்கை யின்பமென்றேதோன்றில்
அன்பதாகநீங்கா ரவர்கட்கெங்ஙன்கூடும்
நன்பரமஞானநாட்ட மமைச்சசொல்லாய். (அகூ)

இழிவையுணர்ந்தாலுயர்வை யெவருந்தேடிநோக்கும்
இழிவையுணராருயர்வை யெய்தநோக்காரென்றும்
இழிவையிழிவென்றுணர வெந்தக்காலம்வாய்க்கும்
இழிவையுடையோர்க்கமைச்ச விதனையூகித்துணராய். (கூ0)

பேதவாதிகளைப்போற் பிரபஞ்சம்வேறெனவே
ஈதகன்றதலவேயெமை யன்றியதில்லென்றே
போதவிழியிற்றுறந்த புனிதத்துறவேகண்டாய்
சீதமதிபோற்குளிர்ந்து செனனவெப்பந்தீரும். (கூக)

இருந்தவிடத்திலிருந்தே யெய்தலாமென்றுணாக்கில்
திருந்துநிமலமனத்தோர் தீரரெனினுமொழிந்தே
பொருந்தியேகாந்தத்திற் போதமடக்கவேண்டும்
வருந்துமனத்தோர்க்கென்னை வாய்க்குமமைச்சசொல்லாய். (கூஉ)

முனமேயனைத்துமுடித்து முழுதுமுணர்ந்தோரில்லின்
இனமேசென்றுநின்று மேகநீங்காரென்னில்
தினமேயகமாய்நிற்போர் செகத்தினியல்பையுணரார்
கனமாம்யாழ்ப்பாணத்தின் கப்பலோட்டம்போல. (கூங)

ஒருத்தனொருவனை யொருவேந்தாக்கின் முன்னம்
இருக்குமிடத்தைநீக்கி யேகிராசதானி
இருக்குமன்றி முன்கணிருக்கு மோ தான்சொல்லாய்
*திருக்குஞானமுடையோர் செகத்தைமெய்யென்றுழலார். (௧௪)

வேறு.

மனையினின்றூனும்பொருளுயிர்ச் சார்வின்வருத்தனங்கெடுதலின்மகிழ்ச்சி, இனிமையில்வாட்டம் விடயவின்பதனி லெட்டுணையாயினுமாசை, பினையதிற்றமது பிரவிர்த்திதானும் பேசுமிக்கான்குயில்லெனினும், தனையுணர்வதற்குச் சாதகஞ்செயுங்காற்றள்ளி 0 யின்னிற்றலேதகுதி. (௧௫)

நீதுறுமனையின்பினை யிகழ்ந்தந்தச் செய்பொருளின்பமே வேண்டிட, சாதகமதனிற்றொடங்கு கால்விடயந்தடையதாஞ் சாத்தியமான, பேரினிலவையுந் தோன்றிடாதந்தப் பொருவிலானந்தமே விடவே, ஆதலிற்றுறவின் ஞானமஞ்ஞான மாகுமென்றறைகுவர் பெரியோர். (௧௬)

இல்லறமதனி லுறைந்துளோரிடத்தி லிருப்பினுஞானங்கீழிருப்பிற், புல்லியமாரத் தினமெனவிளங்கும் போக்கியில்லினைத்துறவென்னும், நல்லறமடைந்தோ ரிடத்துறைஞான நற்றங்கமிசை யிரத்தினம்போல், எல்லையிலொளியாய் விளங்கிடுமாயி னில்சிறப்பன்றுஞானிகட்கே. (௧௭)

முனமனைவர்களு முறைவதுமில்லை முத்தியையுணர்ந்தறிஞர்களும், பினமதினின்றபடியினுற் சங்கைபேசுவர் துறவுடையோரை இனமதைவிடுத்து மில்லறமதுவே தலையெனவியம்புவதுண்டோ மனமதிதனையூகியேயமைச்ச மகிமையன்றில்லை ஞானிகட்கே. (௧௮)

---

* திருக்கு = அறிவு. 0 இல் = மனை.

ஆடியசகலமடங்கு கேவலமுமகற்றியே யொளிப்படைகொண்டு
மூடியவிருளைமுழுதையும்வீசி முடிவில்வீடதனையே புணர்ந்தோர்
நீடியஞாலமிசையினிற்பால னிசமருளுடையன்பேய்பிடித்தோன்
கூடியகுணத்திஞரிற்போய்க்குடியின் கூலியாளினினியல்படைவார்

வினைகளோரிரண்டுஞ் சமமதாய்ஞான மேலிடுகாலையினிந்த, ம
னையின்பங்கான்ற சோற்றிற்கண்டுவெர்த்து மாற்றியேகைவிடவருமே
ல், தனையுளபடியேயநுபவமதனிற் றுனுணர்ந்தானந்தமடைந்தோர்
பினையுமவ்விடயம் பூண்பர்களெனவே பேசுதல்வழங்குமோ சொ
ல்லாய். (௧௦௦)

விடயவின்பதனி * னசையுளோர்தமக்கும் விரிவதாம்பேரின்
பச்சுவையின், அடைவினைச்செவியிற் கேட்டவக்கணமே யவற்றி
னையகற்றிடவருமேல், இடைமுதலீறின் ஞானவானந்த மெய்திறே
ர்களும்பினுமிந்தக், கடைமனைவாழ்வை நினைவர்களென்றுற் கண்ட
னர்நகையரோசொல்லாய். (௧௦௧)

பற்றிலையாயினவையினிலிருப்பேன் பழையவூழ்வினையெனிலா
சை, சற்றெனுமுதிப்பித்தல்லவோவூட்டுஞ் சகவின்பிலிறையெனுமி
ச்சை, முற்றுணர்ஞானத்தோர்கள் பூண்பர்களோமுடிவி லானந்த
மேபருகி, நிற்றலேமீட்டும் விழிப்பினுங்கான னீரிற்கண் ; டுண்
முகமடைவார். (௧௦௨)

பவமதையினிமையென வெணிவிடயம் பற்றிநின்றுழன்றவர்
தாமே, பவமதையினிமையலவெணிவிடயம் பற்றறுத்தருட்குருவ
டைந்து, பவமதையறுக்கு நெறியுணர்ந்தருளிற் பரவின்பமடைந்த
வர்தாமும், பவமதையினிமை யெனவெணினலவோ பற்றுவர்விடய
வின்புளையாய். (௧௦௩)

* நசை = ஆசை. ; உண்முகம் = அந்தர்முகம்.

கொடிமுதல்வாடும்வேர்முழுதினையுங் கோதறக்களைந்திடிற்களைந்தும், படிமிசைகொடி பூக்காய்பழமோங்கல் பகரதிசயமஃதினைப்போல், அடிநடுவீறில் பிரமந்தானாகி யகப்பற்றையறுத்தவ ரிடத்தும், மடிவுறுமனையில் விரும்பியேநெஞ்சம் வருத்தனமாதலென்றறைவார். (௧௦௪)

ஆணவமதனைத்தோய்ந்துடலினை நானெனத்தினவெரிவலையைப், பேணலைச்சுகமென்றுண் மகிழ்ந்திடுவோன் பேரின்பத்தாசையதாகிப், பூணவஞ்ஞானமிலையதின்ஞானம் பொருந்தியச்சொரூபந்தானாகி, எணவானந்தத்தழுந்துவோன்விடயமெய்திடின்ஞானமேயிலையால். (௧௦௫)

வேறு.

கனவதனிலுணர்விலதுகாணுந் தனுவாதிகளைக்கருதியேயின்
றுனுமவரினிதுகனவென்றுணர்ந்தவர் கனவசையிலதினுலகுதன்னில்
தனதுசயவுருவதனை யநுபவத்திற்றானுணர்ந்திச்சகமதெல்லாம்
மனமதனிற்சாலமெனவுணர்ந்தவ ரிவ்வுலகின்மின்மையனீங்கும். ()

கதிரவன்முன்னிருளிருக்கு நயனமுடையொருவன் குழிக்கண்ணேவீழும், அதிகவலிச்சூரனமர்க்களத்து வெருவுவன்கிருதநறையக்காரம், இதமுளபாயசமுசிரம் பருந்தினன் கூழ்தனிற்செய்வனிச்சையென்றால், விதமிவை நான்கினுக்குங்குறையதின் ஞானிக்கிழுக்காகும் விடயஞ்சென்றால். (௧௦௬)

இங்குறைந்த பாண்டமகின்வாதனையில் வாதனைகளிருக்குமென்றல், துங்கவறிவுடையோர்கட் கின்றியமையாதுதொழிறொடங்கிநிற்றல், அங்கியைத்தப்பனம்வல்லார்க்கனல் சுடாததினவினைகளடுக்காதென்றல், தங்கும்வினைக்கேதுவாம் விடயமதில் விரும்பாதிசாராதென்றல். (௧௦௮)

உணர்வுடையஞானியெவை புரிந்திடினுமிழிவிலிழிவுறாத்ததாகின், இணையிலிருந்தியனென்பர் யூகமில்லதனுன்மற் றெவைகள்செய்துய், அனைவதிருழ்வெனுமவனே தீயன்மிகஞானமதற்காகுந்தாழ்வோ, நணுகினன்றேஞானமொருவனை ஞானியெனப்பெயருண்ணிற்றல். (௧0௯)

* கருவயிற்றையுடையதுவுங் கனவயிற்றையுடையதுவுங் கருதிப்பெண்ணின், உருவதனைக்குறிப்பதிலேக் கிடிற்றேன்று முளபடியே யுலகுதன்னில், குருவையடைந்தவனருளிற் சொரூபத்தையநுபவமாக்குறித்துளோரும், இருவையத்திடம்பமாய்த்தமைஞானியென்போருமேதிற்றேன்றும். (௧௧0)

அருச்சுனற்குமிராமருக்கு மதிகாரமவைபார்த்தே யறைந்த () நூலின், கருத்தறியாய்ஞானமொன்றே பிரமாணஞ்சரிதையதுகணக்கன்றாகும், விருத்தமறிவாசார முடையோனே ஞானியில்லோன் விருத்தனுகும், திருத்தமுடனமைச்சவிது துணிவென்றே யுட்கொள்வாய்தீரனுகி. (௧௧௧)

[பின்னர் அரசன் சமாதியிலிருக்க மந்திரிகண்டதிசயித்தல்.]

வேறு.

என்றங்கனேகமாய்விரித்தே யிராசயோகியுறைசெய்து
நின்றுவாக்குத்தனையடக்கி நிமிடத்தகற்றிமனத்தினையும்
ஒன்றுமில்லாவெறும்பாழா யொன்றாஞ்சமாதிதனையடைந்தான்
நின்றங்கமைச்சனிதுகண்டிந் நேர்மைபுதிதென் றதிசயித்தான். ()

[மந்திரிசென்று நகரத்தாருக்கு அரசன்றன்மை கூறல்.]

இந்தவுணர்வுநமக்கின்ன மெய்தவில்லாமிங்கே
எந்தவுணர்வுகொடுநிற்பே மென்னவமைச்சன் யூகித்து

* இப்பாட்டு=எடுத்துக்காட்டுவமையணி. () நூல்=அருச்சுனற்கு-பகவற்கீதை, இராமருக்கு-ஞானவாசிட்டம்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY


வந்தவழியேதான்றிரும்பி வளப்பமுடையமாபுரிக்கே
பந்தமுடையோருடனிருந்து பகர்ந்தானரசனியற்கையெல்லாம்.

[இதுமுதல்-உ-பாட்டானும், கேட்டோர்கள் அரசனைக்
கண்டவிடத்து அவன் பேசாதிருத்தலின் அவர்கள்
தம்மிடத்திற்குத் திரும்பிவிடப் பின் அரசன்
விவேகமுத்தியடைதல் கூறப்பட்டது.]

கேட்டபேர்கண்மிகவியந்து கிட்டாதென்றுமிம்முனிபோல்
தேட்டமுடனேயவரவர்க டேடிவந்துபணிந்திடவும
வாட்டமுடனே தாய்தந்தை மனையாள்பதத்தில்வீழ்ந்திடவும்
நாட்டமாறுபாடின்றி நகைசெய்திருந்தாணற்றவனே. (௧௧௪)

வந்தபேர்களுடன்வார்த்தை மலராதிருப்பதவரறிந்து
பந்தமுடையேநமக்கென்னை பகர்ந்தாற்றோன்றுமெனத்திரும்பித்
தந்தமிடத்திற்சென்றார் கடவனுஞ்சிறிதுநாட்கழித்துத்
தொந்தமொன்றுமில்லாத சுயமாமுத்திதானானான். (௧௧௫)

வேறு.

[நாற்பயன்.]

இந்தமாராஜன்சென்ற விதிகாசந்தன்னைப்பார்ப்போர்
சிந்தனையொன்றுமின்றித் தீரவேதுறவராகி
அந்தமுமாதியில்லா வமலமேவடிவமாவர்
எந்தமையருளினாண்ட வெழிற்குருபனாயேவாழி. (௧௧௬)

வேறு.

அரியதுதுறவற மல்லதில்லையான்
மருவியதுறவற மொருவிமன்னனாய்
உருகெழுமுடிகவித் துலகமாள்வது
பெருவிலைமணியினைப் * பிண்டிக்கீதலே. (௧௧௭)

பாயிரம் உட்படத் திருவிருத்தம் - ௱௰௭.
மகாராஜா துறவு-முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

---

* பிண்டி=பிண்ணாக்கு.

[illegible]

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

# சுத்தசாதகம்.

## பாயிரம்.

[ஆழத்துப்பிள்ளையார் துதி.]

சூதானமாயையோரைத் துதிக்கையாலெடுத்துமேலாம்
ஆதாரமானவந்த வருளினிலிருக்கவைக்கும்
தாதாவாய்விருத்தவெம்பிற் றங்கியேபிரகாசிக்கும்
பாதாளத்தானைபாதம் பணிந்துபோற்றிடுதல்செயவாம்.

[விருத்தாசலேஸ்வரர் துதி.]

வேறு.

அருமறையுச்சிதனில்விளங்குவதா யனாதியாயமலன்மற்றமலை, இருவர்க்குநிகழ்ச்சியாயந்த விறைவற்கிதயமாயிலிங்கரூபமதாய், ஒரு கிரிவடிவாய்க் கொடுமுடியனந்த முடையதாயுலகெங்கு நிறைவாய்த், திருமுதுகிரியென்றொரு பெயர்படைத்த தேவைநாடொறு மிறைஞ் சிடுவாம். (உ)

[பெரியநாயகியார் துதி.]

மரகதவடிவுமதித்திருமுகமு மலர்க்குழலுங்குறுநகையும், கரக மலமுங் கூர்விழியுஞ்செவ்வாயுங் கச்சணிதனமுநூலிடையும், அரக ரவெனபோர்க் களித்திடும்பதத்தோ டஞ்சலென்றென்னெதிர் தோ

ன்றி, உரகதியளித்தபெரியநாயகியை யுளத்தினிலிருத்திவாழ்த்திடு வாம். (ரு)

பஙகயன்றிருமாற் கரியதோர்பரமன் டங்கியேபெரியநாயகியே, சங்கைகளிலதாய்த் தடைகண்மற்றிலதாய்த் தத்துவமசிக்கருத்தமதை, அங்ஙையினெல்லி யெனவிளக்குவதா யமலையேயுனக்கிதயமதாம், துங்கநன்னெறியொன்றுளத்தினும் விளக்கித்தொண்டனேன் னாக்கினுமுறைப்பாய். (சா)

## நூல்வரலாறு.

உலகிலெசசமயங்களுமுறைத்திடுதற் கொருவிரோதங்களுமின்றி, இலகுமசசமயங்களுக்குமேலாகி யிலங்கிடுமுபநிடநெறியை, அலகிலெம்மண்ணலருளிய வகையுன்னகத்திலும்விளக்கிவாக்கினிலும், குலவிடவுரைப்பே மென்றனள் விருத்தக்குன்றில்வாழ் பெரியநாயகியே. (ஞ)

பெரியநாயகிதன்கருணையாலிங்குப்பிராரத்தமும்மொழிந்தோர்க்குத் திரிவதாமாயாவடிவதுகளைந்து திருவருளேவடிவாக அரியவாஞ்சாமத்தசி யுரைப்படியேயமைத்திர் தச்சுத்தசாதகத்தைத் தெரிவிலவெளியேன்வாக்கினினின்று திருவுளம்பற்றியதிதுவே. (அ)

பாயிரம் - முற்றிற்று.

## நூல்.

ஈசனதுரையுங் கிரியையதென்று மியற்றிடுமுபாசனையென்றும்
பாசமதகன்றசுத்தமதென்றும் பகர்ந்திடுமூன்றுகாண்டமதாம்
நேசநற்கிரியைசைவம்வைதீக நிழ்ந்திடுமுபாசனைசுத்தம்
ஆசில்சிவாத்துவிதமிவைமூன்றுமடங்கிடுந்தத்துவமசியே. (௧)

கிரியையினெறியை யிலங்கிடவியம்புங் கிளர்தந்திரமெழுநான்கும்
அரியநல்லுபாசனநெறியதனை யறைந்திடுமறையொருநான்கும்
உரியவச்சுத்த நெறிதனையுரைக்கு முபநிடச்சுருதியெண்ணான்கும்
கிரியைதொம்பதந்தற் பதமுபாசனையக் கேடில்சுத்தம்மசிபதமே.

இருக்குமுன்னான்கின் முடிவிலெண்ணான்காயிலகிடுமுபநிடமவையே
வருக்கமுமிரண்டாம்பூருவமென்றும் வயங்கிடுமுத்தரமென்றும்
சுருக்கமதின்றியத்தியான்மீகஞ் சொற்றிடும்பூருவபாகந்
திருக்குகளின்றியங்கலிங்கயிக்கஞ்செப்பிடு முத்தரபாகம். (௩)

முத்தியாமிடத்துமும்முதலென்றே மொழியுமாகமமுமங்கொன்றும்
அத்தியான்மீகமறையுபநிடமுமவனியில் வழக்கமேயன்றிப்
பத்தியாலடையுமங்கலிங்கயிக்கம் பகர்ந்திடுமுபநிடமொன்றும்
அத்திறலிவையிலடக்கமதென்ப ரதைவிளக்கிடுந்தொந்தத்தசியே.

சைவநன்னெறியுந் தந்திரமவையுந் தற்பரன்முகத்தினின்றுதிக்கும்
துய்யவைதீகமும்மறையவையுஞ் சுவாசமற்றதனினின்றுதிக்கும்
உய்யுமச்சிவாத்துவித நெறியதுவுமுபநிடமும் முளத்துதிக்கும்
ஐயமுந்திரிவுமறவிவைக்கருத்த மறைந்திடுந்தத்துவமசியே. (௫)

ஆகமமிருபத்தெட்டினின்முடிவா மாகமம்வாதுளமதனில்
ஏகமென்றியம்புமறையனுசரித்தே யியம்பிடுநான்மறையவையில்
பாகமதுறஞ்சாமத்தின்முன்னெறியும் பகர்சியாத்துவிதவர் நெறியும்
ஏகமதிலங்கவியம்பிடுமதனு லுண்மைசாமத்தினின்முடிவே. (௬)

பந்தமதகன் றுசுத்தமாயிருத்தல் பரமமாமுத்தியதென்றும்
அந்தநல்லதிட்டானம்மதனை யாகுதன்முத்தியதென்றும்
நந்தலில்சிவத்துக்கங்கமாயிருத்த னன்குறுமுத்தியதென்றும்
தந்திரமறையுபநிடதமிம்மூன்றுஞ் சாற்றுந்தாற்பரியநீகேட்பாய். (எ)

பந்தமதுறுமான்மாவையேநோக்கிப் பந்தநீங்குதன் முத்தியென்றுய
அந்தநற்சுத்தான்மாவையேநோக்கி யவ்வதிட்டானநீயென்றும்
நந்தலில்பரமானவனையேநோக்கி நற்சிவத்தங்கநீயென்றும்
தந்திரமாதிமூன்றுகாண்டமதுஞ் சாற்றிடுமிவைதொந்தத்தசியே (அ)

முன்பதசிருட்டிப்பதிபசுபாச மூன்றையுமனாதியாய்நிறுவும்
பின்பதசிருட்டிச்சகமித்தையந்தப் பிரமமேயுளதெனநிறுவும்
சின்பதமானவசிபதசிருட்டிச் சிவசத்திலீலையாயநிறுவும்
மன்பதமூன்றும்பின்னையபின்னையு மாசறுசிவமுமென் றுணர்வாய். ()

முன்பதமீனதொம்பதப்பசுவே மூடிருணீங்கிச்சுத்தமதாய்ப்
பின்பதமானதற்பதவருளிற் பிறங்குந்தா தான்மியமடைந்தே
சின்பதமானவசிபதசிவத்தைச் சேர்ந்ததற்கங்கமாய்நின்றால்
மன்பரமுத்திமுடிந்ததுவாகு மற்றவைதனினிற்கிற்குறையே. (௧௦)

கங்கையுநிடைச்சேரியுமொன்றுக்கொன்று கைவிட்டதுவிட்டதொக்கும், இங்ஙனங்குந்தமும்மொருவனுமற் றிடைவிடாத்துவிடாதொக்கும், எங்ஙனமவனுமிவனுமற்றிடைவிட்டிடைவிடாதிருத்தலுங்கூடும், துங்கவவ்வசிக்குப்போந்திடுமருத்துந்தோன்றிடாமறைநெறியோர்க்கே. (௧௧)

சீவனதுபாதியீசனதுபாதி தீர்ந்துசித்திரண்டதுமொன்றே, ஆவதுவிட்டுவிடாதலக்கணையென் றறைந்திடிலுபாதியோ ரிரண்டும்; மேவலைநீங்கல்விட்டலக்கணையாம் விளங்குஞ்சித்திரண்டதுமொன்றே, ஆவதுவிடாதலக்கணையாகு மவைகருமேலிலக்கணையின்றாம்.()

விட்டலக்கணையும் விடாதலக்கணையும் விட்டுவிடாதலக்கணையும், இட்டமதுறவேதேர்ந்திடிற்பந்தந் தீர்ந்திடல்விட்டலக்கணையாம, இட்டமல்லதிட்டானம்மதுதானா யிருத்தலேவிடாதலக் கணையாம், மெட்டறுசிவத்துக்கங்கமாயிருத்தல் விட்டுவிடாதலக்கணையே.

தத்துவமசியென் றுரைக்குமுப்பதத்திற் றருவன்னநான்கதாய வையும், ஒத்துறுதொந்தற் பதமவைதன்னி லொன்றொன்று மசியினிலிரண்டாம், தொத்துதலகன்று சுத்தமாயிருத்த றொல்லதிட்டானந்தானாதல், ஒத்துறுமவையி லொன்றொன்றேயசியி லோரிரண்டங்கமுஞ்சிவமே. (௧௪)

சுத்தமாய்நின்ற விச்சைசத்தியதாந் தொல்லதிட்டானமாய் நின்றால், சித்தமாஞானஞ் சத்தியதாகுஞ் சிவத்தினுக்கங்கமாய் நின்றால், மத்தமாங்கிரியை சத்தியதாகும் வகுத்தவிம்மூன்றுமற் றொழுங்கில், சித்தமாய்ச்சத்தியிலாவிடின்வீட்டுந் தேகமொன்றெடுக்குமென் றுணர்வாய். (௧௫)

தொம்பதம்விளங்கின்மேல் வினையறைத்த தொல்லிருளகன்று போயொளிக்கும், தம்பதமான தற்பதம்விளங்கிற் * சஞ்சிதமாயை போயொளிக்கும், அம்பதமான வசிபதம்விளங்கி லரும்பிராரத்தம் போ யொளிக்கும், செம்பரவருளே வடிவதாயான்மா சிவத்தினுக்கங்கமாய்நிகழுய. (௧௬)

அடுத்தமற்றிரண்டு சனனத்தில்வீட்டை யடைந்திடுந் தொம்பதநெறியோர், அடுத்தமற்றொருநற் சனனத்தில்வீட்டை யடைந்திடுந்தற்பதநெறியோர், அடுத்தவிச்சனனந் தனிலடைந்திடும்வீ டசிபதநெறியுளோரிவரும், அடுத்தவிவ்வுடலேர் டைந்திடாவிடின்மேலாக்கையொன்றெடுக்குமென் றுணர்வாய். (௧௭)

* சஞ்சி=பை.

ஒடுங்கிடுங்காலந் தோன்றினவுடைவி னொடுங்கிடுமென்றனைப் பகனல், ஒடுங்கிடுங்காலஞ் 0 சத்தியவாதிக் கொடுக்குமிவ்வுடறன் மாத்திரையின், ஒடுங்கிடுங்கால [] மசத்தியவாதிக் கொடுக்குமிவ்வுடலசத்தியமாய், ஒடுங்கிடுங்கால முடலிங்கேவீழ்ந்தா லொடுங்கினதில்லையென்றுணர்வாய். (௧௮)

மேலொருவடிவை யெடுத்ததேயாகின் மேவுமிவ்வுடலிங்கேவீழும், மேலொருவடிவை யெடுத்ததின்றாகின் மேவுமிவ்வுடலிங்கே வீழா, மேலொருசிவத்தைச் சிவன்சென்றடையு மேவுமிவ்வுடலிங்குத்தானே, மேலொருசிவத்தின் வடிவதாமருளாய் வெளியதாயுலகு கண்டிடவே. (௧௯)

சூக்குமமதனி னின்றுமுன்வினையிற் றூலதேகமுமுளதாகும்
சூக்குமந்தனது காரணமடையிற் றூலமுஞ்சூக்குமத்தடையும்
சூக்குமந்தனது காரணமடையத் தூலமிங்ககன்றதேயென்றல்[வாய்
சூக்குமந்தனது காரணம்விடுத்துத் தூலமொன்றெடுத்ததென்றுணர்

தூலவிவ்வுடலைவிடுத்திலாது சூக்குமஞ்சூக்குமம்விடுத்துத்
தூலமில்லாதிதிரண்டையும்விடுத்துத்தொல்லுயிர்நிலாவுயிர்விடுத்துத்
தூலசூக்குமங்களின்றிடாதுயிருஞ் சூக்குமமும்முடிவடைந்தால்
தூலமும்முடிவையடைந்திடாதிந்தத் தொல்லுலகினில்விழுந்திடுமோ

வினையினிலெடுத்த விவ்வுடன்மேலும் வினையுளதெனிலிங்கேயகலும், வினையிலதெனிலிங் கிவ்வுடறானே வினையறுமோமயமாகி வினையுளவுடல்போற் றோற்றன்மாத்திரமாய் விளங்கியேவெந்துறு புரிபோல், வினையிலாப்பரம முத்தியில்வெளியாய் விமலநல்லருளதாய்விடுமே. (௨௰)

---

0 சத்தியவாதி எ-து பேதவாதியை
[] அசத்தியவாதி எ-து அபேதவாதியை.

சீவசிற்றறிவுமிம்முத்தவறிவாய்த் திகழ்ந்திடினுடன்மருள்வடிவும்
தாவருமோங்காரவ்வடியாகுந் தக்கசீவன்முத்தவறிவும்
மேவரும்பரமுத்தவ்வறிவாகில் விளங்குமோங்காரவவ்வடிவும்
ஓவலிலந்தவருள்வடிவாகு மொழுங்கிதேயென்றுணர்ந்திடுவாய். ()

பிராரத்தமுடன்பா டென்றெந்தநெறியும் பேசிடுமிந்நெறியதற் குப், பிராரத்தமுடையோ ருகரோயன்றும் பிராரத்தம்புசித்திடு வோர்கட், கருதிந்தமாயா தனுகரணங்க ளதனிறுற் சிவத்துவ மதனை, உறுதுமற்றவரைச் சீவன்முத்தர்களென் றுரைத்திடபபடு வதெப்படியோ. (உச)

அன்னைதன்முலைப்பா லருந்திடும்பருவ மகன்றப்பாற் பருவம்வ ந்ததற்பின், அன்னைதன்முலைப்பா லருந்தவேண்டிடினு மம்முலைவ ற்றியேயிடும்போல், பின்னையின்போகம் புசித்திடும்பருவம் பெயர்ந் தப்பாற்பருவம்வந்ததற்பின், பின்னையின்போகம் புசிக்கவேண்டிடி னும் பிராரத்தநீங்கியேயிடுமால். (உரு)

இந்தநல்லொழுங்கின் முன்னிருபதமு மெய்தியிவ்வசிபதத் த டைந்தால், பந்தமில்சிவத்தை வடிவொடுமடையும் பருத்தவையொ ன்றிலொன்றொதுங்கிச், சந்ததந்தருக்கி யசிபதத்தருத்தந் தனைத் தத்தம்பதத்தினிலொடுக்கும், அந்தகர்தமக்கு மற்றொருக்காலுமசி பதமுத்தியேகிடையா. (உசு)

முத்தியிற்சிவமு முயிரிரண்டாகின் முத்திசாயுச்சியமின்றாம்
முத்தியிற்சிவமுமுயிருமொன்றாகின் முத்தியேபெற்றவனின்றாம் [ன்
முத்தியிற்சிவத்துக்குயிரங்கமாகின் மொழியுமற்றவையுண்டா மதனு
முத்தியிற்சிவமுமுயிருஞ்சையோக மொழியுந்தாதான்மியங்குறையே.

சச்சிதானந்த தற்பரசிவமே தனது தன்னிலையிலேநிற்க
அச்சிதானந்தலீலையினாலே யனேகமாய்ச்சராசரமாகிச்
சச்சிதானந்தமேயுடல்பொறிக டகுகரணங்களாய்க்கொண்டே
அச்சிதானந்தலீலையினடித்து மடைந்திடும்பண்டையப்படியே. ()

ஏகமாயசையாத்தற்பரலிங்கமி லீலையிற்சரமனேகமதாய்
மோகமாமிருளாயவ்விருளதனின் மூடமாய்ச்சிறிதுநாளிருந்துஞ்
சோகமாமிந்தமருளதாயதனிற் றுவக்குண்டுசிறிதுநாணடித்தும்
பாகமாமோவாயதிற்சின்னாணடித்தும் பண்டுபோனின்றிடுமன்றே.

சலமதுதானே திரண்டுப்பதாய்ச் சலம்வந்துட்புகவந்தச்சலமாய்
நிலமதின்விளங்குமஃதினைப்போல நிமலமாமருவிருடானே
குலவுலீலையினாற்றிரண்டுருவாகிக் கூறின்றிக்கூறதாயடித்தும் [யே
இலகன்மாத்திரமாய் நடித்துமுன்போலு மிருந்திடும்பண்டையப்படி

சரமந்தவிருளிலிருந்திடுங்காலத் தனுமுதனான்குமவ்விருளாம்
சரமந்தமருளினடித்திடுங்காலத் தனுமுதனான்குமம்மருளாம்
சரமந்தவோவினடித்திடுங்காலத் தனுமுதனான்குமவ்வோவாம்
சரமந்தவருளினின்றிடுங்காலத் தனுமுதனான்குமவ்வருளாம். ()

இருள்வடிவதுமருள்வடிவதனி லெய்தியேமறைந்திடுமிந்த
மருள்வடிவதுமோவடிவதனின் மறைந்திடுமோவடிவதும்
அருள்வடிவதனின்மறைந்திடுமந்த வருள்வடிவதுமச்சிவத்தில்
தெருள்வடிவானசத்தியாய்முன்போற் றிகழுமென்றறியுளாத்திடுமே.

அருளுறுவடிவே முன்னியல்பான்மா வாணவவிருளுறுமன்றே
இருளுறுசுழுத்திவிழுங்கிடுமதனுக் கிந்தமாயையின்சிருட்டியதாம்
மருளுறுகனவுவிழுங்கிடுமதற்கு வந்ததுபிரணவசிருட்டி
தெருளுறுமந்தப்பிரணவம்விழுங்கத் திகழுமவ்வருட்சிருட்டியதே.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

மருள்வடிவதனி னீங்குதலின்றி மற்றுமொன்றறிவிலாக் குழந்தை, வெருவருங்குமாரர் தருணமூப்பென்றே விளங்குதல்போல வான்மாவும், அருள்வடிவதனி னீங்குதலின்றி யாணவமாலையயோ வருளாய்ப், பருவமற்றவையி லந்தந்தவடிவாய்ப் பண்டுபோன்றுடி வினின்றிடுமே. (௬௪)

இருளினிற்பேகுப்பின்றியசடமயமாமிம்மருளுதயமதாகின்
உருவதாம்பஞ்சபூதமேமயமாமோவெளியுதயமதாகின்
உருவருபஞ்சாக்கரமதேமயமாமோங்கருளுதயமதாகின்
அருவதாம்பஞ்சசத்தியேமயமாமாருயிர்வடிவமென்றுணர்வாய். ()

வடிவதவ்விருளதாய்நிற்குங்காலை மன்னுயிர்பசுவதாய்நிற்கும்
வடிவதிம்மாயையாய்நிற்குங்காலை மன்னுயிர்சீவனாய்நிற்கும்
வடிவதவ்வோவதாய்நிற்குங்காலை மன்னுயிர்சீவன்முத்தனுமாம்
வடிவதவ்வருளதாய்நிற்குங்காலை மன்னுயிர்பரமமுத்தனுமாம.

இருளுறுபசுவதாய்நிற்குங்காலை யிருளதுவாகியேநிகழும்
மருளுறுசீவனாய்நிற்குங்காலை மருளதுவாகியேநிகழும்
தெருளுறுமோவின்முத்தனுங்காலைத் தெருள்பிரணவமதாய் நிகழும்
அருளுறுபரமமுத்தனுங்காலை யருளதாய்நிகழுமவ்வருளே. (௬௭)

இருளதுவாகிநிகழ்ந்திடுங்காலை யிரும்பதியாகியேநிகழும்
மருளதுவாகிநிகழ்ந்திடுங்காலை மகபரமாகியேநிகழும்
தெருள்பிரணவமாய்நிகழ்ந்திடுங்காலைச் சிவலிங்கமாகியேநிகழும்
அருளதுவாகிநிகழ்ந்திடுங்காலை யச்சிவமாகுமச்சிவமே. (௬௮)

அரியவவ்வருளே மூன்றியல்பதுவு மைந்தொழிற்குறியுமாய நிகழும், இரியுதலில்லாச் சுத்தையாச்சித்தா யின்பமாய்நிற்குத லியல்பா

ம், கிரியையுஞானமு மிச்சையதுவுங் கிளர்திரோதையும் பனையது வும், உரியதுகுறியாம் விரியிலையைந்தா யொடுங்கிடி லொன்றதாய் நிற்கும். (௩௧)

பிரணவமதுவுமூன்றியல்பதுவும் பிறங்குமைங்குறியுமாய்நிகழும்
திறமுறவவ்வுமுவ்வுமவ்வதுமாய்த் திருந்தவேநிற்குதலியல்பாம்
உரமுறுநவ்வுமவ்வுமச்சிய்யு மோங்கியவவ்வும்யவ்வதுவும்
விரவுறுகுறியாம்விரியிலையைந்தாய் மேவிடிலொன்றதாய்நிற்கும்.

மருளுறுமாயை யதுவுமூன்றியல்பும் வகுக்குமையுங் குறியுமாய் நிகழும், உருவுறு தமசு ரசசுசத்துவமா யொன்றியேநிற்குத லியல் பாம், பிருதிவியுஞ்சலமுமனலதுவும் பெருகியவளியுவுமவானுமம,வரு குறியாகும்விரியிலையைந்தாய் வந்தொடுங்கிடிலொன்ஞய்நிற்கும். ()

ஐந்துநற்குறியுமூன்றியல்பதுவு மாகியவருளதேயருவாம்
ஐந்துநற்குறியுமூன்றியல்பதுவு மாகியவோவருவுருவாம்
ஐந்துநற்குறியுமூன்றியல்பதுவு மாகியமாயையேயுருவாம்
ஐந்துநற்குறியுமூன்றியலபதுவு மாகியவிவையிலூனுளவாம். (௬௨)

உருவமாமுணவே யெதிரதாமுபய முளத்தினி லுருசிமாத்திர மாம், அருவமாமுணவே திருத்திமாத்திரமா யறிவினில்விளங்கிடு மந்த, உருவமாமுணவே சிவருக்குரித்தா முபயமிம் முத்தருக்குரி த்தாம், அருவமாமுணவே யம்முத்தருக்குரித்தா மெனவறைந்திடு மணியே. (௬௩)

உருவமாமுணவாலுருவமாமுபய வுணவினலுபயமேமயமாம்
அருவமாமுணவாலருவமேமயமா மச்சிவாங்கிசன்வடிவதுவே
உருவமாமுணவாற்சிவனுமுபய வுணவினற்சிவன்முத்தனுமாய்
அருவமாமுணவாற்பரமமுத்தனுமா மச்சிவாங்கிசனுயிரதுவே. ()

அன்னியதசையை யருந்துதன் மனிதர்க் கடாதுமற்றதையருந் திடுவோர், அன்னியமிருகா திகளென்வறைய லாகுமற்றதிற்சிவா ங்கிசரும், அன்னியமாயா வுணவருந்திடுத லடாதுமற்றதையருந் திடுவோர், அன்னியமாயா சகிதசீவர்களென் றறைந்திடலாகுமெ ன்றுணர்வாய். (சரு)

அசுத்தவிவ்வுணவே புசித்திடுமளவு மசுத்தவாதனையதுநீங்கி, அசுத்தவத்தையினை விழுங்கிடுஞ்சுத்த வவத்தைவந்தடைதலேயிலை யாம், அசுத்தவிவ்வுணவைச் சுத்தமதாக வகத்தினிர்ப்பாவனை செய்தால், அசுத்தவிந்நினைவை நீங்கியந்நினைவை யகத்தினிற்பொருந் திடேநிற்கும். (சசா)

திரிவிதக்குணத்திற் றமததமோகந் திகழுமிராசதமிராகம், உரிய சத்துவமே ஞானமதாகு முலகிலிம்முக்குண வுணவே, விரியுமற்ற வையி லெவைபுசித்ததுவோ விளங்கிடுமக்குணமல்லால், அரியசுத் தவத்தை யடைவதேயிலையவ் வவத்தைவந்துறும்வகைகேட்பாய். ()

அன்னைதன்வயிற்றிற் புசித்தவக்குணமா யாக்கையும் பொறியு மம்மனமும், மன்னியும்பினுமப் புசிப்புமேன்மிகவும் வாஞ்சையுற் றருந்தியேயுழலும், உன்னலும்பொறியு முடலுமிம்மூன்று மொத் திடுமெனத்தெளிந்துணர்ந்து, தன்னதுள்ளவையி லுருசிதிருத்தி தனில்வயிராகமேயாகும். (சஅ)

உலகினில்விடய விச்சையையுடையோ னுணவதற்கேற்கவே கூட்டி, இலகிடப்புசித்தான் முயற்சிமேன்மேலு மேறியேவளர்ந் திடுமதுபோல், குலவிடும்வீட்டி விச்சையேயுடையோன்கொண்ட தற்கேற்கவே யுணவை, இலகிடப்புசித்தான் முயற்சிமேன்மேலு மேறியேவளர்ந்திடுமன்றே. (சகூ)

தமகுணப்புசிப்பே மயக்கத்தையளிக்குந் தருமிராசதகுணப்பு
சிப்பே, மமதையையளிக்குஞ் சத்துவப்புசிப்பே மயக்கமுமமதை
யுமகற்றி, அமலநல்லுணர்வே யளித்திடுமதனா லவையிரண்டினுந
சையகற்றி, நிமலசத்துவமே * வருத்தனையாக நின்றுசத்துவப்புசி
ப்பருந்தும். (௫௰)

அடிசின்முன்னாளைக்கு மறுசுவையவையை யருந்திடுகாலையி
னோக்கிக், கடினமுமுன்றப்பு மிராசதமவையிற் கழிந்திடும்பூராதன
மூசன், மடிவுறுதமசென் றிருமையுமகற்றி மாலைகாலைப்பொழுதக
ற்றிக், கடினவுச்சியிற்சத் துவகுணப்புசிப்பே கைக்கொண்டு தினம
ருந்திடுமால். (௫௧)

இடய்பொருளேவன் மூன்றையுமுடையோர்க் கித்தகையுணவு
றுமந்த, இடம்பொருளேவன் மூன்றையுமகன்றோர்க் கித்தகையு
ணவுறுதலால், திடம்பெறவூரி னுச்சியிலேகித் திருவருள்புசிப்பித்
சதென்றே, விடம்பெறினுங்கைப் பெற்றதையருந்தில் விமலமாய்
நின்றிடுஞ்சித்தம். (௫௨)

தந்திரகிரியை நெறிதனிலீசன் றந்திடப்புசிக்கும்பின் மறை
சொல், அந்தநல்லுபாசனா நெறியதனிலனைத்து நாமெனக்கண்டு
புசிக்கும், இந்தவவ்வுணவின் மாறுபாடின்றி யிருமையுமுடிந்ததே
யாகின், தொந்தமில்சிவமே சடுமுகமாகித் தொக்கிருந்தருந்தன்மே
னினைவாம். (௫௩)

இருவகைநெறியும் வரவுபோக்குடைத்தா யியங்கிடுமிதுவன்றி
மாயை, ஒருமுதலென்று மித்தையதென்று முனைத்திடுநிட்டையு
ம்விகற்ப, நிருவிகற்பமுமாய் நிகழ்ந்திடுஞ்சகச நிட்டையேக்காலையு

* வருத்தனை எ-து பெருகுதல்.

மின்றென், ஞொருவிமற்றவையைச் சகசநிட்டையனை யுலகெங்குந் தேடியேயிடுமால். (௬௪)

முன்புறநிட்டைசவிகற்பமாகி முத்தியின்மூன்றுநின்றிலகும்
பின்புறநிட்டைநிருவிகற்பமதாய்ப் பிரமமற்றென்றுநின்றிலகும்
வன்புறந்நிட்டையிருமையுமுறினும் வரவுபோக்குடையதாய் நிகழும்
இன்புறிந்நிட்டைசகசமதாகி யிலங்கிநின்றிடுநின்றபடியே. (௬௫)

சவிகற்பநிருவிகற்பநிட்டையதுஞ் சத்துவகுணத்தில்வந்ததுவாம
இவிகற்பநீங்கிவருடமாயிரமங் கிருந்திடினும்பினும்விழிக்கும்
செவிதினிலடையுஞ்சகசநிட்டையதே திருவருடன்னில்வந்ததுவாம்
தவிருதல்கூடலின்றியேயங்குத் தங்கிநின்றிடுநின்றபடியே. (௬௬)

சகசநன்னிட்டையியல்புதம்முயற்சி சற்றொன்றுமின்றியே யருளால்
சகமதுப்போகமதுவுந்தம்முடலுந் தருகரணமுமவையெவையாய்
அகமதிலுதித்தததுமறையாம லகன்றநுபின்னுதியாமல்
அகமுரைகாயவருத்தமேயின்றி யமர்ந்துநின்றிடுநின்றபடியே. (௬எ)

அருளண்டமாகிலுயிர்பிண்டமாகு மண்டமுந்தோற்றன்மாத்திரமாய், அருளநின்றதாகிற் பிண்டமுமதுபோ லாகியேநின்றிடுமண்டம், அருள்வடிவாகிற பிண்டமுமுயிரா யருளிற்றுதான்பியமடையும், அருளந்தச்சிவத்துக் கங்க மதாகி யமர்ந்துநின்றிடுநின்றபடியே.

இருளினிலிருந்தும் பருவம்வந்ததற்பி னியற்றிடுமுயற்சியொன்றின்றி, மருளினிலடைந்து மருள்வடிவாகி வயங்கிடுஞ் சகச்மேபோல, மருளினிலிருந்தும் பருவம்வந்ததற்பின் வருந்திடுமுயற்சியொன்றின்றி, அருளினிலடைந்திங் கருள்வடிவாகி யமர்ந்துநின்றிடுநின்றபடியே. (௬௮)

மருள்வடிவதற்கு மஃதைநானென்றே மன்னுஞ்சீவனுக்கு மாதரவாய், மருள்வடிவமுதம் புசித்திடுமதுவே வயங்கிடுமற்றதையொருவி, அருள்வடிவமுத மூறிடவருந்தி யஃதுமிச்சீவனுங்காணாந்தே, அருள்வடிவதுவுஞ் சிவாங்கிசனுப்மா யமர்த்துநின்றிடு நின்றபடியே.

சாக்கிரமதனி னிற்குந்தத்துவத்திற் சாற்றுங்கேவலத்தினிற் சிறிது, நீக்கிமற்றதற்கு நிற்குந்தத்துவத்தை நிறுத்துதல்போலநின் மலமாய், சாக்கிரமதனி னீக்குதலின்றித் தத்துவமதனைத்துஞ் சுத்தத்தில், ஆக்கியேநிறுத்துந் திருவருளதனு லடைந்துநின்றிடுகின்ற படியே. (௬௧)

மருள்வடிவாகி யிருந்திடுமிடமு மருளதாய்ப்புசிப்பது மருளாய், அருளிதின்மறைந்து நிற்குமென்பதுவு மன்றியேநின்றமுன் போல, அருள்வடிவாகி யிருந்திடுமிடமு மருளதாய்ப்புசிப்பதுமருளாய், மருளிதின்மறைந்து நிற்குமென்பதுவு மாற்றிநின்றிடுகின்ற படியே. (௬௨)

சகசநிட்டையது லபித்திடுங்காலை தம்முபற்சியதொன்று மின்றிச், சகசமதாகித் தன்னுளமதனிற் றானின்றிங்கிடைவிடா தூறும், சுகவருளமுதமதனையேயருந்தித் தொள்வடிவதுமெள்ளக்கரைந்து, சுகவருள்வடிவாய்ச் சுட்டெடலாமருளாய்த் தோன்றிநின்றிடுகின்றபடியே. (௬௩)

அருளொளியிச்சை யதுதனி லுதிக்கி லசைவறநின்றிடுஞ்சித்தம்
அருளொளிஞானமதுதனி லுதிக்கி லகிலமவ்வருளதாய்த்தோன்றும்.

அருளொளிகிரியையது தனிலுதிக்கி லகத்தினின்றருளமுனூறும்
அருளொளியமுதமருந்தியவ்வடிவா யமர்ந்துநின்றிங்கின்றபடியே. ()

இருளுறுமவத்தை யடைந்தெங்குமிருளா யிருந்துபின்விழித்திடல்போலும், அருளுறுமவத்தை யடைந்தெங்குமருளா யமர்ந்துபின்விழித்திடுமென்னில், இருளுறுமவத்தைதமசினாலடைந்தே யிராசதத்தாற்பினும்விழிக்கும், அருளுறுமவத்தை சத்துவத்தடைந்தே யந்தராசதத்திற் பின்விழிக்கும். (௬௫)

மாயையிலடைந்த பின்பிருளவத்தை வந்தடையாதுபின்படைதன், மாயையின்றமசாலாதலாற்போக்கும் வரவுமாய்நிகழ்ந்திடுமதன்மேல், ஆயவவ்வருளை யடைந்தபின்மாயை யடைவதேயிலைபினுமடைந்தால், ஆயவவ்வருளையடைந்ததேயின்று மடைந்ததுமாயைசத்துவத்தால். (௬௬)

இருளினிலடைந்து தானுமவ்விருளா யிருந்தங்குநின்றதாயிடினும், அருளினிலடைந்து தானுமவ்வருளா யமர்ந்தங்குநின்றதாயிடினும், மருளினிலடைந்த வடிவநில்லாதுவடிவதிங்கிருத்தலேதென்னில், இருளருளவத்தை தனிற்குணபோதமிலங்கியங்கிருத்தலினன்றே. (௬௭)

சத்துவகுணமே வருத்தனையாகித் தங்கியேயுளத்தினுணின்றால், ஒத்துறநிட்டை கூடிடுமிலதே லொருவியிச் சகலகேவலத்தைத், தொத்துறுமன்றிக் குணமுமாயையினிற் றோன்றின தாத

லாலிந்த, ஒத்துறநிட்டை யுண்மையேயன்று முபாசகநிட்டையெ ன்றுணர்வாய். (கூஅ)

ஆதலிற்சகலகேவலசுத்த மடைந்திடலிங்குமாயையதாம், வாத னையொழிந்துங் குணமிருத்தலினிவ் வடிவகன்றிடிற்பினுஞ்சுத்த,சா தமுற்றிடுதலன்றியேவீட்டைத் தானடைந்திடுதலேயின்றும், ஏதமி லருளிலுண்மைநிட்டையினை யெய்தினோர்சீவன்முத்தர்களே ()

சீவனிம்மாயை தனின்முத்தனருளிற் சீவன்முத்தன்னடுவோ வின், மேவலிற்சீவன் றனக்கந்தவருளு மெய்ம்மூத்தன்றனக்குமா யையுமில், சீவன்முத்தனுக்கே ரியன்களைமீதிற் றிகழ்ந்திடுவோனை ப்போற்மேற்றன்றும், ஆவதுநாகங்கண்களிந்துதிக்கை யறிதல்போற்காக ங்கண்மணிபோல். (எ0)

அந்தரவடிவசீவன்முத்தர்களிவ் வடிசிலைப்புசித்ததே யின்றும், இந்தவிவ்வுலகிலிதுபுசித்திடுகென் றிந்நெறியோர்கணின்றிறைஞ்சித், தந்திடிலுணவுமளவின்றிப்புசிக்குஞ் சமித்ததுமலமதுமாகா, மந்திர மதனைவடிவதாக்கொண்ட மகிமையிலென்றுணர்ந்திடுவாய். (எக)

எங்கெங்குநோக்கின்மருண்மயமாகி யிருந்திடும்பந்தமாந் திசை யில், தங்குந்தன்வடிவ மருண்மயமாகித் தயங்கியேயன்றதுகுறிபோ ல், எங்கெங்குநோக்கி லருண்மயமாகி யிருந்திடுமுத்தியாந்திசையில் தங்குந்தன்வடிவமருண்மயமாகித் தயங்கியேயிற்குதல்குறியே. ()

அருள்வடிவதுவே பார்வையிற்றெரிக்கி லகப்படாதென்று நின்றிலகும், மருள்வடிவதுவே பார்வையிற்றெரிக்கில் வந்தகப்பட்டுநின்றிலகும், அருண்மருணவோமோவடிவதுவே யகப்படும்பார்வையொன்றுக்கே, மருள்வடிவுலகு மோவடிவோர்க்கு வாய்த்திடும் பார்வையொன்றுக்கே. (எங)

பழுதையிற்கிளிஞ்சில் கட்டையினின்றும் பாம்பும்வெள்ளியுங் கள்வனும்போல், எழுதரு * மாரோ பிதமதிட்டான மிலங்கிடிலிலாததுபோலும், முழுதுணர்சிவம்வந் துதித்தவிச்சீவன் முத்தருக்குலகமின்றுதித்தல், ○ கழுதிரதம்போற் காட்சிமாத்திரமாய்க் கவும் விவகாரமேயின்றும். (எச)

கனவதுபோல்விவ காரமுண்டென்னிற் கனவதுநீங்கியேவிழித்தால், கனவிதென்றுணரு மாங்கவர்தமக்கக் கனவுவந்துதவுநலுண்டோ, கனவுமுன்கண்ட நினைவுமாத்திரமாய்க் காணுறுமகற்றதுபோலக், கனவிந்தவுலகுஞ் சீவன்முத்தருக்குக் காணன்மாத்திரமதாய்நிகழும். (எரு)

சொற்பனமதனிற் கனவிதென்றிடுமோர் சொற்பனசாக்கிரநடுவே, நிற்பனபோலு மருண்மருண்டுவே நின்றிடும் பிரணவவடிவம், சிற்பரசிவன் முத்தனவ்வடிவாய்ச் செகமிதுஞ் சிவம

---

* ஆரோபிதம்=ஒன்றின்செய்கையை மற்றொன்றிலறிதல். (உ-ம்.)—கிளிஞ்சில்வெள்ளி. ○ கழுதிரதம் எ-து கானற்சலம்.

துந்தோன்ற, நிற்பனதனக்குநிழலின்றிநிழற்போ னிலத்தடியின்றி
யேநிகழும். (எசு)

வெந்துறுபடமுய்வறுத்திடும்வித்துப் விளங்கிடுங்கானலிற்சலமுய்
இந்திரதனுவுங் ணலிருந்தகன்ற விடமதாமிங்குமுன்னிருந்த
முந்துறுகடமுங்கடமதையெடுத்து முடிந்தபின்றிகிரியிற்சுற்றும்
கந்துறுநகரும்போன்முத்தர்வடிவுங் காட்சிமாத்திரமதாய்நிகழும். ()

மண்ணினின்றடுக்கச்சலத்தினினைக்க வருங்கனலிற்சுடவளி யாய, நண்ணினின்றசைக்கவெளியிடயவிடவே நணுகிடாதென்றுநின் றிலகும், புண்ணியசீவன்முத்தர்தம்வடிவம் பொற்புறவ்வடிவுகண்ட ளவே, விண்ணின்மண்ணினிற்பாதலத்தினினுள்ளோர் வியப்பொடு மெழுந்திறைஞ்சிடுவார். (எஅ)

மூன்றுநற்சுடரினினையொப்பவராய் மூன்றுகாலமுமுணர்ந்தவராய்
மூன்றுலகத்துமுவமையில்லவராய் மூன்றலகுமறிந்தவராய்
மூன்றுநற்காண்டமுந்தெரிந்தவராய் மூன்றுசிற்பதமுமுற்றவராய்
மூன்றுமுன்மலமுமொருங்கறுப்பவராய் மூனறுதாபமுமகன்றவராய்.

அகவிருண்மாயைகருமமிம்மூன்று மகற்றியேசுத்தங்கமாக்கித்
தகநிறுத்திடுதல்கையதாமப்பாற் றன்னுயிராகியேநிகழும்
சுகசிவவுதயமாக்குதநீயாஞ் சொற்றிடுதீக்கையினருத்தய்
ஜெகமிதிலவையிற்பாவனைகடந்து செய்தங்குநிறுத்தவல்லவராய். ()

பிரணவவமுதேபுசித்தனுதினமும் பிரணவமயமதேயாகி
மரணமதுறுமிம்மனிதரைப்போல வடிவமாத்திரமேதோன்றிப்
புரணநல்லொளிக்குமாயைக்குநடுவே புகுந்திருந்திலங்குநற்குருவைச்
சரணெனவடைந்திங்கவனருளாலே தரிக்கப்பெற்றங்கத்திலிங்கம்.

தேகமும்பொறியுங்கரணமுமுயிருந் திரிவுறுமாயையின்மயக்கை
ஏகநின்றகற்றித்தீக்கையிலாசா னிவைக்கதிட்டானமந்திரமே
ஆகநின்றமைத்த்வகைகுருவருளா லறிந்ததிற்பாவனை திடமாய்
ஊகமதுடனேமுன் னினைவகற்றி யுளத்தினிற்சகசமேபிறந்து. (அ௨)

இக்குலந்தனக்கிச்சமயமதென்றிங் கியம்புதலிலையதனாலே
இக்குலந்தனைவிட்டெச்சமயத்து மெய்துதனியாயமதாகும்
இக்குவலயத்திலெச்சமயத்து மிலங்கிடுஞானமுண்டதனால்
இக்குவலயத்திலெச்சமயத்து மியற்கையைவிட்டிடலாகா. (அ௩.)

அன்னியசத்தங்கவருதலகற்றி யன்னியரசனையுமகற்றி
அன்னியரூபநோக்குதலகற்றி யன்னியபரிசமுமகற்றி
அன்னியசத்தங் கேட்குதலகற்றியன்னியநினைவதுமகற்றி
அன்னியருடனேயிணங்குதலகற்றி யன்னியருறைவிடமகற்றி.(அ௪)

அன்னியர்கையில்வாங்குதலகற்றி யன்னியர்க்கீகுதலகற்றி
அன்னியகடவுள்வணங்குதலகற்றி யன்னியகிரியையுமகற்றி
அன்னியநூலையோதுதலகற்றி யன்னியகேள்வியுமகற்றி
அன்னியபாகமருந்துதலகற்றி யன்னியவகையறத்துடங்கி. (அ௫)

சமயநற்கிரியையனைத்தையும்விடினுந் தனக்கந்தப்பிரணவவமுதம், அமையநின்றூறியதனையேயருந்தி யவ்வடிவாயிடுமெளவும், சமயிகன்பாகமதனையேகொண்டு தற்பரநிவேத்தியம்புரியும், அமைதியைவிட்டான்மேற்கொளாதென்ப தறிந்ததைநியமமாய்க்கொள்ளும். ()

புரிசடையோனுக்கற்பித்துக்கொளினும் பொருந்தியபொருளதேவேண்டும், திரிவின்றியொன்றாய்ப் பாவித்துக்கொளினுஞ் செல்லல்போலொழுங்கதேவேண்டும், அரியநல்லறத்தைவேண்டிடிற்பொருளு மறமதாயீட்டவேண்டிடும்போல், உரியதற்சமயத்தொழுங்கினிற்புசித்தா லுளத்தழுக்கின்றியேவதியும். (அ௭)

ஞானிசங்கமத்துக்கிந்நெறியதனை னவிற்றிடுஞ்சாதியுஞ்சமயத்
தீனமிலாசாரமும்விசாரித்த•லியற்கையேயன்றெவரேனும்
ஊனமிலங்கந்தனிலிங்கமொன்றே யுளபிரமாணமாய்க்கொண்டங்
கானநற் * பயிக்கமவர்மனைதோறு மங்ஙனே யேற்றருந்திடலாமால். ()

சடுத்தலமதினுமிலிங்கமேயாகித் தானெனல்விடுத்தருந்தியபின் கொடுத்தவன்றானுங் கொடுத்திடுபொருளுங் கொள்ளுவோன்றானு மொன்றாக, அடுத்தவிம்மாயாவடிவதை நோக்கியகற்றியவ்வோமய மாக, விடுத்தனுதினமும் புசித்திடிலனைத்தும் ! விமல ? வோமயம தாய்விடுமே. (அகூ)

இன்னதன்மையவாஞ் சுத்தபாவனையி லிரும்பிராரத்தம்போ யொளித்துத், தன்னதுணின்றிங்கிடைவிடாதுறுந் தக்கதோர்பிர ணவமுதம், அன்னதையருந்திமுன்வடிவதுவு மங்ஙனமோமயமா கி, இந்நிலமதனிற் 0 றோற்றன்மாத்திரமாயியங்குதல் சீவன்முத்திய தே. (கூ0)

அறிவிலாக்குழந்தைப்பருவத்தின்முலைப்பா லருந்திடுங்குமாரங் காளையினில், அறிவிலாக்குழந்தையருந்துதல்கண்டு மதினசைசகச மாயிலதின், அறிவிலாச்சீவத்துவப்பருவத்தி னருந்திடுமாயையினு ணவை, அறிவிலாச்சீவருந்துதல்கண்டு மதினசைசகசமாயின்றாம்.

அனமதும்பாலுஞ்சருக்கரைகண்டுமங் கனிவகைகளுந் தேனும்
இனமவையொன்றாய்க்கூட்டியருசியி னிதயனின்றிடைவிடாதுறும்

---

* பயிக்கம் எ-து பிச்சை. ! விமலம் எ-து மலநீக்கம்.

? ஓம்=பிரணவம். 0 தோற்றல்மாத்திரம் எ-து சட்சுநீங்கலாக மற்றைய ஸ்பரிசம்முதலிய நான்கு இந்திரியங்களால் அனுபவிக்கப் படாம்.

கனபிரணவவமுதத்தையேயருந்திக் களிப்பவர்மீட்டுமிச்சகத்தின்
பினமுறுவிடயவின்பையெண்ணிடுமோ பிராரத்தமும்மிலையவர்க்கே.

உபயநல்லமுதேபுசித்தனுதினமு முபயமேவடிவதுவாகி
அபயமென்றுனைக்குமுயிர்களுக்கிரங்கி யஞ்சலென்றவர்களைநோக்கி
உபயவந்நெறியின்பயனைமுந்நுணர்த்தி யுபநிடச்சுருதிநின்றுரைக்கும்
அபயமற்றொன்றுமிலாதவிந்நெறியே யனுக்கிரகம்புரிந்திடுமால். ()

இந்நிலைசின்னுட்சீவர்கணிமித்த மிருந்தனுக்கிரகமேபுரிந்தும்
தந்நிலையதனினின்றருளமுதந் தான்புசித்தருண்மயமாகி
அந்நிலைபரமமுத்தியிற்சிவத்துக் கங்கமாய்நிகழுமுன்போலென்
றிந்நிலைசாமத்தசிப்தமுனைக்கு மிதுசிவாத்துவிதமென்றுணர்வாய். ()

என்றெனையாண்டவிருத்தவம்பிகையே யிதயத்துய்விளக்கிவா
க்குள்ளும், நின்றுரைத்திந்தநெறிசொலுமருத்த நினக்கும்வாய்த்திடு
மென்றுவாழ்த்திச், சென்றெனதுடலுங்கரணமுஞ்சகமுஞ் சேர்ந்
திடும்போகமுந்தானுய், நின்றனள்கண்டேனிதற்குக்கைம்மாறென்
னிருமலைவாழிநீடூழி. (கரு)

சுத்தசாதகம் - முற்றிற்று.

பாயிரம் உட்பட - கoக.

40 50
XI. B
6(1)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

மூன்றாவது.

# விஞ்ஞானசாரம்.

காப்பு.

பாயிரம்.

விநாயகர் - துதி.

அஞ்சுகரமுடைக் - குஞ்சரந்தனைத்
தஞ்சமென்றுநில் - கொஞ்சமொன்றுமில்.

வேறு.

[பெரியநாயகியார் - துதி.]

அமலபஞ்சகிருத்தியங்கண்டத்துமதற்காதார மாகினாளை, விமலருளத்தகலாளையெனையொர்பொருளாயாண்ட விஞ்சையாளை, நிமலமுதுகிரியிலமர்பெரியநாயகியையொரு நிமலைதன்னை, மும்மலவிருட்கிரவியையென்கண்மணியைப் பணிந்திடுவாமூன்றுபோதும். (க)

வேறு.

இதுவுமது.

ஊனாயுழல்வென்றனையாண்ட வுமையேபரையேயுயிர்க்குயிரே
தானாய்நிகருஞ்சுயவொளியே தாயேவிருத்தவம்பிகையே

ஞாஞனந்தரசம்விளக்கும் ஞானசாரமெனக்கருளி
நாஞய்நீயேயென்னுடைய நாவினின்றுமுரைசெய்வாய். (௨)

அருளுமுமையினடிபணிந்தே யஞ்ஞானத்தின்றிமிரகன்று
மருளுமயமுமில்லாத மாவீட்டின்பாசம்விளங்கச்
சுருதிநெறியிற்பிசகாது சொல்லார்த்தங்கடமையமைத்திவ்
வொருவிஞ்ஞானசாரமதை யுரைத்தேன்பரையினருளாலே. (௩)

பாயிரம் - முற்றும்.

## நூல்.

முன்னாட்புரிந்த தவப்பயனான் முதல்வனொருவனுளனென்றே
அன்னான்பணியேமுத்திபத மடையக்கூட்டுமெனவெண்ணிப்
பின்னாசான்முன்னுருமூன்றும் பேணியொழுங்கிற்சாதனங்கள்
மனனொன்றினையுமுடையோனே வகுத்தவிந்நூற்குரியவனாம். (௧)

சத்யாசத்யவத்துவினைத் தகவேபிரித்துத்தானறிதன்
மித்தையானபோகத்தின் விராகம்பெறுதல்சமையாதிக்
கொத்தானவைகளோராறுங் கொள்கைதனிலேபெற்றிடுதல்
அத்யான்மீகமுத்திதனி லபேட்சையாதலிவைநான்காம். (௨)

சித்தப்பிரகாசத்தையுறிற் சேருநான்குசாதனமும்
சத்திநிபாதந்தான்பிறக்கிற் சாருமொளிசித்தந்தனிலே
ஒத்துவினைகடள்ளுபடி னுண்டாஞ்சத்திநிபாதமதும்
பத்திபுரியினருவடிவிற் பண்டார்வினைகள்சமமாகும். (௩)

விடயமதின்மோகியைப்போல விமலந்தானேயுருவாய்
அடையுமெனவேகண்டவுட னடிகள்பரவியன்பாகத்
தடைகளிலதுசாயமனந் தனமீந்திடிற்சார்ந்திடுகன்மம்
உடையுமலதுமற்றொன்று முடையாதிதுவேயொழுங்காமால். (௪)

தந்தைதனதுசுதர்கையின்முன் றந்தபொருளைத்தானேபின்
சிந்தைமகிழ்ச்சியுடனிறக்குஞ் செய்திபோலருவடிவாய்
வந்துசிவமேயிரப்பாக வாங்குந்தனதுமாயையினை
இந்தவகையையுணர்ந்தீயி னிரியும்வினைகளென்றறிவாய். (௫)

மூன்றுவடிவாய்மும்மலத்தை மூன்றுபங்காய்த்தானகொண்டு
மூன்றுங்கெடுத்துநமதுடைய மூன்றுபொருளும்பங்காக்கி
மூன்றுவடிவுங்கைக்கொளவே மூன்றுமுதலுமானசத்தே
மூன்றுவடிவாமெனப்பொருள்கண் மூன்றுமீந்தேபணிபுரிக. (௬)

இந்தத்திறனிற்பணிவிடைக ளியற்றிவினைகள்சமமாகில்
அந்தத்தடங்கவொத்துநிற்கு மந்தத்தராசினைவேபோல்
புந்திக்கிலேசமேயின்றிப் போதஞ்செவிதாம்வினைகள்கெடும்
சந்திப்பதுவாமப்பொழுதே சத்திநிபாதந்தான்பிறத்தல். (௭)

சத்திநிபாதந்தான்பிறந்து சாற்றுமந்தக்கரணங்கள்
சுத்தியதாகினவ்விடத்திற் றோன்றுநான்குசாதனமும்
எத்திறத்தானும்வேறொன்றா லெய்தாதெய்திற்றாயினும்பின்
குத்திரமாகிப்போமெனவே கொள்ளார்மேலோரீதன்றி. (௮)

சத்யாசத்யவத்துவினைத் தகவேபிறித்துத்தானறியில்
கொத்தாய்மற்றையமூன்றுங் கூடவுடன்வந்தவனையுறும்
அத்தாலதுநீயொன்றுரைக்கு மமல்வாக்கியப்படியே
ஒத்தாற்பிரமந்தானேயே யுணருங்குருவினருளாலே. (௯)

இந்தநான்குசாதனமு மில்லாதவர்கட்கொருக்காலும்
அந்தஞானம்வெளியாகா தங்கிநயனத்தொடுதோன்றிப்
பந்தமறவேயுறைத்திடினும் பாழுக்கிறைத்தநீரொக்கும்
முந்தநான்குசாதனமு முத்தியடைவோர்க்குறவேண்டும். (௧௦)

பண்டித்தலத்தையுழவாளர் பண்டிமுகத்திற்கொழுப்பிணிக்கின்
மண்டித்தடையற்றுழுமஃதின் மயக்கமுடையோர்க்கறிவருளின்
மிண்டிப்பயமுமறமும்விட்டு வேண்டும்படியேசரிக்குமெனக்
கண்டித்திறத்தோர்க்குபதேசங் கழலார்ஞானசற்குருவே. (௧௧)

இந்நேர்நெறியிற்சாதனங்க ளிவைநான்கினுய்வர்தெய்தியதேல்
தன்னேர்குரவன்றனையடைந்து சாற்றுஞ்சீடாசாரமுறை
அந்நேர்பிசகாதேவல்புரிந் தருடன்மீதிற்சுரப்பளவும்
பின்னேதிரிந்துமவன்கொடுக்கப் பெறவேவேண்டும்விஞ்ஞானம். ()

ஞானமார்க்கமிருவகையாய் நவில்வர்விகங்கப்பிபீலிகையென்
றூனவவையில்விகங்கமே யமலவேதமுநுவதனில்

ஞானமாகுமபிமீவிகையே கவிறந்திரத்தின்ஞானமாம்
ஆனவிகங்கத்துணராமற் றதீனின்வழியேயுணர்ந்திடுவாய். (கங)

ஆசான்மாணுக்கன்னுடைய வதிகாரங்களவைபார்த்தே
பேசாநிற்குமவிகங்கமதைப் பிரமமொன்றுமேமெய்யாய்
மாசாருலகம்பொய்யாக மாணுக்கன்றனனுபவத்தில்
தேசாய்விளங்கியக்கணமே சிரத்தைபிறந்துதிடமாக (கச)

தோன்றுமுலகமெய்யாகிற் றோன்றுமதிலேவிடயங்கள்
தோன்றுமந்தவிடயமதைத் தோன்றவறியவைம்பூதம்
தோன்றுமிந்திரியந்தோன்றுந் தோன்றுமந்தக்கரணங்கள்
தோன்றும்புருடன்காலபரந் தோன்றும் *வியோமம்பரந்தோன்றும்.

உலகமெதினின்றுதித்திடுமென் றுன்னிநோக்கினிவனவதனில்
இகலிவுதிக்குமெனவினைவு மெதினின்றுதிக்குமெனநோக்கில்
திலக்வறிவுதனிலென்றே சேரவனைத்துமறிவானல்
கலகமிடுதத்துவமெல்லாங் கலங்காவறியாயேகணையும். (கரு)

உலகமிலங்கும்வகையுண்டா யுதித்தின்பமதாயுருநாமத்
திலகவிளங்குமிவையைந்தி லியம்புமூன்மூன்றங்கிசமும்
குலவுசொரூபசம்பந்தங் கூறும்பினிரண்டங்கிசமும்
கலகமாயாசம்பந்தங் கருதிநோக்கிற்கற்பிதமே. (கஎ)

மூன்றங்கிசமுமதிட்டானமொழியும் பினிரண்டங்கிசமும்
ஆன்றவதிலாரோபிதமா மதனுற்சொரூபங் ? காரணமாய்த்
தோன்றுமுலகுமசத்தாகுஞ் சொரூபமொன்றேசத்தாகும்
ஊன்றிநோக்கிலெக்காலு முளதேதோன்றுமிலதிலதே. (கஅ)

நாமரூபந்தனைமெய்யாய் நாடுமிடத்தின்முப்பொருளாம்
நாமரூபந்தனைப்பொய்யாய் நாடுமிடத்திலொருபொருளாம்

* வியோமம் என்பது சிதாகாசம் ? காரணம் என்பது மூலகாரணம்,

நாமரூபந்தனைமெய்யாய் நாடிற்சீவனவனேயாம்
நாமரூபந்தனைப்பொய்யாய் நாடிற்பிரமமவனேயாம். (௧௯)

ஆடியதனிற்றோன்றுநிழ லதுபோல்விகற்பந்தீர்ந் தறிவில்
கோடிவிவிதசகந்தோன்றுங் கொளுங்காரணகாரியமின்றி
நாடிவேறுபோற்பாய்த ளுகாதத்தாற்றன்னிழலை
ஓடிப்பாயுமதுபோலென் றுரைப்பர்பிரமவாதிகளே. (௨௦)

ஒருவிகற்பங்களுமில்லா வொன்றாய்பிரமமதினின்றே
ஒருவிகற்பநினைவாலே யுலகுசீவபரமாகும்
ஒருவிநினைவைமுப்பொருளு மொடுங்குமதுவேமுப்பாழாம்
ஒருவிகற்பநினைவதனுக்குக் குதிக்கவொடுங்கவிடமதுவே. (௨௧)

தனதுமாயைதன்னாலே தனையேயனேகமாய்க்காணும்
தனதுஞானந்தன்னாலே தனையேயேகமாய்க்காணும்
தனதுசத்தியிவையிரண்டுஞ் சத்திமானுந்தனையன்றி
தனதுசத்திவேறாகா ததனாற்றானேதானிகழும். (௨௨)

என்றுநிலையிலொருபடியா யிருந்துதனையேகண்டிருக்கச்
சென்றுநினைவிற்பரசீவ செகமாய்விரியுமுன்னிலையில்
நின்றுநினைவைத்தானொடுக்கி னேரேமூன்றுஞ்சென்றொடுங்கு
மென்றுகண்டோன்மூன்றாய்பா ழிறந்தசொரூபமேயன்றோ. (௨௩)

அடியுமுடியுநடுவுமிலாவகண்ட வொளியாமொருதனையே
கடியநினைவாமாயையினாற் கலங்கிவேறாயனேகமாய்ப்
படிகமலையிற்சுணங்களைப்போற் பார்த்தலெனவேயதிட்டான
முடிவிறன்னைத்தான்கண்டே மோகமின்றிப்பார்த்திருப்பர். (௨௪)

இந்தநெறியிலுணராதார்க் கியம்பும்பிபீலிகையினெறியை
வந்தவழிக்கும்போம்வழிக்கும் வாதமின்றியொழுங்காகப்
பந்தமவையைநியதிகொடு பார்த்தேயொன்றொன்றாயகற்றி
எந்தப்பொருளுநின்றதைக்கண்டே யெல்லாமதுவாயுணர்ந்திடுக. ()

வந்தவாறுநெறியுணாக்கின் மாயைதோன்றும்பிரமத்தில்
அந்தமாயைதனிலீச னகிலவிடயமாய்நிற்கும்
இந்தவான்மாமற்றவையி லேகதேசவிடயமாய்
வந்தவாறேயொடுக்கிவிடில் வயங்கும்பிரமமேயென்றும். (உ௭)

அந்தப்பிரமந்தனினின்றே யநிர்வாச்சியமாம்பினைதோன்றும்
அந்தப்பினையின்மாயைவரு மதனிற்பரதத்துவமதனில்
வந்தப்படியேவியோமமதில் வருங்காலபரமதினின்றே
தொந்தப்புருடன்புருடனிலே தோன்றும்பகுதிபகுதியின்மான்.

மதியினகங்காரந்தோன்றி வகுத்தமூன்றுகுணமாகும்
அதிகசாத்துவிசகுணத்தி லாகுமனஞானேந்திரியம்
விதியாயிராசதகுணத்தில் வெளியாய்கருமவிந்திரியம்
ஒதியதமசுகுணத்தினு லுண்டாந்தன்மாத்திரையைந்தும். (உஅ)

அவையைப்பஞ்சீகரிக்குமிடத் தாகுமைந்துமாபூதம்
இவைகளிருபத்தெட்டுமுட னியம்புமாயைபின்னையுமே
கவைசெய்முப்பதாகுமிவை கண்டப்படியேதானொழுங்கில்
சிவையினருளாணியதிபணிற் சேரும்பிரமந்தானகை. (உ௯)

முப்பதினையுநீங்கிநிற்க மொழியுமவத்தைபத்தாகச்
செப்புநனவுகனவினுடன் சிவசுழுத்திபரநனவு
வெப்பமகன்றபரகனவு வியோமஞ்சிவசாக்கிரங்கனவு
ஒப்புமிலதுமூன்றும்பா மூண்மையானகுருவொன்றே. (௩0)

**வேறு.**

நனவுதனில்விசுவன்கன வினிற்றைசதனாகும்
நண்ணரியசுழுத்தியினிற் பிராஞ்ஞன்பரநனவில்
கனவிராட்டன்கனவி லிரணியகெர்ப்பனுமாங்
கருதரியபரப்பாழி லவ்வியாகிருதன்

உனவரியசிவகனவிற் சிற்சொலிதைவிசுவம்
ஒடுங்கியிடுஞ்சிவகனவிற் பிரசாபத்தியனும்
வினவரியபின்னேயினிற் பொற்புவிசாந்தனுமாய்
விளம்பிடுவரபிமானி யவத்தையொன்பதினுமே. (௩௧)

நனவதனிற்பூதஞ் சூக்குமபூதமறியும்
ஞானவிந்தியங்கன்ம விந்திரியமிவைகள்
கனவதனின்மனமதி மற்றகங்காரமூன்று
கருத்தொடுங்குஞ் சுழுத்தியினின்பகுதிபரநனவில்
அனபுருடன்பரகனவிற் காலபரன்வியோமம்
அதீதமதிற்சிவநனவிற் பரதத்துவமந்தக்
கனவதனின்மாயையுப சாந்தமதிற்பின்னே
கண்டிவ்வொழுங்கினி லகற்றிற்காணுமந்தவீடே. (௩௨)

## வேறு.

பிண்டந்தானுய்நின்றறிவைப் பிறிக்கிலந்தவனுபவத்தில்
அண்டந்தானுய்நின்றிடுமற் றந்தவறிவைத்தான்பிறிக்கில்
கண்டவிவைகட்குட்புறம்பாய்க் கலங்காவறிவாய்நிகழுமிதை [ம்
உண்டபொழுதேபொனிற்பணிக ளொன்றும்போற்சித்தொன்றேயா

பூதநீங்கிற்பகுப்புபோம் பொறிகணீங்கிற்காட்சிபோம்
ஓதந்தக்கரணம்போகி லுள்வாதனைபோமிருள்போகில்
போதந்தோன்றும்புருடன்றுன் போகிற்சர்வஞ்ஞத்வாதி
போதம்போகுங்காலபரம் போகிலவ்வாதனைபோகும். (௩௪)

லுந்தவியோமநீங்கியிடில் வாங்குமிரண்டாம்பாழ்பரத்தின்
தொந்தநீங்கிலுலகமபோந் தோன்றுமாயைதானீங்கில்
பந்தமுறுமவ்வாதனைபோம்பகர வொண்ணுப்பினைநீங்கில்
அந்தமூனறும்பாழ்போகு மனைத்துமானசிவந்தோன்றும். (௩௫)

ஏதேதகன்றததுமுனனை மியற்றுந்தொழில்கடன்னிடத்தப்
போதேயகன்றவ்வனுபவத்திற் போக்கவேண்டுமெலாமகற்றி
ஈதேயுளமற்றவையெல்லா மில்லதென்றேயுணர்ந்தவையும்
ஈதேயெனக்கண்டச்சிவத்தை யிடைவிடாதேபார்த்திருப்பார். ()

நேரேநெறியிலடைவோர்க்கு நியதிநெறியிலடைவோர்க்கும்
ஊரேதொன்றேயோரொருவர்க் கோரொன்றதனிற்சயமதமாய்
ஆரேயெனினுமிவையிலொன்றி லாசானூன்மாணுக்கனுத்தூல்
சாரேதொன்றுமில்லாத தனிவீடேதாமாகுவரால். (௩௭)

அறையிவ்வொழுங்குகளிலொன்றி லாசானூன்மாணுக்கனெவ்வக்
கறைசெய்யைம்பூதங்கண்முதற் கழன்றுணுதபினையீறாய்
இறையேயெனினுயவேறின்றி யெல்லாந்தானேயேகண்ட
நிறைவோரறிவின்மகிழ்ச்சியினு னின்றுகூறுநிலைகேளாய். (௩௮)

நானேயென்றுமெவ்விடத்து நன்றாயுண்டாயிருக்குகேன்
நானேயென்றுமெவவிடத்து நன்றாய்த்தோன்றிவிளங்குகேன்
நானேயென்றுமெவவிடத்து நன்றாயின்பமாய்நிகழ்கேன்
நானேயென்றுமெவ்விடத்து நன்றாய்விளையாடாநிற்கேன். (௩௯)

உண்டாயென்றுமெவ்விடத்து முளதாயிருத்தலென்சத்தே
உண்டயென்றுமெவவிடத்து முளதாய்விளங்கலென்சித்தே
உண்டாயென்றுமெவ்விடத்து முளதாமின்பமென்னின்பே
உண்டாயென்றுமெவ்விடத்து முளதாமென்னுள்யான்மகிழ்கேன்.

இருந்தேதோன்றியிடவேண்டு மெந்தப்பொருளேயானாலும்
இருந்தேதோன்றியிடும்பொருளே யின்பமாகியேநிகழும்
இருந்தேதோன்றுமெவ்விடத்து மென்றுநிகழ்வலாருநானே
இருந்தேதோன்றுமென்னிடத்தி லின்பமாயானேமகிழ்கேன்.

எனதுசுயலீலையினாலே யென்னைத்தானேநானாவாய்
எனதுசத்திதன்னாலே யின்னுனன்னுனிதுவதுமற்

றெனதுபிறரதிதுவதுவென் றெண்ணிமானமுடைத்தாகி
எனதுகண்ணேயான்றனே யிருந்துவிளையாடாநிற்கேன். (௪௨)

எங்கும்விடயமாய்நிகழு மீசனானையங்கங்குத்
தங்குமுயிர்களவைநானாய்ச் சாற்றுஞ்சங்கற்பமுநானாய்
அங்குநாமரூபமதை யையஞ்செய்யுமனநானாய்
அங்குத்துணியுமதிநானா யபிமானங்காரமுநானாய். (௪௩)

சித்தநானாய்ச்சத்தமுன்னாய்ச் செப்புங்கந்தமீறாக
ஒத்தவிடயமைந்தினையு முணருஞானேந்தியநானாய்
சத்தமுதலைந்தினையுணர்ந்து சாற்றும்வசனாதிகள்செய்ய
வைத்தகருமேந்தியநானாய் வகுத்துவிளையாடாநிற்கேன். (௪௪)

உம்பர்நானாய்நரர்நானா யூர்வநீருறைவநானாய்
வெம்புமிருகங்களுநானாய் விகங்கமொடுதாபரநானாய்
அப்புநானாய்ப்புவிநானா யனலுநானாய்வளிநானாய்த்
தம்பவாகாயமுநானாய்த் தானேவிளையாடாநிற்கேன். (௪௫)

தந்தைநானாய்த்தாய்நானாய்த் தனையர்நானாய்த்தமர்நானாய்ச்
சிந்தைமகிழ்தாரமுந்தவனுஞ் செப்புதமையன்றம்பியுடன்
விந்தைபுரிபூடணநானாய் வீடுதாதாபொருளானாய்
புந்திமகிழ்கூர்தலுநானாய்ப் பொருந்திவிளையாடாநிற்கேன். (௪௬)

தோற்றநானாய்த்திதிநானாய்த் துடைத்தனாய்த்திரோபாவம்
ஏற்றமானவனுக்கிரக மிரண்டுநானாயிவையைந்துள்
சாற்றலானதொழிலினைத்துந் தகவேயடக்கியன்றமுத்தல்
தேற்றமானசத்தியினாற் றிருந்தவிளையாடாநிற்கேன். (௪௭)

தங்கத்தனக்தவிதமாகித் தானேநிகழும்பணிதியெல்லாம்
தங்கத்தினுக்கோர்காலையினுந் தான்வேறாகத்தோன்றாதின்
பங்கற்றொளிருமென்னிடத்திற் பலவாய்நிகழுஞ்சகமுழுதும்
பங்கற்றொளிரும்யானென்றே பார்த்துவிளையாடாநிற்கேன். (௪௮)

சத்தையன்றியொருபொருளுந் தானேயுண்டாயிருக்குமோ
சித்தையன்றியொருபொருளுந் தேஜசுண்டாய்விளங்குமோ
மித்தையானசகமுழுதும் விளங்குமதினின்றதினாலே
எதனைநோக்கிமகிழ்ந்திடினு மியானேயென்றுமியான்மகிழ்கேன். ()

நித்தமாகியேநிற்கி னிகழுங்கால * பரிச்சேதம்
ஒத்தபரிபூரணமாகி லோதுந்தேசபரிச்சேதம்
மத்தமானதேகமேயாகின் வத்துபரிசசேதஞ்
சித்தமாகியிம்மூன்றுஞ் செல்லாவென்னுள்யான்மகிழ்கேன். (௫௰)

சத்தைவேறென்றிலாமையினாற் சாதிபேதமதுமாயை
சித்தைவிடவேறிலாமையினாற் செப்பும்விசாதிபேதமது
மித்தைநிரவயவமாகின் வேறுவேருஞ்சுவகதமும்
மித்தையானவென்னிடத்தின் மேவிவிளையாடாநிற்கேன். (௫௧)

என்னையெனதுநினைவினா லிதுவாய்நானாவாய்க்காண்கேன்
என்னையெனதுநினைவிலதி னேகமாயதுவாய்க்காண்கேன்
என்னையன்றியொருபொருளு மிங்குமங்குமிலையதனால்
என்னையிங்குமங்குமா யானேகண்டுநான்மகிழ்கேன். (௫௨)

எல்லாநானாயன்றுமுத லிருந்துவிளையாடாநிற்க
எல்லாம்வேறென்றெண்ணியே யிருந்துமோகமடைந்தேனை
எல்லாமுடையவருட்சத்தி யிரங்கிமோகமறவீச
எல்லாநானாய்ப்பண்டைப்படி யிருந்துவிளையாடாநிற்கேன். (௫௩)

இதுவேதுணிவென்றறியாதா ரென்றுநீந்தாரிடர்க்கடலை
இதுவேதுணிவென்றறிந்தோர்க ளென்றுநீந்தார்சுகக்கடலை
இதுவேவேதமுறைப்பதுவு மீசன்முதலோரனுபவமும்
இதுவேதுணிவென்றங்கையினி லெடுப்பேன்மழுவைச்சத்தியமே. ()

* பரிச்சேதம் - எ-து எல்லை.

இத்தரா னைமகிழ்ச்சிபுனோர்க் கெம்புஞானசரிதைப்படி
அத்தவூழேழின்றிமேற் றனைகளெல்லாமென்றிமோல்
வத்தேவர்மானிடர்க்கு மாதர்முதலோர்சங்கமில்லா
அந்தவூழேழின்றிடல்போ லாமென்றறைவோர்கற்றுணர்ந்தோர்.

குலத்தையுடையோர்தங்களுக்குக் குலாசாரத்தின்வழிநிற்கும்
நலத்தையுடையசமயிகட்கு நவிற்றுநெறியேதானிற்கும்
பலத்தையுடையஞானிகட்குப் பாரும்படியேதானிற்கும்
வலத்தையுடையவூழென்றே வகுத்தேயுணர்ப்பருயர்ந்தோரே. (௫௬)

விடயமீதி லுபாதியு மேவுமுயிர்மேனணியருளும்
அடையுமாசான்மேலன்பு மந்தப்பிரமஞானமுமே
தடையேயின்றிவைநான்கோர் தனுவாயுடையோர்தமைஞானம்
உடையோரென்பரல்லாரை யுரைப்பர்சோரஞானியென்றே. (௫௭)

ஆசாரங்களவையில்லா வசடரிடத்தில்விஞ்ஞானம்
தேசாய்விளங்காதபரமதுஞ் சிறப்பேயின்றிச்சண்டாளர்
மாசார்பாண்டந்தனிலுறையுங் வான்கங்கையினீரினிழிவாம்
ஏதாகிலுய்யோக்கியத்தானத் திருந்தாற்பிரகாசத்தையுறும். (௫௮)

கானறசோற்றின்விடயமதைக்கண்டு முனங்கைவிடுத்தொழிந்தே
ஆன்றவாசானடிபரவி யமலவேதநெறிசென்று
தோன்றவனுபூதியிற்பரம சுகத்தையடைந்தோர்பினும்பெய்த்தோர்
போன்றவிடயமேவிடுமோ பொருந்திலவர்ஞானியையோக்குய. ()

இயமநியமத்துடையரா யெழிலார்ஞானயோகாய்
உயர்நற்குருவினருளாலே யோகஞ்ஞானநிவிர்த்தியையுய
சுயசித்தாந்தவாதியையுந் தோன்றுமனுபூதியிலடைந்தோர்
பயனில்விடயந்தனைவிரும்பார் பற்றுயுழலுமற்றையரே. (௬௦)

---

* உபாதி=வெறுப்பு.

மனனசமாதியுடையோர்க்கு வகுத்தவியமநியமமுமில்
சனனமரணவித்தான தகுநீடிருளுநிவிர்த்தியுமில்
தனநற்பரமானந்தமதுங் கைகூடாதுதான்வாளா
மனனமதிலேமகிழ்வெய்தி வசனஞ்செயுமுன்படிமயங்கும். (௬௧)

அந்தரங்கத்தொருவனையோ ரரிவையொருத்திதான்புணரும்
அந்தவகையின்வெளியாகு மரிவைவடிவிலதுபோல
பந்தமறுதத்துவமுணர்தல் பரமாந்தரங்கமானாலும்
தொந்தமகன்றவகைதோன்றுஞ் சொல்லானடையாற்பாவனையால்.

மருளையுடையபித்தனையு மருளில்லாதசுத்தனையும்
மருளாயிலரேதுணிவாக மதிக்குமதுபோலீதன்றே
தெருளையுடையஞானியையுந் தெருளில்லாவஞ்ஞானியையும்
தெருளையுடையோரேதுணிவாய்த் தேருமவர்சொன்னடையினுமே.

தத்துவங்களெழுநான்குஞ் சாற்றுமாயைதானிவையின்
கொத்துகளைப்பார்த்தறவீசிக் கூறுமூன்றாய்பாய்கடந்து
தொத்துமற்றொன்றில்லாத வையானந்தப்பூவையையே
அத்துவிதமாய்த்தினம்புணர்வோ ரழியும்போகம்வேண்டுமோ.

யோகமதனிலுறுபயனை யுவர்த்தேஞானநெறிமேவி
ஏகமெனுமப்பிரமபத மெய்தியாரூடம்பிறந்தோர்
தேகவடிவாயேநின்று சிந்தித்தனுசிந்திக்கிலுள
போகமதனைமேவிடுமோ பொருந்திலூர்ப்பன்றியையொக்கும். (௬௫)

அலைவையிறந்தவிடத்தந்த வானந்தம்மற்றவ்வின்பம
அலைவையுடையவிடத்தென்றெ லறியாமையினாலெவ்விடத்தும்
அலைவையிறந்தவிடத்தன்றி யானந்தஞ்சற்றுமுறியா
தலைவையுடையவிடத்† தார்க்கையென்றேயறிநாலையரே. (௬௬)

† அர்க்கை எ-து துன்பம்.

சுணங்கன்றனதுரசமிதென்றே தோன்றவறியாதெலும்பின்மண்
இணங்கிமகிழுமதினின்ப மெய்துவழிகாணுதென்போல்
பிணங்களெல்லாஞ்சுகமென்றே பேணிப்போகந்தனைவிரும்பும் [கம்
குணங்கொள்ஞானியொருவனுமே கொள்ளானின்புண்டெனப்போ

உள்ளபொருட்கேயின்பென்று முளதாமென்றுமில்லாத
கள்ளமுடையபோகத்திற் காணுஞ்சுகமேதின்பென்றே
உள்ளமகிழுசத்தரெலா முணர்ந்தஞானியொருவனுமே
பொள்ளலுடையபோகத்தைப் பொருந்தான்பொய்யாதலினாலே. ()

ஊனதாகிநிற்போர்க்கே யுலகனென்றுபேருடைத்தாம்
ஆனஆனிதனக்கறிவா னந்தந்தோன்றுமோவஃதின்
ஞானமாகிநிற்போக்கே ஞானியென்றுபேருடைத்தாம்
ஆனஞானிதனக்கிந்த வகிலவின்பந்தோன்றாதே. (௬௯)

ஏகதேசதேகமதா யிருந்தேயறிவானந்தமதை
ஏகபோகஞ்செயக்கூடா ததுபோற்சொரூபஞானிக்கும்
ஏகதேசவின்பத்தை யெங்கும்பூர்ணமாயிருந்தே
ஏகபோகஞ்செயக்கூடா தீனமுடையோர்கூடுமென்பார். (௭௦)

எங்கெங்கிருந்தெய்திடுமின்ப மெழில்வீட்டின்பமெனவேகண்
டங்கங்கருந்துவோமென்னி லறிஞர்கூறுமுறையன்றே
இங்கங்கென்றில்லாவின்ப மெய்தினோர்கட்கொருக்காலும்
இங்கங்கென்றேதோன்றிடுமோ வென்றும் § புரணமியல்பானால். ()

பங்கேதொன்றுமில்லாத பரமாயெங்குநிற்கினுமுன்
இங்கேநின்றவாதனைக ளிருக்குமெனின்முன்சாதகத்தில்
தங்கேதொன்றுமில்லாமற் சரித்ததாகிலதேநிற்கும்
இங்கேயுறைந்தபாண்டத்தி விலுப்பைப்பூவின்மணமுண்டோ. (௭௨)

---

§ புரணம் எ-து பரிபூரணம்.

இயமநியமமியற்று மெழிலார்நிட்டையடைவோர்க்குச்
சுயசற்சொரூபானந்தமதுந் தோன்றாதிருளுமாறாது
பயந்தபரமமடைந்தவர்போற் பாவித்துளத்திற்பினுமிந்தக்
கயவர்க்குறித்தாம்போகத்தைக் கருதியிருந்துந்தொடர்ச்சியென்பர்.

தனதென்றுரைக்குமவையெல்லாந் தள்ளியினிமேற்றனதென்னக்
கனவவ்வறிவுதானாகக் கண்டானந்தமடைந்தோர்க்கு
மனதில்வருந்துமவையெல்லாம் வந்துவருத்தாதுடலினையே
தினமும்வருந்திவிடப்படாச்செய்கை யதுவேவாதனையாம். (௭௪)

உடந்தையானவுடன்முதலை யுயிர்க்குவேறுகூறாக்கிக்
கடந்தசிவமேதானாகக் கண்டுதெளிந்தோர்க்குடன்முன்னாத்
தொடர்ந்தபோகங்கலங்கியிடுந் தொடர்ந்தேநிற்கிற்றறினதில்
கடைந்ததயிருங்கடையாத கட்டித்தயிருந்தோன்றிடுமே. (௭௫)

ஆகுவுறையுங்கட்டியிதென் றறியப்போமோவெனிலந்த
ஆகுவுறைதற்கானதிலே யையந்தோன்றுமதுபோல
ஆகுமொழியையுடையோர்க் ஐயந்தோன்றுஞானமதற்
காகும்விடயமுடையோர்க ஐயந்தோன்றாதுணர்ந்தோர்க்கே. ()

அகத்திலுளதேபுறத்துண்டா மகத்தில்லாதேபுறத்தில்லை
சகத்திலுள்ளோரோதிடுமித் தகைமையென்றுமதுபோலத்
தகர்த்திவ்விடயமனுபவமாய்த் தனையேகண்டோற்புறத்துறினுந்
தகர்த்தபடியேநின்றுவிடுஞ் சாராதிதயத்துளபடியே. (௭[illegible])

போடவேண்டும்புடமெல்லாம் போட்டுத்தங்கமானதில்
கேடதானகளிம்பென்றுங் கிட்டாதஃதினியதிபணிச்
சேடமானசிவமாகித் தினமுமதுவாய்நின்றிடுவோர்க்
கீடதானமாயையென்று மிலதேயாகிற்போய்விடுமோல். (௭௮)

உலகத்துளவெப்பொருள்களையு முளலக்கணங்கொண்டிஃதீதென்
றிலிக்குணிக்கலாமஃதி னில்லாமாயையில்லெனவே

விலகியிதனுக்கதிட்டான மெய்யாம்பிரமமானோனைக்
குலவுமுணர்வுசரிதைகொண்டே குணிக்குமாயைபொழிந்தோரே. ()

பிணிகளொழுங்கிலாயுமற்றைப் பேசுந்தெய்வீகத்தாயும்
தணியிலுடலிற்சுகம்பிறந்து தணிந்துதோன்றுமதுபோல்
எணியவெணியாங்செவ்விதத்து மெய்திமகிழ்ந்தோர்தமதறிவில்
கணமதேனும்விடயமதிற் கலங்காதறிவாய்த்தணிந்திருக்கும். (௮௰)

எறியிற்கதிரோன்சாளரத்தி லிருந்துதோன்றும்பூதவணு
அறிவிட்டெறியும்பேரொளியி லஃதுதோன்றாததுபோல
அறிவிற்றோன்றுமுலகெனினு மகண்டாகாரவறிவதனில்
செறியத்தோன்றாச்சிற்றறிவிற் செகம்போல்விளங்கியிடுமன்றே. ()

தளையுளோர்கண்மிகவருந்தித் தரினுமுடையூணிவையன்றிப்
புளையில்லோர்கண்மற்றொன்றைப் பொருந்தவினையாரென்போலும்
வளைவிலோர்கண்மிகவருந்தி வாங்கிப்பொருந்திமயங்கியிடும்
களையில்சருமந்தன்னாலே கைவிட்டொழிந்தஞானிகளே. (௮௨)

உடலைக்குறித்தோபாலருந்த லூனைக்குறித்தோவவரவர்க்கே
‡ நடலையுலகையொழிந்தந்த நாட்டம்பிறந்தவ்வானந்தக்
கடலையமிழ்ந்தவெனிலந்தக் கடலிலமிழ்ந்துமன்னோனைக்
கடலைமண்டைக்கொண்டோனைக் காணுமதுபோற்றோன்றிடுமே. ()

கனியும்பாலுஞ்சருக்கரையுங் கலந்தவன்னநிரம்பவே
அனிசம்புசிப்போர்நீர்க்கூழை யருந்தவினைக்குமோவஃதின்
இனியகுருவினருளாலே யிருளுநீங்கியானந்தம்
நனியுமுடையோர்விடையமதை நணுகார்நணுகினைக்கிடமே. ()

ஞானமுடையோர்க்கேதறினு நணுகாகுற்றமெனமறவோர்
ஊனமனையோருரைத்திடின்மற் றென்றேகுற்றமனையுடையோர்க்

‡ நடலை எ-து பொய்.

னை முடைய துறவியர்க்கே யிரண்டாங்குற்றம்பரப்பிரட்டும்
ஆன துறவிவிழியுமென வனைவுமகன்றபெரியோரே. (அ௫)

அபரஞானமுயர்குருவா லயந்திரிவுமறக்கேட்டு
விபரமாகவந்நெறியின் மேவிப்பூதமாத்திரமே
சபலமாகநீங்கிடத்திற் சகத்திலொன்றும்வேண்டாது
கபடஞானமுடையோரே கண்டோமெனும்போகத்துமுறும். (அ௬)

அந்தமுகத்தின்புறவோர்க ளழியும்போகமின்பென்றே
இந்தமுகத்திற்றிரும்பார்க ளென்றுமீனஞானியர்கள்
அந்தமுகத்திஞ்புற்றோரி னறையுஞ்சொன்மாத்திரமாகி
இந்தமுகத்திப்போகமதை யின்பென்றழுந்துமெப்போதும். (அ௭)

போகத்துறைவோன்றன்மனையைப் பொருந்துப்பிறர்க்கீந்திடவே
துண்டோ, ஏகத்துறைவோன்றன்மனையை யிதயமாத்துப்பிறர்த
மக்குச், சோகத்திறனும்போகத்தைச் சுகமென்றீயுமோவீயின், மோ
கத்துறைவோரகன்றோர்கண் மொழிவரவரைப் பதிதரென்றே. ()

இடைமுன்னீறிலகண்டபரத ப்தகமாகியானந்தம்
உடையவறிஞர்தமக்கிச்சா ஆமேசற்றுமிலவாகும்
விடயமதனில்விருப்பமாய் மேவியூழூழென்றிடுவர்
கடையிலியமதூதர்களாற் கலங்கியூழூழென்றிடுவர். (அக)

இதுவேகான்குசாதனமு மியல்பாயுடையோரெய்துநெறி
இதுவேயென்றுமாறாத விருளின்றிநினைத்தானநுக்கும்
இதுவேஞானனந்தரசம் ரமிக்கச்செய்யும்விஞ்ஞானம்
இதுவேயுனக்குமுறுதியென் விசைத்தாளெனையூன்ருளுமையே. ()

இந்தநெறியில்விகங்கமதை யெய்தியானுமவனருளால்
பந்தமகன்றபரவெளியைப் பார்த்தேனனைத்துந்தானுகி

* பதிதர் எ-து குலம் சமயமுதலிய வொழுக்கத்திற் றவறினோர்.

அந்தமுமுன்மூன்றுமில்லா வகண்டாகாரவடிவாகித்
தொந்தமொன்றுமிலதாகிச் சுயமாய்விளங்கியிருந்ததுவே. (௯௧)

வேறு.

நிமலமாய்பிரமவனுபவமுணர்க்கே னின்றதுசிருட்டிமுன்னுறய்
நிமலமாமெனதுநிலையினினின்றே நினைவெனுமாண்யயிற்பாய்ந்து
நிமலமாம்பரமாயுயிர்களாயுலகாய் நிலையதுபோலவேவிரிந்து
நிமலமாமென்கணப்படியொடுங்கி நின்றிடுவேனிதுநிசமே. (௯௨)

அலைவிற்சிற்சொரூபமஃதுமல்லாதா யதைவிடவேறுமல்லாதாய்
அலைவுசெய்யஞ்ஞானத்திசைசத்தா யஃதகன்றிடும்பொழுதசத்தாய்
அலைவின்றித்தேறின்முக்காலுமிலதா யனாதியாயனிர்வசனமதாய்
அலைவுறுமாயையுடையமாயாவி யானேநானாகியசோகம். (௯௩)

பரசொரூபத்துக்கபின்னமும்பின்னமும் பகர்பின்னாபின்னமுமலதாய்
நிரவயமலதாய்ச்சாவயமலதாய் நிரவயசாவயமலதாய்த் [ப்
திரசத்தையசத்தைச்சதசத்தையலதாய்ச் செப்பியவனிர்வசனமதாய்
பர்பிரகிருதிதமசெனுமகிமை பண்டையிலுடையவிச்சோகம். (௯௪)

எனைமறைப்பறைச்சிதீண்டியுமகத்தி லிருளிறந்தும்மொளிபிறந்தும்
பினைநனிமாயைதுரத்தியாயும் பிரவஞ்சமருந்தியுமினவயின்
உளிநின்றுபார்க்கிற்பஞ்சகுதகமு முண்டெனக்கேயிவைதீரா [தே
துனிநின்றுபார்க்கினிவைகட்காளானே னொருவிருத்தா சலமடைந்

என்னையேதோன்றுவகைகொலைபுரிந்து மினியதோர்ஞானமாணிக்கந், தன்னையேகளவுபுரிந்துமற்றதன்மேற் றவிர்ந்திடாமயக்கத்தைக்கொண்டும், பின்னையுமதிலேகாமத்தைப்பெற்றும் பேச்சிறந்ததுவெனவுரைத்தும், இன்னவைம்பாதகங்கட்காளானே னெழில்விருத்தாசலமடைந்தே. (௯௫)

இத்தகைசூதகங்கள்பாதகங்க ளெய்தியுமிடமுதற்பற்றும், ஒத்தவிவ்வுடலிந்தியங்கரணங்க ளொன்றுந்தாக்கற வெட்டவெளியில், லைத்தெனைக்கண்டுபோழ்செய்ததந்தோ மலையையோம்பியுமுலகில், இத்தனைகொடுமையுடையவித்தலந்தா னெனக்கென்றேயிருந்ததோ வறியேன். (௬எ)

வேறு.

விருத்தகிரிவடிவான விறையவனும்வாழ்க
 வினையனேற்கருள்விருத்த வம்பிகையும்வாழ்க்க
கருத்திலுறவெனக்கருளும் பிரணவமும்வாழ்க்க
 கார்ணியையடையு மடியாருளனிவாழ்கத்
திருத்தமுடன்றலமுமிகச் சிறப்பதாய்வாழ்கச்
 சேர்ந்துறையுமியாவர்களுஞ் செல்வமுடன்வாழ்க
இருத்தியெனையுமையருள யானுணர்ந்தபடியே
 எல்லோருமுணர்ந்துவாடுத லறவேவாழ்க. (௬அ)

ஆ பாயிரம் உட்பட ௧00.

விஞ்ஞானசாரம் முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

நான்காவது.

# அத்துவிதவுண்மை.

காப்பு.

## பாயிரம்.

[ஆழத்துப்பிள்ளையார் துதி.]

பொங்காவதுவுமிந்தும் புரிசடையதனிற்சேர்த்து
அங்காரந்தனிலிடத்தி லழகியமானையேந்தும்
சங்கரன்சேயெம்பாசந் தகர்த்ததந்துமொருங்கறுக்க
ஐங்கரன்கொண்டவாழத் தையனைவணக்கஞ்செய்வாம். (க)

[பெரியநாயகியார் துதி.]

ஆண்டகுருவேகண்மணியே யருளேநீகாணென்றாகப்
பூண்டவடிவையென்னுடைய புந்தியதனுணின்றுணர்த்தி
ஈண்டப்படியேயென்னுவிலிருந்து முனைக்கவேண்டிடுநீ
நீண்டமாலுமயன்போற்று நிமலவிருத்தநாயகியே. (உ)

பாயிரம் முற்றும்.

## நூல்.

மேலாஞ்சதுட்டசாதனங்கள் மேவிநிறைந்தபேர்க்குணர்க்கின்
மேலாமதுநாமெனத்திடமாய் விளங்குமவையில்லாதவர்க்கு
மேலாமபரமன்மான்மழுவாய் விளங்கியுணர்த்தும்விளங்காது
மேலாஞ்சாதனங்கள்வர மேவவேண்டுஞ்சாதுசங்கம். (௧)

உண்டாத்தோன்றிரமித்திடுத லொருநம்வடிவேயுருநாமம்
கண்டேயிடம்மாத்திரமல்லாற் கருதிப்பார்க்கின்வேறில்லை
பண்டேமுதலித்தகவாகும் பலவாய்க்காணன்மைத்திரிவால்
விண்டாற்றிரிவையேகமாய் விளங்குநமதுவடிவமே. (௨)

எந்தசசத்திலசத்தாகு மிந்தவுலகுசத்தாகும்
எந்தச்சித்திலசித்தாகு மிந்தவுலகந்தான்விளங்கும
எந்தவின்பிற்றுன்பாகு மிந்தவுலகமின்பாகும
அந்தச்சச்சிதானந்த மதுவேநமதுவடிவாகும். (௩)

எல்லாநாமேயெனவறிந்தா லெஃதைநினைவானினைத்திடுதல்
சொல்லாலெஃதையுரைத்திடுத றொழிலாலெஃதைச்செய்திடுதல்
நில்லாவுலகைவேறெனவே நினைதலுரைத்தறொழில்புரிதல்
நல்லாரனைத்துநாமெனவே நாடாரவையினொன்றையுமே. (௪)

நானாகத்தோன்றியிடு நாமரூபமிவையனைத்தும்
நானல்லவொருநாமே நாடிமகிழுஞ்சித்திரங்கள்
தானுஞ்சித்தாகாசத்திற் றன்னைத்தானேதான்றானே
தானுங்கருவியினில்வணைந்து தானேநோக்கிமகிழ்ந்திடுதல். (௫)

தங்கள்தானேபணிதியாய்ச் சாற்றும்விதமாய்விளங்குதலின்
அங்கமுதலாஞ்சகங்களா யறிவேவிளங்குமயலில்லை
இங்கங்கென்றேபங்கொன்று மில்லையகண்டவறிவொன்றே
துங்கவறிவுதோன்றளவுந் தோன்றுநானுவிதரூபம் (௬)

இன்னானன்னானிதுவதுவென் றியம்புமுலகம்வேறன்று
தன்னானந்தலீலையினாற் றன்னைத்தானே தன்னிடத்தில்
அன்னானின்னானதுவிதுவென் றனந்தவிதமாய்த்தான்பகுத்தே
உன்னாநின்றுதானடிக்கு மொருகூத்தெனவேயியம்புவரால். (எ)

தங்கமொன்றேபணிதிகளிற் சாற்றும்விதங்கள்வெவ்வேறு
தங்கவிலக்கணமுமன்று தங்கம்விடவும்வேறன்று
தங்கமழியாப்பணியழியிற் சாற்று மிந்தத்தகைமைபோல்
எங்குநிறைசித்தாநம்மி லிலகுமிந்தவுலகமே. (அ)

தானுண்டாகிலுலகுண்டாந் தானுண்டாகிலுயிருண்டாம்
தானுண்டாகிற்பரமுண்டாந் தானுண்டாகில்வீடுண்டாம்
தானுண்டாகிற்பஞ்சதொழிற் றானுண்டாகுந்தனையன்றித்
தானுண்டோமற்றவையதனாற் றானேயனைத்தும்வேறில்லை. (௯)

மந்தவிருளிற்கயிற்றரவின் மாறுபாடாய்த்தோன்றுதல்போல்
இந்தவுலகுமுயிர்களுமவ் வீசன்றானுமுப்பிரடையும்
பந்தம்வீடுமீசன்செய் பஞ்சகிருத்தியங்களுமே
அந்தமதுசொரூபத்தி லாரோபிதமாய்நின்றிலகும். (௧0)

அனந்தவிதமாங்கீற்றையுடைத் தாகுஞ்சிலையொன்றதைப்பார்க்கின்
அனந்தவிதமாய்த்தோன்றி யிடுமந்தக்கீற்றுஞ்சிலையொன்றே
அனந்தமுடையநம்மிடத்தி லகிலமந்தத்தகைமைபோல்
அனந்தவிதமாய்த்தோன்றியிடு மறிவேயன்றிவேறில்லை. (௧௧)

மையேமிகுநித்திரைமோக மயக்கிற்கனவைக்கனவதனில்
பொய்யேயெனத்தோன்றாதவர்க்கே புகலவேண்டுநனவுணர்ந்தோர்
மெய்யேபோலத்தோன்றிநனி விளங்குஞ்சகஞ்சற்குருவன்றிப்
பொய்யேயெனத்திட்டமதாகப்பொருந்தத்தோன்றாதொருக்காலும்.

கனவினனவேயுணர்ந்துயர்ந்தோர் கனவென்றொருவற்குரைத்திடினு
கனவிதெனவேகாணாது காணுந்தனக்கென்றறிவுதிக்கின்
வினவிலதுபோனனவையுந்தம் விகற்பமெனவேயுரைத்திடினும்
நினைவினிச்சமாய்க்கொள்ளாது நிசமாந்தனக்கென்றறிவுதிக்கில். (க௩)

கனவைக்கனவென்றுணர்ந்தவனைக் கனவினீயாரெனவொருவன்
வினவிலவனுங்கனவதனில் விளங்குந்தனையேயுரைப்பனதில்
நனவைநினைவென்றுணர்ந்தவனை நனவினீயாரெனவொருவன்
வினவிலவனுமகண்டமதாய் விளங்கும்பிரமமேயென்பன். (க௪)

நனவிற்றோரிட்டிருக்க நவினித்திரையின்மோசத்தால்
கனவிற்றேசாந்தரமுதலாய்க் காணுமனேகவிதமஃதின்
வினவிறைமுமகண்டமதாய் விளங்கியசையாதிரு[illegible]டவே
கனவிமமாயைதனில்விதமாய்க் காணுந்தேசாந்தரமுதலாய். (க௫)

கனவிற்றோன்றும்பொருளெல்லாங்கனவிற்கனவென்றுணர்ந்தக்கால்
நனவில்விகாரந்தோன்று நவிற்றுமிர்ந்தத்தகைமைபோல்
நனவிற்றோன்றுஞ்சகமனைத்து நமதுசங்கற்பம்மெனவே
நனவிற்றோன்றியிடுங்காலை நமதுசொரூபந்தோன்றியிடும். (க௬)

மனத்திற்கனவிற்கனவெனவே மதிக்கினந்தவிகாரத்
தனத்தமுறினுங்கலக்கமுறா னதிகமுறினுமகிழ்ச்சியுறான்
மனத்தினனவில்விகார மயங்கிநீங்காதிருப்பனதின்
கனத்தசகஞ்சங்கற்பமெனக் கண்டாற்றனைநீங்காதிருப்பார். (க௭)

சிங்காதனத்தில்வீற்றிருக்குஞ் சிறப்பாரரசுங்கனவடைந்து
மங்காப்புலைத்தன்மையைமேவி வருந்துவோன்றனனவுணரின்
அங்காஞ்சோகமோகமெலா மந்தக்கணமேநீங்குமதின்
இங்காஞ்சீவத்துவமோக மிரியுந்தனைத்தேர்ந்தக்கணமே. (க௮)

கனவைக்கனவென்றுணர்ந்தக் கனவினனவைநோக்கிடினக்
கனவையொழிந்தவக்கணமே காணுநனவில்விழிக்குமதின்
நனவைச்சங்கற்பமென்றுணர்ந்து நனவிற்றனையேநோக்கியிடின்
நனவையொழிந்தவக்கணமே நமதுசொரூபத்தேவிழிக்கும். (௧௯)

கனவையொழிந்துநனவதனைக் கண்டார்கனவினின்றபினக்
கனவைநோக்கியிடின்முன்னங் கண்டபடியேதோன்றுமதின்
நனவையொழிந்துதன்சொரூப நன்றாயுணர்ந்தோரதினின்று
நனவைநோக்கிநினைவுகொடு நாடின்முனம்போற்றோன்றியிடும். (௨0)

உறக்கமோகமதிற்கனவி லுலகமுயிர்கள்விவகாரம்
சிறக்குமெய்போற்றோன்றியதைத் தேரிற்பொய்யாயிடுமஃதின்
மறக்குமாயாமோகமதின் மாசார்பந்தம்வீடதெனப்
பிறக்குமவைகடமைத்தேரிற் பேசும்பொய்யாய்ப்போய்விடுமால்.

ஒருவனுளதாகையிற்கனவு முண்டாமுறக்கமோகமதின்
ஒருவனிலதாகையிற்கனவு மொருகாலையினுமிலதாகும்
சொரூபநமதுண்டாகையினாற் றோன்றுநானாவிதசகம்
சொரூபமிலதேலிலையதனாற் றோன்றுமனைத்துஞ்சொரூபமே. (௨௨)

படிகத்தடுத்தநிறங்களதிற் பத்திபாயுமந்நிறமாய்ப்
படிகமாகிநீங்கினதிற் பகருமிந்தத்தகைமைபோன்
முடிவினமதுசொரூபத்தின் மோகஞ்செயுமாயையிற்றோன்றும்
முடிவில்பந்தம்வீடதுமின் மொழியுமாயையென்பதுமில். (௨௩)

பழுதையதனிற்றோன்றியிடும் பாம்பையுள்ளபடிநோக்கில்
பழுதையாயேதோன்றியிடும் பாம்புமதுவாய்விடுமஃதின்
பழுதில்சிவத்திற்றோன்றியிடும் பன்மையுலகைநோக்கியிடின்
பழுதில்சிவமேயாய்த்தோன்றும் பன்மையுலகுமதுவாய்ப்போம். ()

தோன்றிவிளங்கும்பொருளெல்லாந் தொல்வேதாந்தவிசாரணையில்
ஊன்றிநோக்கியனுதினமும் ஏகமதனிற்பரிசயித்தால்
தோன்றிவிளங்குமறிவொன்றே சொன்மாத்திரமாய்விடுமுலகம்
ஊன்றிநோக்காதவர்கட்கே யுளதுபோலத்தோன்றியிடும். (௨௫)

ஏகமாகினின்மலமா யிருக்குநமக்கிப்பந்தமெனும்
மோகம்வந்ததென்று முன்பின்பாராதிப்பந்தம்
போகவழியேதெனநாடிப் பொருந்தும்வேதவிசாரணையால்
ஏகமதனிற்சிதைக்கினதி னுள்ளவியல்பின்றோன்றும. (௨௬)

பரவைதானேயோரலையிற் பலவாய்விளங்குமோரலையில்
பரவைநீங்கியொன்றாகிப் பழையபடியேவிளங்குமதின்
பரவுஞ்சொரூபஞ்சங்கற்பப் பகுதியதனிற்பலவாகிப்
பரவுமசங்கற்பத்தொன்றாய்ப் பழையபடியேவிளங்கியிடும். (௨௭)

கடங்கடமதுகாரணத்தைக் காட்டிடாதுமுன்விளங்கும்
படங்கடாமுமப்படியே பகர்காரணமுநீங்காது
சடங்களாகுமிச்சகமுந் தான்முன்விளங்குங்காரணமாய
இடங்கொள்சொரூபத்தையுங்காட்டா திருக்குமதைவிட்டகலாதே.

மரத்தைநோக்கின்மதகரியு மறைந்துவிளங்குமதைநோக்கின்
மரத்தைமறைத்துத்தான்விளங்கும் வாறுபோலச்சகமுழுதும்
பரத்தைநோக்கினதின்மறைந்து பரமாய்விளங்குஞ்சகநோக்கில்
பரத்தைமறைத்துத்தான்விளங்கும் பரமேயனைத்துமாதலினால். (:)

நாகர்துதிக்கைதனைநோக்கி னாசிகரமுந்தோன்றியிடும்
நாகநயனந்தனைநோக்கி னயனஞ்செவியுந்தோன்றியிடும்
ஏககருவிபார்த்தபடி யிரண்டுவிதமும்விளங்குமதின்
ஏகபரமும்பார்த்தபடி யிலகுமுலகுஞ்சித்ததுமாய். (௩0)

ஊனும்போகமெமதென்றே யுன்னல்விசாரமிலாமையினால்
நானவைகளிவைகளென நிலைபோல்விளங்கியிடுமிந்த
நானாவிதமாஞ்சகமுழுது நாமேயன்றிவேறில்லை
தானாய்நோக்கிற்றானாகுஞ் சகமாய்நோக்கிற்சகமாகும். (௯௧)

மாயையெனுமிவ்வுரைக்கருத்த மதிக்கின்யாதொன்றிலாததுவே
மாயையெனவிப்படியிருக்க மதிப்பரதனையிருவகையாய்
மாயைமெய்யென்றுரைத்திடுவர் மயக்கப்பட்டுத்தனைமறந்தோர்
மாயைபொய்யென்றுரைத்திடுவர் மயக்கநீங்கித்தனையறிந்தோர். ()

நாமரூபந்தனைநோக்கி நாடன்மனமும்புறமுகமும்
நாமரூபந்தனைநீக்கி நாடலறிவுமுண்முகமும்
நாமரூபத்தெவ்வளவு நாட்டஞ்சொரூபந்தோன்றாது
நாமரூபநாட்டம்விடி னமதுசொரூபந்தோன்றியிடும். (௯௩)

அரையகுமாரன்புலையருட னணுகிமறந்துமொருவரால்
அரையகுமாரனெனவறியி லஃதெப்போதுமறவாதின்
றரையிலாசானெழுந்தருளித் தனைப்பார்த்ததுநீயெனவுரைக்கின்
புரையிலதுவாமூவவத்தை பொருந்தும்பொழுதுமறவானால். (௯௪)

படியிற்பொருளின்மெய்யொன்று படிறொன்றிந்தவிருவகையும்
முடிவின்மெய்பொய்யறிந்திடலா மொழியுமிந்தத்தகைமைபோல்
கொடியவுலகைமெய்யெனவே கூறுமதையுமறிந்திடலாம்
முடிவிற்சகம்பொய்யேயாகு முத்தியொன்றேமெய்யாகும். (௯௫)

அகிலந்தோன்றும்பொழுதுமறைந் ததிட்டானமதாய்விளங்கியிடும்
அகிலநீங்கிற்றான்விளங்கு மந்தச்சச்சிதானந்தம் [றில்
அகிலந்தோன்றும்பொழுதுமறைந் ததுதோன்றுதல்போலதுதோன்
அகிலந்தோன்றாதனின்மறைந் ததனாலகிலமசத்தாமே. (௯௬)

முத்தியாதோவெனவெண்ணி முயங்கவேண்டாமிந்தறுதி
முத்தியுளதேற்பந்தமுண்டா முத்தியொருகாலையுமில்லை
முத்திதானுஞ்சகம்வேறின் மோகமதிற்காண்பதைப்போக்கின்
முத்தியாகுமிந்நிலையை முயன்றுவருந்திநிலைகொள்வாய். (௩௭)

இல்லாமாயை சங்கணிலை யாருநிற்கவும்மம்ம
பொல்லாப்பிறப்பிறப்பட்டதுமாய்ப் பொக்கமிகவுந்தவிர்ந்ததுமாய்
நல்லாரிணக்கஞ்சேர்ந்ததுமாய் ஞானவிசாரமுதித்ததுமாய்
எல்லாமாம்வீடடைந்ததுமா யார்க்குங்காட்டிமறைந்திடுமே. (௩௮)

எல்லாநீங்கிச்சற்குருவை யெங்குந்தேடியடைந்தருளி
நல்லாருணருஞானநூ னவின்றுவிசாரஞ்செய்வதுவும்
பொல்லாமனத்தையொடுக்கிநிட்டைபொருந்திநோக்கிநல்லநோக்கும்
இல்லாமாயைதனைத்துணிவா யில்லையெனவேகாண்குதற்கே. (௩௯)

விளங்குஞ்சகங்களனைத்தினிலும் விளங்குநாமாதிகணீங்கி
விளங்குமதைமாத்திரநோக்கில் விளங்கும்பிரமமக்கணமே
விளங்குநாமாதிகளுமதாய் விளங்கும்வேறாய்விளங்காது
விளங்குமிந்தநிலையெவர்க்கும் விளங்குமவிரோதமதாயே. (௪௰)

நாமரூபம்விளக்கல்பரம் நாடலுயிராமவைமாயை
நாமரூபந்தனைநோக்கி நாடச்செய்தலஞ்ஞானம்
நாமரூபத்திவ்வளவு நாட்டமெனவேசெய்தல்வினை
நாமரூபந்தனைநோக்கிநாடு மிடத்திலிவைநிகழும். (௪௧)

உருவநாமநோக்கிடத்தி லுளதாமிந்தவைவகையும்
உருவநாமநீக்கிடத்திலொன்று மிவைகளிலவாகிச்
சொருபமொன்றேநிகழ்தலினாற் சொன்னவிவைகளெவ்வகையும்
சொருபமன்றிவேறில்லை தோன்றும்விவகாரத்திசையில். (௪௨)

விவகாரத்திற்பகுப்புகளாய் விரியும்பரமார்த்தம்மதனில்
சிவகாரமதாய்விளங்கியிடுஞ் சிவமேயத்வைதமாதலினால்
பவகாரியத்தையுடையோர்க்குப் பகுப்பேயென்றுந்தோன்றியிடும்[ய்
பவகாரியத்தையொழிந்தோர்க்குப் பகுப்பொன்றின்றிச்சிவந்தோன்று

பந்தத்திசையிற்பலவென்றும் பரமார்த்தத்திலொன்றென்றும்
இந்தசசடங்குசொரூபத்தி லென்றுமில்லைநோக்கியிடின்
எந்தக்காலுமொருபடித்தா யிலங்குஞ்சொரூபமிவைமாயா
தொந்தமதனிற்றோன்றியிருஞ் சொரூபத்தாரோபிதமாகும். (சச)

மித்தியவாதிவேதாந்தி விளங்குஞ்சைவசித்தாந்தி
சத்தியவாதியிருவர்களுஞ் சாற்றுஞ்சங்கட்கடுக்காதை
மித்தியவாதிசகத்தினுக்கு விளம்புஞ்சிருட்டிமுடிவினின்றும்
சத்தியவாதிசிவமொழிந்து சற்றுமவேறில்லெனவுரைக்கும். (சரு)

சகமதென்பதில்லையெங்குந் தானேநின்றுவிளங்கியிடும
சகமதெனவேதோன்றிடுதல் தமதுசங்கற்பம்மதனி
லகமதனிலேகண்டுணரா தவையிற்சிகிப்பந்தமுறு
மகமுதனிலேகண்டகற்றி லப்போபண்டைப்படிசகமும். (சசு)

பந்தமின்றிவீடின்றிப் பரமேயெங்கும்விளங்கிடவும்
பந்தம்வீடுண்டெனவுரைத்தல் பார்க்கின்மாயாமோகமதில்
சிந்தைவிரிவேபந்தமதாஞ் சிந்தையொடுக்கமேவீடாபு
இந்தவகையாயபந்தம்வீ டியம்புமபவாதமதாகும். (சஎ)

தோன்றிநிகழுமுலகெல்லாஞ் சொரூபமேமற்றுருநாமம்
தோன்றிநிகழ்தன்மாயையே சொரூபம்விடவுமவேறன்று
தோன்றிநிகழுமுருநாமஞ் சொரூபம்விடவேறெனவுன்னி
தோன்றிநிகழ்தல்பந்தமதாஞ் சொரூபமெனவேயுணல்வீடாம். (சஅ)

உருவநாமமவைக்கிருப்பு முதிப்புஞ்சொரூபத்தினையன்றி
உருவநாமமவைதனக்கே யொருகாலையினுமிலதாகும்
உருவநாமமவைநோக்க லொருவிநமையேநோக்கியிடின்
உருவநாமநிகழ்ந்திடா தொருநம்வடிவாயேநிகழும். (சகூ)

பந்தமென்றும்வீடென்றும் பயிலுநினைவேபந்தமதாம்
பந்தமெங்காய்வீடெங்காம் பரத்தைவிடவேறிலாமையினால்
சந்தஞ்சங்கற்பந்தனிலே தாமே மோகித்திடுமுயிர்கள்
சந்தமசங்கற்பந்தனிலே தாமேநீங்கியிடுமோகம். (ரு0)

உருவநாமந்தனைநோக்கி லொருதன்னிலையைநீங்கினதாம்
உருவநாமந்தனைநீக்கி லொருதன்னிலையேநின்றதுவாம்
உருவநாமமவையிரண்டு மொருதன்வடிவேயெனக்காணில்
உருவநாமந்தானேயா யொளிருமதுவேமுத்தியுமாம். (ருக)

ஒன்றுநெறியேதுபார்த்தங் கூடியவீடேதெனவேண்டாம்
உள்ளும்புறம்புமெனவிவையி லுதவுமெய்துதனக்கதனின்
றென்றுஞ்சங்கற்பங்களெல்லா மிரியநோக்கிநிற்றதன்னை
உள்ளும்புறம்புமின்றியெங்கு மொளியாய்க்காணலாகியிடும். (ருஉ)

ஒளியேயெங்குய்விளங்கிடுமவ் வொளியில்விளங்கு முலகெல்லாம்
ஒளியேயன்றிவேறேமோவொளியை யறியாருலகென்பர்
ஒளியேயன்றியுலகுதனக் கொருகாரணமுமிலையதனால்
ஒளியேயனைத்துந்திரைநுரைக ளுவரியலதுவேறாமா. (ருங)

மாயைவேறென்றெனவுன்னி மதிக்கவேண்டாம்பேதமதி
மாயையாகுமற்றதனை வருந்திமுயன்றுபேர்த்திடுக
மாயைநீங்குமிந்தமதி வந்தவழியேதெனவேண்டாம்
மாயைநெறியிலம்மதியை வதைக்கிலதுவந்ததுதோன்றும். (ருச)

விளங்கியிடுமிவ்வுலகெல்லா மித்தைகூடிவேயென்பதுவும்
விளங்கியெங்குந்தற்சொருபம் விமலவடிவேயென்பதுவும்
விளங்கிலருத்தமொன்றேயாம் வேறாய்க்காணுமஃதகற்றி
விளங்குமொளியாயேகாண்கில் விளங்குமருத்தமொன்றாயே. (௫௫)

தனதுசங்கற்பந்தனிலே சகங்களாகிவிளங்கியிடும்
தனதுசங்கற்பந்தனிலே சகம்போயொடுங்குமதனாலே
தனதுவடிவேசகங்களெல்லாந் தன்னைவிடவேறிலதங்கம்
தனதுவடிவைவிடப்பணிக டான்வேறாகிவிளங்கிடுமோ. (௫௬)

நிலைமைநீங்கிற்சகமுதித்து நிசமுமாகுமற்றவையின்
நிலைமைஞானவிசாரணையி னிசயபோயொடுங்குந்தோற்றரவு
நிலைமையாகுங்கானோக்கி னீங்கிமறையுமிசசகத்தின்
நிலைமையொருவேதுவிலுதிக்கு நீங்குமிருமையேதுவினில். (௫௭)

எல்லாமெப்படியாவோ மென்னவேண்டாமிலக்கணம்பார்த
தெல்லாநோக்கியிடுமிடத்தி லிருப்புந்தோற்றரவுமின்பும்
எல்லாவிடத்துமுண்டாகு மியல்புமவையேபிறித்திட்டால்
எல்லாமெங்கேதோன்றிடுமோ விதனாலெல்லாமாமாகும். (௫௮)

வெள்ளிவிகற்பமதிற்கிளிஞ்சில் விளங்கும்விகற்பந்தனைநீக்கித்
தள்ளின்வெள்ளியென்பதுபோய்த் தானேவிளங்குமக்கிளிஞ்சில்
வெள்ளியென்றபொழுதுமல விகற்பமென்றபொழுமது
வெள்ளியாகிநீங்கினதில் விமலத்ததுபோன்மாயையுமே. (௫௯)

ஒன்றேயென்னின்முத்தியில்லை யொருவன்வேறேயுண்டென்னில்
ஒன்றேயாகமாட்டாமற்றொன்று மென்னிலொன்றுகெடும்
ஒன்றேயென்றவாதிகட்குமோது மிரண்டேயென்றவர்க்கும்
ஒன்றேயிரண்டுமாமொண்றே யுண்மைகற்பிதம்பிரண்டே. (௬௦)

விகற்பமிலதுமுதற்றோன்றி விளங்குமவிமலமதினின்றும
விகற்பமதிற்றோன்றும்விண்ணிற்பீலிதோன்றுதல்போல்
விகற்பமதிற்றோன்றுமதொழிந்து வேறில்லெனவேவிடுத்ததனை
விகற்பமின்றியேநோக்கின் விளங்கும்விமலந்தானுயே. (௬௧)

இந்தவிடயமவையில்வருமின்பும்பேரின்பத்திருந்தே
வந்தலேசமிட்டமது வந்துகிடைத்தவக்கணமே
அந்தமுகமாய்மதிதிரும்பி யறிவானந்தங்கணம்பொசிக்கும்
அந்தமுகமேயெக்காலு மாகினனைத்துமடைந்ததுமாம். (௬௨)

விருத்தியொன்றுமில்லாமல் விளங்குநிலையேநாமதனில்
விருத்திதோன்றின்முன்பினின் விளங்குஞ்செகசீவபரங்கள்
விருத்திநீங்கின்முப்பொருளும் விளங்கிடாமற்றதனாலே
விருத்திதானேபந்தமதாம் விருத்தியொழிவேவீடாகும். (௬௩)

நிருவிகற்பசமதிட்டத்தி னின்றுவிகற்பமுதித்தளவில்
ஒருமுப்பொருளுமுதித்துவிடு மொருங்கெழுவிகற்பமதை
ஒருவினமதுநிலைதோன்று மொருமுப்பொருளுமதுவாகும்
குருவினருளினிந்நிலையைக் கூடவேண்டுநெறிநின்றே. (௬௪)

ஏகபரத்திற்றோன்றுலகி லெங்குமவிடயமாதல்பரம்
ஏகவிடயமாதலுயி ரிந்தவுயிர்க்கேமுத்தியினி
ஏகவிடயமுதற்றள்ளி யெங்குமாகும்விடயமது
ஏகத்தள்ளிமற்றுலகு மிறக்கிற்பண்டைப் டிநிகழும். (௬௫)

எங்குமவிடயமாம்பரத்துக் கிருளெக்காலுமிலையாகும
தங்குமுயிர்க்கேமறதியுண்டாந் தன்னாற்றளவேகூடிடாது
எங்கும்விடயமாம்பரமே யேகவிடயவுயிர்போலத்
தங்கிக்குருவாயெழுந்தருளித் தள்ளுமுயிர்கண்மறதியெலாம். (௬௬)

மாயையதனில்மும்முதலும் வகுப்பாய்விளங்கியிடுமந்த
மாயைநீங்கிலொருமுதலாய் வகுப்பொன்றின்றிவிளங்கியிடும்
ஆயபிரமமென்றுளதோ வன்றேயில்லாமாயையுமுண்
டாயபிரமமுள்ளளவு மந்தமாயைக்கழிவில்லை. (சுஎ)

இந்தமாயைக்கழிவிலதே லிந்தவுயிருக்கொருகாலும்
அந்தமுக்தியிலையெனி லறையுமுயிர்கடமைமறந்த
பந்தநீங்கினக்கணமே பரமாய்விளங்குமதையன்றி
இந்தவில்லாமாயைககழிவிலதினிலைவீடெனல்கூடா. (சுஅ)

தன்னைமறைத்தபந்தமதைத் தள்ளிநீங்கிற்றான்விளங்கும்
தன்னைமறந்ததேபந்தந் தன்னையறிந்ததேமுத்தி
தன்னைவிடவோர்பொருளில்லை தானேபிரமமாயையும்பின்
தன்னைவிடவேறாய்விளங்கா தானேயாகிவிளங்கியிடும். (சுகூ)

தன்னையறியாவியற்கையினிற் சத்தேபோலவிளங்கியிடும்
தன்னையறிந்தவுடனசத்தாய்த் தானேவிருங்கதிவவுலகய
தன்னையறியுமளவுநிலை தன்னைவிடவேறிலையெனவே
தன்னைநோக்கியிடினவையுந் தானாய்விளங்குமுடிவதனில். (எ0)

இல்லாமாயைதானிருந்தென் னிறந்தென்னவைபந்தமதாகா
இல்லாமாயைதனைமெய்யா யெண்ணுமதியேபந்தமதாய
இல்லாமாயைதனைப்பொய்யா யெண்ணுமதியேமுத்தியதாய
இல்லாமாயையில்லையென்றே யியல்பாய்த்தோன்றுந்தன்னிலையில்.()

நினைவேமூலமற்றதனி னின்றுவிரியுமும்முதலும்
நினைவைநீங்கிலவைமூன்று நினைவிலொடுங்குமதனாலே
நினைவேபந்தநினைவொழியி னிலைமையானமுத்தியுமாம்
நினைவேநீங்கியனுதினமு நின்றநிலையேநின்றிடுக. (எ௨)

நினைவுநீங்கிலுருநாம நீங்குமவையைத்தள்ளிடினும்
நினைவுநீங்குமற்றவையி னினக்கேதிச்சையதினின்று
நினைவுநீங்கிநின்றிடமே நிலைமையானமுத்தியென்று
நினைவுகொண்டக் நிலையைவிட்டுநீங்காதென்றுநின்றிடுக. (எ௩)

நினைவைநீக்கிநோக்கியிடி னிமலசொரூபங்தோன்றியிடும்
நினைவைமேவிநோக்கியிடி னிலையிலுலகங்தோன்றியிடும்
நினைவிலுலகமறிந்ததுவு நீங்கிச்சொரூபமறிந்ததுவும்
நினைவினோக்கிற்றானில்லை நிகழுமாயாமோகமதில். (எ௪)

தனதுநிலையிற்றானிற்கச் சாற்றுமாயாமோகமதில்
தனதுவடிவைமறந்துயிர்போற் றங்கிநீங்கிற்றானிகழும்
தனதுவடிவுதோன்றளவுஞ் சத்ததுபோலவிளங்கியிடும்
தனதுவடிவுதோன்றளவிற் றானேயசத்தாய்விளங்கியிடும் (எ௫)

கானனீருங்கயிற்றரவுங்கட்டையதனிற்கள்வனுமே
ஆனவவைதம்மதிட்டான மாகுமவைகடோன்றளவும்
ஆனதவைமெய்போற்றோன்று மதுபோற்சகமுமதிட்டானம்
ஆனசொரூபந்தோன்றளவு மசத்தல்லாதுபோல்விளங்கும். (எ௬)

?அதிட்டானமதுதோன்றளவு மதுமெய்போலவிளங்கியிடும்
அதிட்டானமதுதோன்றியபின் னசத்தேயாகிவிளங்கியிடும்
அதிட்டானமதுதோன்றளவு மசத்தென்றெணியேநோக்ககற்றி
அதிட்டானமதாந்தனைநோக்கி லசத்தேயாகிவிளங்கியிடும். (எஎ)

தன்னைச்சீவனெனத்திரிவாய்த் தானின்றுணர்தலஞ்ஞானம்
தன்னைப்பிரமமெனத்துணிவாய்த் தானின்றுணர்தலேஞானம்
முன்னைத்தொடர்ச்சிவிடயமது மூலவாரவும்வாதனையும்
பின்னையொருங்கேயொழிந்துவிடும் பேணல்விடுதலைவேண்டா.

---

?அதிட்டானம்=உண்மை.

நிமலநெஞ்சையுடையோர்க்கு நிலத்திலாசானெழுந்தருளி
விமலதத்துவமசியெனவே விளம்பிலவனுக்கணமே
மும்மலநீங்கிச்சிவம்விளங்கு மோகநெஞ்சையுடையோர்க்கு
மும்மலச்சார்வாய்வாதனையே மூடிமிகவுநிறைந்திடுமே (௭௯)

எங்கேநிறைந்திருக்கு மியல்பையுடையநெஞ்சுடையோர்க்
கிங்கோர்மயக்கங்களுமில்லை யிச்சையிறந்ததில்லையாகின்
அங்கேயாசானெழுந்தருளி யதுநீயெனவேயுரைத்தவுடன்
அங்கேசொரூபநாமெனவே யுறுதியாகத்தோன்றியிடும். (௮0)

ஒருவவேண்டுமெனைத்துமென வுன்னவேண்டாவினைநீங்கில்
ஒருவுமனைத்தும்வினையுளதே லொன்றிமேவுமற்றவையை
ஒருவல்பற்றலவையைவிடுத் துள்ளபடியேமுடியுமெனச்
சொரூபநாமேயெனத்திடமாய்த் தோற்றுமதற்கேமுயன்றிடுக. ()

சொரூபநாமேயெனத்திடமாய்த் துணிந்தபேர்களில்லறத்தை
மருவிநீங்காதிருந்திடினு மற்றோர்குறையுமவர்க்கில்லை
சொரூபநாமேயெனத்திடமாய்த் துணியாதவர்களில்லறத்தை
ஒருவிநீங்கினதுகொண்டே யுளதோமுத்திபவமறுமோ. (௮௨)

மருவியில்லினிருந்தவர்க்கு மருவுஞ்சோகமோகமென்றும்
ஒருவித்துறவையடைந்தவர்கட் கொருவுமென்றுங்கூடாது
சொரூபநாமென்றறியார்க்குச் சோகமோகமற்றுவிடா
சொரூபநாமென்றறிந்தவர்க்கே சோகமோகமற்றுவிடும். (௮௩)

மித்தையதனைப்பற்றிடவும் விடவும்வேண்டாவிவ்வுலகை
மித்தையெனக்காண்குதல்போதும் விட்டுநீங்குமுடனொருங்கே
எத்தைவிடுதலெதைப்பற்ற லென்னிற்சீவத்துவமான
அத்தைவிடுதல்தனைநோக்கு மதைப்பற்றிடுதல்நெறியாகும். (௮௪)

இல்லமென்றுந்துறவென்று மெண்ணவேண்டாமற்றவையில்
அல்லனீங்கியொருநினைவா யசைவற்றிருந்துசொரூபமதைச்
செல்லவிடையூறின்றியதைச்சேர்ந்தேனென்றுதன்னினிலையைப்
புல்லவிடையூறுகுமதைப் போக்கிவிடுகவேதானும். (அடு)

விளக்குஞ்சொரூபநோக்காது விளங்குமூலகைநோக்கியிடின்
விளக்குஞ்சொரூபந்தோன்றாது விளங்குமூலகேதோன்றியிடும்
விளக்குஞ்சொரூபந்தனைநோக்கி விளங்குமூலகைநோக்கமறில்
விளக்குஞ்சொரூபமேதோன்றும் விளங்குமூலகுமதுவாய்ப்போம். ()

தன்னைமறைத்தபந்தமதைத் தள்ளிநீக்கித்தனையறியில்
தன்னைவிடவோர்பொருளுமின்றித்தானேதானாய்விளங்கியிடும்
தன்னையறியுமவ்வளவுந் தன்னைவிடவேறிலையெனவே
தன்னைநோக்கியொருநினைவாயச் சாதித்திடவேமிகவேண்டும். ()

மூலவக்கரம்மதனின் மூன்றககாரமுநின்றதுபோல்
நீலவுற்பலம்மதனி னிறமுன்மூன்றுநின்றதுபோல்
சீலமதனிநோக்கியிடிற் சிவன்பரமச்செகமூன்று
கோலமவையுஞ்சோரூபமதாய்க் கூடிநிகழுமொன்றாயே. (அஅ)

எல்லாமாகுந்தற்சொரூப மிருக்குமளவுமாயையுமுண்
டில்லாமாயையுள்ளளவு மீசன்புரியும்0பஞ்சதொழில்
இல்லாதொழிந்துபோவதில்லை யிதனாற் வபரமுண்டு
சொல்லாநின்றவிவர்க்குக்கரி சொரூபந்தானே பகுத்துநிற்கும். (அக)

பகுத்துநின்றதற்சொரூபம் பரசிவருக்குச்சாட்சியதாய்ப்
பகுத்துநிற்குஞ்சாட்சியையே பார்த்துத்தத்துவமசியென்று

---

0 பஞ்சதொழில் என்பது சிருட்டி, திதி, சங்காரம். திரோபவம் அனுக்கிரகம், என்பனவாம்.

வகுத்துமாவாக்கியங்கூறு மற்றிச்சீவன் றனையல்ல [ர்த்தே.
தொகுத்துக்கேட்டதிவனெனினுஞ் சொன்னதிவன்சாட்சியைப்பா

இந்தச்சீவன்கற்பிதமே யின்றிவேறோர்பொருளல்ல
அந்தச்சொரூபமிவனாகா னந்தச்சீவனென்றாகும்
இந்தச்சீவனதுநாமென் றெண்ணிச்சோகம்பாவிக்க
அந்தச்சொரூபமாய்விடுவ னவனைவிடவேறிவனிலதின். (௧௧)

இதனாற்பந்தமுத்தியுமுண் டிதனாற்பந்தமுத்தியின்
றிதனான்முத்திபெற்றவனுண் டிதனான் முத்திபெற்றவனின்
றிதனாற்பலவேயாகியிடு மிதனாலொன்றேயாகுமென'
இதனாலவிரோதமதாகு மிதுவேகமதுசித்தாந்தம். (௧௨)

இந்தநெறியிலனுதினமு மேகாந்தத்திலொருநினைவாய்ப்
பந்தமுத்திமார்க்கமதைப் பகுத்துவந்தவழிப்படியே
தொந்தமகற்றிப்பழையபடி சொரூபமதனினின்றிடென
இந்தவகையேயருள்புரிந்தா ளென்னையாள்விருத்தவம்பிகையும். ()

கோர்த்துப்பத்துத்திசைகளினுங் குலவும்பதினாலுலகத்தும்
பார்த்துநோக்குமிடமெல்லாம் பரமேநிற்கயானவமாய்க்
கூர்த்துநோக்கிப்பாராது கொடுமைகளிலேநாட்கழித்தேன்
ஈர்த்துவிருத்தவம்பிகை நின்றிங்கேதோவென்றாள்யான்கண்டேன். ()

கொக்குமினாதேருதலினருட் குருவினருளிலியானேக்கத்
திக்குலோகமென்றதெல்லாந் தெரியவேண்டியுரைத்ததுவாய்த்
திக்குலோகமும்மிறந்து தேருமியானுமிறந்ததுவாய்
ஒக்குமுவமையில்லாத வொளியாயெங்குநிறைந்ததுவே. (௧௫)

அங்கேதாவங்கேதாவாளாவிவ் வனுபூதியினையறியாது
வெங்கேதார்மயக்கிலகப்பட்டு வீணினாளைக்கழித்துவிட்டேன்

இந்தோபாரென்றருட்சந்தி யெனக்குங்காட்டயான்கண்ட
சந்தோடத்தைச்சொலப்படுமோ தானேதானின்றறிவதுவே. (௬௬)

எந்தனுடையசரித்திரங்க ளெனக்கேகைவந்திடுநினைக்கில்
இந்தக்குறைநிகள்பாராம லெனையும்வலிதிற்பிடித்திழுத்து
பந்தமுத்திவிவகாரம் பறித்தேயெறிந்துபழையபடி
அந்தவெனதுநிலையில்வைத்த வன்னைக்கெனையோகைய்மாறே.(௬௭)

எனதுவடிவையறியாம லிந்தவுயிராய்நின்றதுவும்
யனதுமிகவும்வாடினதுய் வழிகாணாமலேங்கினதும்
தனதுகணிற்றோன்றிடுநெருப்பிற் றருவேவதுபோல்வெந்ததுவும்
தனதுகடைக்கண்ணாலொழித்த தாய்க்குமெனையோகைம்மாறே. ()

என்னையறியாதிதுவரையு மேங்கியுழன்றுகிடப்போற்குத்
தன்னைநிகராம்விருத்தகிரி தங்குமுமையேதயவாகிப்
பின்னையானுந்தானுமொன்றும் பிரயந்தனையேயறிவித்து
முன்னமயக்கந்தனைக்கெடுத்த முதல்விக்கெனையோகைய்மாறே. ()

எழிலார்விருத்தாசலவடிவா மெந்தைவாழ்கவெனையாளும்
எழிலார்விருத்தவம்பிகையு மென்றும்வாழ்கவெனக்கருளும்
எழிலார்பிரணவமும்வாழ்க வெந்தாயருளைநோக்கியிடும்
எழிலாரடியார்களும்வாழ்க வெனைப்போலெல்லோர்களும்வாழ்க. ()

வேறு.

ஏரூரும்விருத்தகிரிக்குமாரதேவெனுமுனிவ னிசைக்குநாவாய்க்
காரூரும்பழமலையிற்பெரியநாயகியிருந்த [illegible] றுமிந்தச்
சீரூருமத்துவிதவுண்மையனுபவமுணர்ந்தோர் திகழ்பாரென்னும்
தேரூருஞ்சிவஞானமுத்திபெறலுண்மையிது திண்ணந்தானே. ()

ஆக பாயிரம் உட்பட-௧௦௩.

அத்துவிதவுண்மை - முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது.

# பிரமாணுபூதிவிளக்கம்.

அனுபூதியானுரைக்க வாழ்த்துப்பிள்ளையெனக்
கனுகூலமாயிருந்தே யடைவாய்முடிந்திடுமே. (௧)

பிரமாணுபூதியினைப் பெரியநாயகியெனக்குத்
திரமாகவருளியவா செப்புவேனவளருளால். (௨)

அவ்வருளினாலே யனுபூதியின்விளக்க
மிவணுரைக்கேனந்நிலையை யெய்தினோரேசளிக்க. (௩)

இவ்வனுபூதியையுரைக்கே னிவ்வனுபூதியைநன்றாய்ச்
செவ்வியினறிந்தோர்கள் தேர்ந்துமிகக்களிக்க. (௪)

வடிவினைநோக்காதுளத்தின் வண்மையைத்தேருதலினெந்தன்
கொடியவுரைபாராது கொள்ளுவர்மேலோரருத்தம். (௫)

அறிவறியாக்குழந்தைதன தனைமுன்னேகுழறுதலின்
பிறிவறியாதவர்முன்னே பேசுகேனனுபூதி. (௬)

குழந்தைகுழறும்மொழிக்குக் கொண்டாடுமனைபோல
இழந்தவுயர்ஞானிகளு மென்னுரைகேட்டுண்மகிழ்வர். (௭)

முத்தியைவேண்டிடினிப்போ முயலவேவேண்டுமெனப்
புத்தியெனக்கருள்செய்த பொருளையெங்குங்கண்டனமே. (அ)

தனைத்தவிரவேயொன்றைத் தான்வேறாய்க்கண்டுவிடிற்
பினைச்சென்மநீங்காது பிரமானுபவமலவே. (௯)

தன்னைவிடவேறொன்றுந் தானில்லாத்தன்னிடத்திற்
றன்னினைவினாலே சகம்போலத்தோன்றிடுமே. (க0)

எங்குஞ்சிதம்பரமா யெங்குநிறைந்திருக்கத்
தங்குநினைவாலதே சகம்போலத்தோன்றிடுமே. (கக)

தங்குநினைவதனைச் சாராதுநீக்கிடத்தல்
எங்குஞ்சிதம்பரமா யிருளறவேகண்டனமே. (கஉ)

மந்தவிருளிற்கயிறு மாசுணம்போறற்றோன்றுதலி
னிந்தவுலகென்னிடத்தி லிலகுமாரோபிதமாய். (க௩)

பழுதையினின்றோர்சத்தி பாம்புபோற்றோன்றுதற்குப்
பழுதையினுண்டதைப்போலப் பரத்தினுமுண்டோர்சத்தி. (க௪)

சூனியஞ்சித்துப்பிரமஞ் சுத்தசிவம்பரமென்று
தானிகழ்தல்வேறில்லை தனக்கேபரியாயம். (க௫)

சங்கற்பசத்தியினாற் சகம்போலத்தோன்றியிடுஞ்
சங்கற்பசத்தியதுந் தன்னைவிடவேறில்லை. (க௬)

தன்சத்தையேயுண்டாய்த் தானிருக்குமெய்ம்போதுந்
தன்சத்தைதன்னிற் சகத்திற்குத்தானிருப்பப. (க௭)

தன்சித்தேதோன்றித் தானிருக்குமெப்போதுந்
தன்சித்தினாலே சகமும்விளங்கிடுமே. (க௮)

தன்னின்பேயின்பாய்த் தானிருக்குமெப்போது
தன்னின்பினாலே சகமின்பாய்த்தோன்றிடுமே. (க௯)

தானந்தமில்லாதே தானேயுண்டாய்விளங்கி
யானந்தமாகியென்று மன்றேநிகழ்ந்திடுமே. (உ0)

தனதசங்கற்பத்திற் றானுண்டாதலிற்சகமுந்
தனதங்கிசமூன்றுஞ் சகத்தினிகழ்ந்திடுமே. (உக)

தனதங்கிசமூன்றுந் தான்பிறித்துத்தானோக்கிற்
றனதங்கிசந்தோன்றுஞ் சகம்போயொளித்திடுமே. (உஉ)

சகமாகநோக்கிடத்திற் றனதங்கிசமூன்றுஞ்
சகமாகக்காரணமாய்த் தானதிட்டானமதாகும். (உ௩)

சகமாகநோக்கிடத்திற் றனதிட்டானமதாகிச்
சகமாகவிளங்குதலாற் றனைத்தவிரவொன்றில்லை. (உச)

தானைப்பார்த்திடுமிடத்திற் சகலமுந்தானாய்த்தோன்றுந்
தானைப்பாராவிடத்திற் சகலமும்வேறாய்த்தோன்றும். (உரு)

தனைத்தவிரவேறொன்று தான்காணில்லவனுக்குப்
பினைப்பயமும்போகாது பெரும்பயமுநீங்காது. (உசா)

தன்னினைவினாலே சகயாய்விரிந்ததெனத்
தன்னினைவைநீங்கித் தானாயிருந்தனமே. (உஎ)

உண்டாயொடுங்குவது முண்டானதன்னிடத்தே
யுண்டாகுமென்றே யொடுங்கியிருந்தனமே. (உஅ)

ஐந்தொழிலு மைந்தொழிலைத்தானடத்து
மைந்துகருத்தாவு மாகியிருந்தனமே. (உகூ)

இவ்வடிவுநாமல்ல வென்று * நியதிபண்ணி
யவ்வடிவைநோக்கிடத்தி லனைத்துநாமேயானோம். (௩0)

---

* நியதி=கலைதல்.

இவ்வடிவுபந்தமென வெண்ணியேநீக்கிடத்தி
னெவ்வடிவுந்தானா யிருந்தேனதிசயமே. (௩௧)

இப்பந்தனைபோக வெண்ணியேநீக்கிடத்தி
லெப்பந்தமுநீங்கி யிருந்தேனதிசயமே. (௩௨)

இவ்வடிவந்தானாகி யெங்குந்திரிவேனுக்
கெவ்வடிவுந்தானா யிருக்கிலினியென்செய்வேன். (௩௩)

ஒருவடிவுகாக்க வுழன்றுதிரிவேற்கு
வருவடிவெல்லாமாகின் வாட்டமறக்காப்பதெங்கே. (௩௪)

சீவனைநீக்கிற் றீசைத்தனதோருருவுக்குத்
தேவனைப்பேர்க்கிற் றிகையேனென்றினைக்குறித்துட். (௩௫)

உலகமுயிர்பரமென் றுரைத்திடுமூவகைப்பொருளு
லகவேயானைக வென்னனுபூதியிற்கண்டேன். (௩௬)

னைத்தவிரவேறொன்று மில்லையெனக்கண்டளவிற்
றினைத்தவிப்புநீங்கிப் பிரமமாயேயிருந்தேன். (௩௭)

என்னுடையசத்தி தானந்தனிநின்று
நின்றுலகமெல்லாய் பிறிவில்விளங்கிடுமே. (௩௮)

சங்கற்பசத்தி தானனந்தமாய்விரிய
மங்கப்படிநிகழு மண்டபிண்டமானதெல்லாம். (௩௯)

சங்கற்பமென்றுஞ் சகமென்றுமவேறில்லை
சங்கற்பமேசகமுஞ் சகமேசங்கற்பமதாம். (௪0)

ஓரிடத்திற்கூவு முளையுமப்படியெதிரிட்
டோரிடத்திற்கூவுதலி னுலகுநினைவேயாம் (௪௧)

நினைவென்றசங்கற்ப நிசவடிவைநோக்கிடத்திற்
றனையன்றிவேறில்லை தங்கத்திற்பணிதியைப்போல். (௪௨)

யானேகேனென்றகற்றும் யாதும்பிறிவின்றி
யானேகினிற்குகே னென்னவதிசயமே. (அங)

ஆங்காரஞ்சித்த மந்தமனமதியிறந்து
நீங்காதவென்னிடத்தி னிலையாயிருந்தனமே. (அச)

சங்கற்பமுண்டாகிற் சாற்றுமகக்கரண
மங்கப்போதுண்டாகி யகங்காரமாதிகளாம். (அரு)

ஐயந்துணிவு வபிமானஞ்சிந்தனைகள்
செய்யுமகக்கரணச் சித்தமுதனான்கும். (அசு)

ஓசைபரிச முருவஞ்சுவைகந்த
மாசையினிற்றானறிய வறிவிந்தியந்தோன்றும். (அஎ)

அறிவிந்தியமதனி லறிந்துசெயக்கருமப்
பொறியைந்துந்தோன்றும் பொருந்துமிவைபதினைலாம். (அஅ)

சங்கற்பம்வேறாகிற் றன்பதினாலும்வேறாஞ்
சங்கற்பந்தானாகிற் றானாய்விளங்கிடுமே. (அகூ)

எவ்வெவ்வடிவுதொறு மிருந்துநினைவெப்படியோ
வவ்வவ்வடைவே யடைந்தேயிருந்தனமே. (கூ0)

அவ்வவ்வடிவு மவ்வவர்க்கேதோன்றியிடு
மெவ்வடிவுமியாமென்ன விருந்தநுபூதியிலறிந்தேன். (கூக)

எல்லாவடிவு மியாமெனவேகாண்பதன்றி
யெல்லாரநுபவமு மியாமறியவேண்டுவதில். (கூஉ)

ஓரொருவர்கண்டிடலு முயிராசத்தியிற்காண்டற்
பேருருவைகண்டவர்க்குப் பிறிதொன்றுங்காணதே. (கூங)

எல்லோரநுபவமு மிதுவெனவேகண்டிடலு
நில்லாநினைவதனி னிசமாகக்கூடியன்றோ. (கூச)

நினைவதனை நீக்கி நிஜசொரூபங்கண்டவர்க்கு
நினைவதனைக்கூட நினையாதொருக்காலும். (௫௫)

எந்தப்பொருள்களினின் றெய்தியிடுமின்பனைத்து
மந்தப்பிரமத்தி னானந்தலேசமதே. (௫௬)

அந்தப்பிரம வானந்தந்தானடைந்தோர்
எந்தப்பொருள்களினு மின்புளதென்றெண்ணுவரோ. (௫௭)

சகலகர்மங்களையுந் தானேககாலத்தி
லகட கிழவேயடைந்த வதிசயமும்பெற்றனமே. (௫௮)

ஒருகுடைக்கீழரசாள்வோ னோருருக்கரசாகக்
கருதுவனோ னதினொன்றுங் கலங்காதிருந்தனமே. (௫௯)

காண்பதெல்லாந்தன்னுருவாய் காண்பதன்றிவேறாகக்
காண்பதுவுமுண்டோ கயிற்றைவிடவரவுண்டோ (௬0)

இத்தகைநிச்சயமுணர்ந்தே யிதிற்கலக்கமில்லாமற்
புத்திசமாதானத்தைப் பொருந்தல்சமாதியதாகும். (௬௧)

பேதவாதியைகுறித்துப் பேசுமறைசெகசிருட்டி
பேதநீங்கின்றதென்றும் பிரமமேயுளதாகும். (௬௨)

தோற்றமொடுக்கமில்லை தோற்றமொடுக்கத்திலுள்ள
மாற்றறியபெந்தமுத்தி மருளென்றறிந்தனமே. (௬௩)

முத்தியுள்ளதென்றெண்ணின் மொய்பந்தமுண்டாகும்
புத்தியினிலஃதொருவிப் போதமாயிருந்தனமே. (௬௪)

வாரிபலவடிவான வாறுபோற்சங்கற்ப
நேரினாற்றான்றானே நிலையில்சகமாய்நிகழும். (௬௫)

சகமென்றுந்தானென்றுஞ் சாற்றிடுதன்மாத்திரமே
யகமதிற்றோர்ந்திடுமிடத்தி லகண்டமாயிருந்ததுவே. (௬௬)

சத்தேயுளதென்றுஞ் சகமதனிற்றனின்று
சத்தேபோற்றோன்றியிடுந் தான்சித்தேயெக்காலும். (௬எ)

தோற்றிடுதறன்சத்தே தோற்றிடுந்தன்சத்தையினிற்
றோற்றிடுமிச்சகமனைத்துஞ் சொற்றிடுங்கற்பிதவடிவே. (௬அ)

சத்தைக்கேதோற்றரவு தானுண்டசத்தினுக்குச்
சத்தைப்போற்றோற்றமில்லை சத்தையினிற்றனிகழும். (௬௯)

சத்தையிடமாய்நின்றே தான்வேறுபோற்றோன்றிச்
சத்தைபோலேநிகழுஞ் சகமசத்தேயல்லவோ. (எ0)

அசத்தொருகாலுயுந் தோன்றுதந்தவுளசத்தையே
யசத்தையுளதின்விளக்கு மதிட்டானமாய்நின்றே. (எக)

தோற்றிடுதல்சத்தையே தோற்றிடுமிச்சத்தையினிற்
றோற்றிடுமிச்சகமனைத்துஞ் சொல்லாய்முடித்ததுவே. (எஉ)

சத்தைக்கேதோற்றரவுஞ் சார்ந்திடுமானந்தமதுஞ்
சத்தையில்லாதிந்தச் சகத்தினுக்குத்தானுண்டோ. (எங)

சித்துக்கேயுள்ளிருப்புஞ் சேர்ந்திடுமானந்தமதுஞ்
சித்தில்லாதிந்தச் செகத்தினுக்குத்தானுண்டோ. (எச)

ஆனந்தமானதற்கே யானவிருப்பும்முதிப்பு
மானந்தமில்லாத வகிலத்துக்கும்முளதோ. (எரு)

சச்சிதானந்தத்திற் சங்கற்பிதமாகிச்
சச்சிதானந்தத்தைத் தான்விடாதேநிகழும். (எ௬)

தோன்றுவதுசித்தே தொல்லுலகுநாமருவாய்த்
தோன்றுவதுகற்பிதமே சொரூபமன்றிவேறுண்டோ. (எஎ)

சொரூபலக்கணஞ்சகத்திற் றோன்றிவிளங்குதலாற்
சொரூபமேயென்று துணிந்தேயமைந்தனமே. (௭௮)

அறியாமையாலே யகிலம்போற்றோன்றியிடு
மறியாமைநீங்கிடத்தி லறிவாயேதோன்றியிடும். (௭௯)

என்றுமொருபடியா யிருந்தபடியிருக்க
நின்றபடிபாரா முன் னிலைகலங்கிநின்றனமே. (௮௦)

நிலைபிரிந்தபோது நிலையினில்வந்திடுபோதும்
நிலைபிரியாதேநிகழு நிஜசொரூபமல்லவோ. (௮௧)

நிலைபிரிந்ததென்று நிலையினினின்றேநோக்கி
னிலைபிரிந்ததேயிலையாய் நிஜசொரூபந்தோன்றினதே. (௮௨)

பந்தமுத்தியென்னப் பகர்ந்திடுமிரண்டென்று
மந்தபரிபூரணத்தி லன்றேயிலையலவோ. (௮௩)

தன்னையேகண்டு தானிருக்கவெல்லோருந்
தன்னையாரென்றே தவிப்பதுவுமென்னையோ. (௮௪)

கண்டிடுதலெல்லாங் கனசொரூபமேயன்றோ
கண்டிடுதல்வேறென்று கலங்குவதுமென்னையோ. (௮௫)

தோன்றிவிளங்குவது தொல்லுலகுக்குமுண்டோ
தோன்றிவிளங்குவது சொரூபத்துக்கேயன்றோ. (௮௬)

ஆதலினாற்காண்பதெல்லா மறிவுருவேயெனக்கண்டு
போதவிழிதிறந்து பொருளாயிருந்தனமே. (௮௭)

முன்வினையாஞ்சஞ்சிதத்தின் முடிச்சையவிழ்த்தனமே
பின்வினையாகாமியத்தைப் பிடித்துப்பிசைந்தனமே. (௮௮)

வீடுபந்தமென்றிடுதல் மித்தையேயாதலினால்
வீடுவினையிரண்டு மெங்கேயுளதாகும். (௮௯)

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR. MADRAS-41

ஒருகாலுநிலைகலங்கா துண்டாய்ப்பெற்றதிலமைந்து
வருகாலஞ்செல்கால மறியா திருந்தனமே. (௯௦)

தெரிசனத்தின்முத்தியெனச் செப்புஞ்சிதம்பரத்தைக்
கரிசனமாய்க்கண்டு கருக்கழியநின்றனமே. (௯௧)

பார்த்தவிடமெங்கும் பரிபூரணமாகிக்
கோத்திருந்தபாழ்தனிலே குடியாயிருந்தனமே. (௯௨)

செகமதையுந்தான்விழுங்கிச் சீவனையுமுள்வாங்கி
யகமதுவும்புறமுமிலா வகண்டமாய்நின்றனமே (௯௩)

அதுவிதுவென்றிடவில்லா வகண்டபரிபூரணமாம்
பொதுவதனிற்குடியாகிப் புகுந்தேயிருந்தனமே. (௯௪)

தந்தையார்தாயார் தாரமார்புத்திரரார்
பந்தமாரெல்லாம் பரமாயிருந்ததே. (௯௫)

ஊரேதுலகே துடலேதுண்பொருளேது
சார்பேதுளவெல்லாந் தானாயிருந்தனமே. (௯௬)

படித்தறிந்தபோதே பலகலையாகமங்களெல்லா
மெடுத்தெறிந்துவிட்டே னெனைவிடவேறிலையென்றே. (௯௭)

தெருள்விழியோர்துணிவிதெனத் தேர்ந்தனுபூதியிற்கொள்வர்
மருள்விழியோர்திரிவிலிதை மாயாவாதமதென்பர். (௯௮)

ஓவதனின்மூவெழுத்து மோரெழுத்தேயானதுபோற்
சீவபரசிவமூன்றுஞ் சித்தொன்றேயல்லவோ. (௯௯)

புத்தியில்லாவென்றனக்கும் போதவிழிதான்றிறந்து
முத்திபதங்காட்டுவித்த முதுகிரிக்கென்கைம்மாறே. (௧௦௦)

யானுணர்ந்தவிப்படியே யிப்பிரமவனுபூதி
தானுணர்ந்தேயெல்லோருஞ் சதிராய்வாழ்ந்திடவேண்டும். (௧0௧)

முமலவிருளினைநீக்கி முத்திபதமெனக்களித்த
நிமலவிருத்தாம்பிகையே நீடூழிதான்வாழ்க. (௧0௨)

பிரமானுபூதிவிளக்கம்

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

ஆறாவது.

# ஞானவம்மானை.

ஆழத்துப்பிள்ளை யடிதொழு தம்மானே
ஐயந்திரிவை யறுத்தேன்கா ணம்மானே
விருத்தவம்பிக்கப்பத மேவியே யம்மானே
மெய்ஞ்ஞானக்கண்ணை விழித்துப்பின் னம்மானே
கருத்திற்றுணிவைக் கருதினின் றம்மானே
கண்டபடியே கழறுகே னம்மானே
தந்தைதாய்தாரந் தமரெனு மம்மானே
சாற்றுமுயிர்ச்சார்வு தனம்பணி யம்மானே
புவிகாணியென்னும் பொருட்சார்வு மம்மானே
புறப்பற்றெனுமிவை பொருந்தினின் றம்மானே (௧௦)

குலமுஞ்செல்வமுங் குழகுங்கோல மம்மானே
குறைவில்லையெனவெண்ணிக் கொண்டுழன் றம்மானே
திரிதருகின்றேன் சிலகால மம்மானே
செம்மைநெறிதனைச் சிந்தியா தம்மானே
சிவநேசந்தவர்தானஞ் செய்யாம லம்மானே
சித்தர்தெளிந்தது தெய்வீகத் தம்மானே
அனித்தமசுத்த மரந்தையே யம்மானே
ஆனவிம்மாயை யசத்தேகா ணம்மானே

நித்தியநின்மல நீடின்ப மம்மானே
நிஜமானமுத்தி நிலைசத்தே யம்மானே
என்னவுணர்ந்தபி னில்லின்மை யம்மானே
ஏறநோக்கா திளமைதனி லம்மானே
பொய்யெனவிட்டுப் புறப்பட்டே னம்மானே
போதகுருசாந்தன் பொன்னடிக் கம்மானே
வந்துதுதித்து வணங்கினே னம்மானே
மலரடியென்சென்னி வைத்துப்பின் னம்மானே
முத்திநெறியை மொழிந்துட னம்மானே
மூதகிரியிற்றவ முயலென்று னம்மானே
அவனுரைத்தபடி யங்கிருந் தம்மானே
அல்லும்பகலு மசைவற வம்மானே
மேவிநின்றேதவ மேவினே னம்மானே
விருத்தவம்பிகைவந்து விளக்கினா ளம்மானே
அவள்விளக்கநன்று யனுபவ மம்மானே
ஐயந்திரிவற வறிந்தேன்கா ணம்மானே
எம்மதத்தோர்க்கு மெழில்வீட்டி லம்மானே
ஏகமாயனன்னிய மெய்துத லம்மானே
சம்மதமத்தகை சம்மதிக் கம்மானே
தத்துவமசியென்று சாற்றிடு மம்மானே
இந்தச்சம்மதிக் குயிர்சனு மம்மானே
இருமுதலென்ற விழுவுகா ணம்மானே
ஒன்றுகின்முத்தியு மொன்றுதென் றம்மானே
உரைத்திடிலபின்னையி லொன்றுங்கா ணம்மானே
பின்னையிலிருமுதல் பேசாம லம்மானே
பேசொணாதபின்னையிற் பிரமமொன் றம்மானே

அவினையிலேகமா மனுபவ மம்மானே
ஐந்தாகும்பின்னையி லனுபவ மம்மானே
சத்தியின்றியுண்டு சத்திமா னம்மானே
சத்திமானையின்றிச் சத்தியி லம்மானே
பந்தத்துக்கேதுவாம் பகர்பின்னை யம்மானே
பந்தம்விடற்கேது பகர்மற்ற தம்மானே

இப்பந்தம்வீடின்றி யிருந்திடு மம்மானே
ஏகமதையன்றி யிவையில்லை யம்மானே
அதனாலேகமென்ற லாந்துணி வம்மானே
ஆந்திரிவிருமுத லாகுமென் றம்மானே
பிரத்தியக்கமதாகப் பேசுகே, னம்மானே
பிராகபாவமதிற் பிரமமொன் றம்மானே
நினைவிற்கூடியபின்னை நிகழ்மாயை யம்மானே
நிஜமாய்நோக்கிடிலிரண்டாய் நிகழுங்கா ணம்மானே
நினையுந்தனையன்றி நில்லாதென் றம்மானே
நீக்கிடிற்றானேயாய் நிகழுங்கா ணம்மானே

தோன்றுதலெல்லாஞ் சொரூபமொன் றம்மானே
தோன்றுதல்வேறென்று சொல்லிடி லம்மானே
ஐந்துபதார்த்தமு மாறாறு மம்மானே
ஆகிவேறுபோ லமர்ந்திடு மம்மானே
அனைத்துஞ்சொரூபமென் றனுபவத் ம்மானே
ஆறாறுமமைந்து மதுவாங்கா ணம்மானே
இதனாலெல்லாநா மென்றுகண் டம்மானே
ஏதும்பதைப்பற் றிருந்தேன்கா ணம்மானே
என்சத்தேயுண்டா யிருக்குங்கா ணம்மானே
என்சித்தேதோன்றி யிடும்பின்னை யம்மானே

என்னின்பேயின்பா யெய்துங்கா ணம்மானை
எல்லாஞ்சத்துச்சித் தின்பங்கா ணம்மானை
என்னையெல்லையுங்கண் டெய்தினே னம்மானை
இன்பமேயெய்தி யிருந்தேன்கா ணம்மானை
எந்தப்பொருளிலு மின்பெய்த லம்மானை
என்னின்பமேயென் றிசைந்தேன்கா ணம்மானை
இனியோர்பொருளையு மெண்ணினின் றம்மானை
இச்சைசெய்யேனதி லின்பமில் லம்மானை
ஆசைபயமவை யற்றேன்கா ணம்மானை
ஆனந் தநித்திய ஞானதா லம்மானை (௮௰)

நிகழ்காலமது தனி னேரிட்ட தம்மானை
நிராசையிற்றுய்த்து நிலைநிற்கே னம்மானை
என்னினைவிலென்னை யிதுவென்றே யம்மானை
இன்றுணவாய்கண் டிருக்கேன்கா ணம்மானை
என்னினைவின்மையி லேகமா யம்மானை
என்னையேயான்கண் டிருக்கேன்கா ணம்மானை
இங்குமங்குமென்னை யானேகண் டம்மானை
ஏதுங்கவலையற் றிருக்கேன்கா ணம்மானை
அசைவுசெய்பின்னையி லன்றேநின் றம்மானை
ஆடுகுதலிதென் றறிந்தேன்கா ணம்மானை (௯௰)

என்றனையென்னையன்றி யிலையொன்று மம்மானை
இதுதுணிவெனமழு வேந்துவே ளம்மானை
என்னையறியாம லிவ்வள வம்மானை
எங்கிவழிகாணு தேற்குமே யம்மானை
தன்னைநிகராகுஞ் சங்கரி யம்மானை
தண்ணருள்செய்த தயவினுக் கம்மானை

என்னகைம்மாறுமுண் டென்னிட தம்மானே
இனியவளடியவர்க் கெழிற்பணி யம்மானே
விரும்பியேசெய்வது விதியிந்த வம்மானே
விருத்தகிரித்தலம் விளங்கிட வம்மானே (௪00)

ஞானவம்மானை முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

ஏழாவது.

# வேதாந்த

# தசாவத்தைக்கட்டளைச்சுருக்கம்.

---

மோக்ஷமுண்டென்கிற வெம்மார்க்கத்துக்கும் உபக்கிரமத் திற்பந்தமும், உபசங்காரத்தின்முத்தியும், சித்தாந்தமாகையினாலே இம்மார்க்கத்தினுடைய பந்தமுத்திவியவகாரஞ் சுருக்கமாகச் சொல்லப்படாநின்றதெப்படியெனில்.—சத்தியம், ஞானம, அனந்தம், ஆனந்தமென்னும் இலக்கணத்தையுடைய சுயம்பிரகாசமாகிய பரவத்துவின்கண்ணின்று வாசகீஞ்செயவொணாத் பின்னசத்திதோன்றும; அதினின்று மாயைதோன்றும்; அதில் ஊர்த்தமாயையினின்றும் பரதத்துவந்தோன்றும்; அதினின்றும் வியோமந்தோன்றும்; அதிற் காலபரந்தோன்றும்; அதோமாயையினின்றும் புருடன்றோன்றும்;. அதின் மூலப்பகுதி தோன்றும்; அதின் மான்தோன்றும்; அதிலாங்காரந்தோன்றும், அந்தவாங்காரந் திரிகுணமாக விரியும்; அவையிற் சாத்துவிதாங்காரத்தின் மனமும், ஞானேந்திரியங்களுந் தோன்றும்; இராசதவாங்காரத்தில் கன்மேந்திரியங்களுந் தோன்றும்; தாமதவாங்காரத்தில் சத்தாதிகளுந்தோன்றும்; இந் தசத்தாதியைந்தையும் ஒவ்வொன்றை யிரண்டுகூறுசெய்து அவையி லொருகூற்றில் ஒவ்வொன்றை நன்னான்குகூறாகச்செய்து தனதுகூற ல்லாத நாலினுங்கூட்டப் பஞ்சீகரணதூலபூதமாம்: உபக்கிரமமுற்

## ௧௩அ வேதாந்தசாவத்தைக்கட்டளைச்சுருக்கம்.

றம். [ இனி தத்துவங்களினுடைய வகையெப்படி யென்னில்:—பஞ்சீகரணதூல பூதமைந்து, சத்தாதியைந்து, ஞானேந்திரியமைந்து, கன்மேந்திரியமைந்து, அந்தக்கரணங்களுலு, புருடன், காலபரம், வியோமம், பரம், ஆக தத்துவமிருபத்தெட்டுமேல் மாயையொன்று, பின்னுசத்தியொன்று ஆக ௩௰ : இவையேபந்தம். இனியிவை முப்பதுநீங்கி மேற்சுயம்பிரகாசத்தை யடைதலே உபசங்காரம், இதற்கு மார்க்கமெப்படி யென்னில்:—தூலபூதமைந்து; சூக்ஷ்மபூதமைந்து, ஞானேந்திரியமைந்து, கன்மேந்திரியமைந்து, ஆக இருபதுஞ்சீவசாக்கிரம்; இத்திற்றிரோதாயிநீங்கும் மனம், புத்தி, ஆங்கார மூன்றுஞ்சீவசொற்பனம்; பிரகிருதி, சீவசுழுத்தி, புருடன், பரசாக்கிரம், இதிற்பிரகிருதி நீங்கும்; காலபரம், பரசொற்பனம், இதில் அசுத்தமாயை நீங்கும்; வியோமம், பரசுழுத்தி, பரம்சிவசாக்கிரம்; மாயை விசுவக்கிராசம் இதிற் கன்மநீங்கும்; பின்னுசத்தி, உபசாந்தம், இதிற்சுத்தமாயை நீங்கும்; சுயம்பிரகாசமே குருதுரியம், இதில் ஆணவ நீங்கும்; ஆக வவத்தைபத்து: இதுவேமுத்தி; இவ்வொழுங்கில் ஞானுசாரியர் கைகாட்டுப்படிக்குச் சமாதியிலிருந்து அநுபவம்பண்ணிக் கொள்ளவேண்டியது.

வேதாந்தசாவத்தைக்கட்டளைச் சுருக்கம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது.

# வேதாந்த

# தசகாரியக்கட்டளை.

நித்திய நைமித்திய காமியப்பிராச்சித்த உபாசனாதிகன்மங்களை அனேகஜென்மாந்தரங்களிலே பண்ணப்பட்டு கிருதகிருத்தியனாய், நித்தியா நித்தியவத்துவிவேகம். இகமூர்த்திரார்த்தபலபோகவிராகம், சமையாதிசட்கம், முமூட்சத்துவம் என்கிற சாதன சதுஷ்டய சம்பத்தியுடைய அதிதீவரபக்குவமுடையோர் மேற்செனனமெடாதவகைக்கு, பிரமகைவல்லியஞ் சமாதியிலிருந்தடைகுதற்கு மேலானமார்க்கம் வேதமுடிவாகிய உபநிடதத்தில் தசகாரியமாக இருக்கும்; இதற்குத் தொகை யெப்படியெனில்:—மாயாரூபமென்றும், மாயாதெரிசனையென்றும், மாயாசுத்தியென்றும், சீவரூபமென்றும், சீவதெரிசனையென்றும், சீவசுத்தியென்றும், பிர்ம்மரூபமென்றும், பிர்ம்மதெரிசனையென்றும், தேககைவல்லியமென்றும், விதேககைவல்லியமென்றும் ஆக பத்து: இதுதொகையாகிய சிரவணம்; இதற்குவகை யெப்படியென்னில்:—மாயாரூபமாவது சர்வப்பிரபஞ்சங்களும் இத்தனை அங்கிசத்துடனே கூடிவிளங்குமெனக்காண்கை: மாயா தெரிசன மாவது அந்த அங்கிசத்தில் இத்தனையங்கிசம் மாயாசம்பந்த மெனக்காண்கை: மாயாசுத்தியாவது அதினுடைய வதிட்டானத்தைக் காண்கை: சீவரூபமாவது விளக்கவிளங்கப்பட்டமாயாரூபத்தைக் காண்குதற் கோரறிவுண்டெனக்காண்கை: சீவதெரி

சனமாவது அவ்வறிவைத்தானெனக்காண்கை: சீவசுத்தியாவது அவ்வறிவினதிட்டானத்தைக்காண்கை. பிரமரூபமாவது மாயாரூபத்துக்குஞ் சீவரூபத்துக்கும்மதிட்டானம் பிரமமெனக்காண்கை: பிர்ம்மதேரிசனமாவது ஆரோபிதமு மதிட்டானத்தைவிட வேறில்லாததுபோல மாயையுஞ்சீவனும் பிரமமாகத்தானேகாண்கை: தேககைவல்லியமாவது அந்தப்பிரமமாகத்தானே காண்கிறபோதமு நீங்கி ஆனந்தமயமாய்நிற்கை: விதேககைவல்லியமாவது அந்தப்பிரமானந்தா தீதத்தையடைகை: இதுவனையாவியமனனம். இனி விரிவு எப்படியெனில்:—சத்தாதிவிடயத்தி லவாவறுத்து ஏகாந்தத்திலிருந்து நிதித்தியாசனத்தில் சமாதியைப்பொருந்தி சாட்சாத்கரிக்கும்வகை: மாயாரூபமாவது இதுவென்றுகாணப்பட்டசர்வப்பிரபஞ்சமுமுண்டாய் விளங்கிரம்மியமாய் நாமரூபமாய் இவைஐந்தங்கிசத்துடனே விளங்குதலைக்காண்கை: மாயாதேரிசனையாவது அந்தஐந்தங்கிசத்தில் பின்பு சொல்லப்பட்ட நாமரூபமாகிய விரண்டங்கிசமு மாயையெனக்காண்கை: இனி மாயாசுத்தியாவது இந்தமாயாசம்பந்தமாகிய நாமரூபத்துக்குமுன்சொல்லப்பட்ட உண்டாய்விளங்கி ரம்மியமாகிய மூன்றங்கிசத்தையுடைய அதிட்டானத்தைக்காண்கை: சீவரூபமாவது ஐந்தங்கிசத்துடனே விளங்கப்பட்ட சர்வத்தையுநோக்கி அவையில் பின்புசொல்லப்பட்ட இரண்டங்கிசமுமாயாசம்பந்தமென்றும் அந்தமாயாசம்பந்தமும்முன்பு சொரூபசம்பந்தமாகிய சச்சிதானந்தத்தைவிட வேறின்மையென்றுங் கண்டவறிவொன்றுண்டெனக்காண்கை: சீவதேரிசனையாவது நாமரூபமயமாகிய கேவலமுநீங்கிச் சச்சிதானந்தமாகிய பிரமத்தைப்பற்றிநிற்கை: இதுசாக்கிர அவத்தை. சீவசுத்தியாவது அந்தச்சச்சிதானந்தமயமாகிய பிரமத்தை அவ்வொளியே கண்ணாகக்கொண்டறிந்து அதிற்சீவத்துவபோதமடங்கி அச்சீவனுக்கு அதிட்டானமாகிய பிரமந்தானாய்நிற்கை: பிரமரூபமாவது மாயாரூபமாகிய நாமரூபத்திற்கும்

அதையுணருஞ்சீவனுக்கு மதிட்டானமாய் விளக்கப்பட்டது சச்சிதானந்தமேயெனக்காண்கை இதுசொற்பனவஸ்த்தை. பிரமதேரிசனையாவது பழுதை, கிளிஞ்சில், கட்டை, சூரியன், தங்கம், மண் முதலிய வதிட்டானங்களில் கற்பிக்கப்பட்டபாம்பு, வெள்ளி, கள்வன், கானனீர், ஆவரணம், கடகலசமுதலியவாரோபிதம் விசாரித்தவிடத்தில் அவ்வதிட்டானமேயாகி விளங்குதல்போல ஆரோபிதமாய் விளங்கப்படுகிற நாமரூபமயமாகிய மாயையும், அம்மாயையையறியப்படாநின்ற சீவனும் அதைவிளக்கப்பட்ட பரமும், நாமரூபமறியப்பட்டதானும், அறிவிக்கப்பட்டபரமே யெனக்காட்டாமல் நாமரூபத்தையுந் தன்னையும்வேறுபோல் விளக்கப்பட்ட அஞ்ஞானமும், அதற்கு நியதமாகியகர்மமும், இந்த ஐந்துபதார்த்தமும் அதிட்டானமாகிய சச்சிதானந்தசொரூபமேயாய்க்காண்கை: இதுசுழுத்தி. தேகசகைவல்லியமாவது அப்படி அந்த ஐந்துபதார்த்தமுஞ் சொரூபமேயாய்க்காணப்பட்டவாதனையுநீங்கி அவ்விடத்திற் பிரகாசிக்கப்பட்ட சொரூபானந்தத்தைப் பெற்றுநிற்கை: இதுதுரியம். விதேககைவல்லியமாவது அந்தச்சொரூபானந்தத்தைப்பெற்று ஆனந்தாதீதனாய் வாக்குமனாதீத கோசரமாகிய பிரமகைவல்லியத்தைப் பெறுகை: இதுதுரியாதீதம். இவ்வொழுங்கில் குருகாருண்ணியத்தினாலே சென்றுதசகாரியமு மனுபவப்பட்டுப் பிரமகைவல்லிய மடையில் அப்போது பந்தமுத்திவியவகாரஞ் சொற்பனம்போலக்கண்டு பண்டைப்படியாய்நின்று மேற்செனனத்துக்கு வித்தாகிய ஆசைபயமிரண்டுள், தான் சர்வானந்தத்திற்கு மதிட்டானமாகிய பிர்ம்மானந்தமயமாகையால் ஆசையும், தற்சொரூபமாகிய பிரமத்தைத்தவிரபிரத்தியக்கு வேறொன்றுமில்லாத தாகையால் பயமுமொழியும்.

வேதாந்த தசகாரியக்கட்டளை
முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது.

# சகச நிட்டை.

சவிகற்பநிருவிகற்பத் தகநிட்டையெனவுரைக்கும்
இவிகற்பமென்றுமின்றி யிடைவிடாச்சகசநிட்டை
செவியதினெனக்குநீயுந் திருவுளஞ்செய்யவேண்டும்
அவியமில்விருத்தவெற்பி லம்மையேயன்பர்வாழ்வே. (௧)

பொதுவுறத்தருமம்பண்ணிப் புகல்வினைச்சமமதாகி
அதுவிதுவென்னுஞ்சித்த மமலமாயநித்தநித்தம்
இதுவெனவுணர்ந்தநித்தத் திகபரத்திச்சையற்ற
சதுரர்களிடத்திற்பாசந் தகர்ந்திடும்பந்திதோன்றும். (௨)

பத்திதான்பதிந்தகாலைப் பகரங்கத்தலமடைந்து
சுத்தியாயங்கமந்தத் தொல்லருட்சத்தியாகி
நித்தியானந்தலிங்க நேரதாய்த்தரிக்கப்பட்டுத்
தித்தியாநின்றவின்பந் திருத்தியிற்களிக்குமென்றும். (௩)

சமரசம்பதிந்தகாலைத் தலமயிக்கியத்தடைந்திங்
கமரங்கமானவான்மா வந்தச்சிற்சத்தியாகி
விமலமாலிங்கந்தன்னை விளங்குநெஞ்சினிற்றரித்து
நிம்லமாம்பரஞானந்த நிஜதிருத்தியிற்களிக்கும். (௪)

ஆனந்தம்பதிந்தகாலை யச்சரணத்தடைந்து
வானந்தத்தங்கமாகு மகபராசத்தியாகித்
தானந்தப்பிரசாதத்தைத் தரித்துச்சோத்திரத்திலென்றும்
ஊனந்தமில்லாவின்ப வோசையிற்களிக்குமென்றும். (௫)

அனுபவம்பதிந்தகாலை யடைந்துநற்பிராணலிங்கத்
தெனுமங்கவாயுநின்றங் கெழிலாதிசத்தியாகி
உனுஞ்சரலிங்கந்தன்னை யொன்றுந்தொக்கினிற்றரித்துப்
பனுமந்தப்பூரமானந்த பரிசத்திற்களிக்குமென்றும். (௬)

அவதானயபதிந்தகாலை யடைந்தந்தப்பிரசாதத்தை
இவஞனைதேயுவங்க மிச்சைநற்சத்தியாகி
நவமானசிவலிங்கத்தை நயனமற்றதிற்றரித்திங்
குவமானமில்லாவின்ப வுருவினிற்களிக்குமென்றய. (௭)

நயிட்டியபதிந்தகாலை நன்மயேசுரத்தடைந்து
சயித்தியசலமாமங்கந் தகுஞானசத்தியாகி
வியப்புறுங்குருலிங்கத்தை மேவுநாவினிற்றரித்திங்
குயப்பெறுபரயானந்த வுருசியிற்களிக்குமென்றும். (௮)

சற்பத்திபதிந்தகாலைத் தகுயபத்தத்தலமடைந்து
முற்பகர்தரையாமங்க மொய்யதாங்கிரிகையாகித்
தற்பராசாரலிங்கந் தரித்துநாசியனிலந்தச்
சிற்பரானந்தகந்தந் தேர்ந்ததிற்களிக்குமென்றும். (௯)

ஒருபத்திதானேயாறு யொருதலந்தானேயாறாய்
ஒருவங்கந்தானேயாறு யொருமுகந்தானேயாறாய்
ஒருலிங்கந்தானேயாறு யொருமுகந்தானேயாறாய்
ஒருவின்பந்தானேயாறு யொன்றதாய்க்களிக்குமென்றும். (௧௦)

அறுதியிற்சிவமேலிங்க மபினையேயங்கமாகும்
அறுதியிவ்வபினையேயிவ் வங்கமதாயிற்றென்றால்
அறுதியச்சிவமேயந்த வங்கத்திற்புறம்புந்தோன்றும்
அறுதியக்குருவத்தீக்கைக் கருத்தமுமிவையேயாகும். (௧௧)

சகசநிட்டை முற்றிற்று.

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

---

பத்தாவது.

# உபதேச
# சித்தாந்தக்கட்டளை.

ஆத்மாக்களை முத்தியிலேவிடவேண்டி வாக்குமனாதீதகோசரமாகிய அருட்சத்திதானே பாசவயிராகஞ், சிவகாருண்ணியம், ஈஸ்வரபக்தி, பிரமஞானமென்கிற நான்குமே ஒருதிருமேனி யெனக்கொண்டருளிய ஞானாசாரியர், இனிப்பிறவாத முடிந்தபிறப்பில்நித்தியா நித்தியவத்து விவேகம், இகமுத்தார்த்த பரபோகவிராகம், சமையாதிசட்கம், முமூட்சத்துவமென்கின்ற சாதனசதுஷ்டயசம்பத்தியே, ஓர்வடிவெனக்கொண்ட சற்சீடனுக்கு அனுக்கிரகம் பண்ணுமுறைமை. உலகத்தின்கண்ணே வயித்தியராயினோர் ஒருவனது வியாதியை நிச்சயம்பண்ணி இத்தனை தினத்தின்மேல் அவுடதங்கொடுக்கவேணுமென்று நியமமிருப்பினும், ஓரோர் அசாத்தியவியாதியையுடையவனுக்குக் கண்டவக்கணமே கனமாகியபூபதிமுதலிய அவுடதங்களைக்கொடுத்து உடனேதிருப்பவேண்டும்; அதைப்போலச்சாதனங்களையுடைய தீவரதரபக்குவனுக்கும் ஓராண்டாகிலுஞ் சோதித்து அனுக்கிரகம் பண்ணவேணுமென்றாலும் ஓரோர் அதிதீவரதர பக்குவனுக்கு அந்தக்கணமே இந்த உபதேசசித்தாந்தத்தை அனுக்கிரகம்பண்ணி பவரோகத்தை யுடனே நிவிர்த்திபண்ணவேண்டும். இந்த உபதேசசித்தாந்த மார்க்கத்திலொழிந்து, மற்றைய மார்க்கத்தினாலே பவரோக நீங்காதோவென்னில், பதாதிகேசபரியர்

தம் அக்கினிபற்றிக்கொண்டவனுக்கு விழுந்ததுறையிலே அவனை விழுங்கி மேலிடப்பட்ட மடுவிலேயன்றிக் கொஞ்சஜலத்தில் பிரவேசிக்கில் உடனே யவிந்துமுடியாது; அதைப்போல அதீதபக்குவனுக்குள்ளே அவனையும் விழுங்கி யேலிடப்பட்ட அகண்டாகாரஞானம் இம்மார்க்கத்திலே பிரவேசித்த அக்ஷணமேயுண்டாம்; அதெப்படியென்னில், சற்குரு சந்நிதியிலே சற்சீடனானவர் தேனிரம்பிய மலரைத்தேடிய அளிகள்போல் பூதலமெங்குந்தேடி வெப்பந்தீராமல் வந்தடைந்துகண்ட அக்கணமே உள்ளமகிழ்ச்சியையடைந்து தாரகமாகிய சிவமேயெனக்கண்டு அவருடைய அருள்சுரக்கும்படி பண்ணிக்கொண்டு சுவாமி? நானார்? இந்தநானாவாகியவுலகமேது? இதுஆனாயுடையது? எனக்குச் செனனமரணம்வந்தவாறேது? இது யாதினுலேநீங்கும்? இவற்றை யனுக்கிரகஞ்செய்யவேண்டும்; இவையிற் பிரதமத்தில் அடியேன் நானென்று விண்ணப்பஞ்செய்தபடிக்கு என்னையறிவித்தால் மற்றைநாலும் அடியேனே விண்ணப்பஞ்செய்வேனென்று சற்சீடன் நானென்று கேட்க, ஆசாரியரனுக்கிரகம்பண்ணுகிறார்; நல்லது உன்னைக் கரதலாமலகம்போலக் காட்டுகிறோம், நீ நன்றாகப் பார்க்கக்கடவாயென்று திருவடியைச்சூட்டி அஸ்தமத்தக சையோகம்பண்ணி கிருபாதிருஷ்டியினாலேநோக்கி இங்கேயுண்டாய் விளங்குவதெல்லாம் நீயேயென்னில், சுவாமி? இங்கேயுண்டாய் விளங்குவதெல்லாம் நானெப்படியாவேன்? ஆனால் உனக்கிங்கே என்னபிரகாசியா நிற்கிறதென்னில், சுவாமி? நாமரூபமயமாகிய உலகமே தோன்றுகிறது: ஆனாலந்தவுலக மெவ்விடத்தினின்றுதோன்றுகிறதென்னில், சுவாமி? என்னுடைய நினைவிலேநின்று தோன்றுகிறது; ஆனால் நினைவுவேறு உலகம்வேறோவென்னில்? சுவாமி? உலக மெதிரிட்டுக் காண்கையினாலே வேறுதானே, ஆனால் உலகமாகிய நாமரூபத்தைநீக்கி நினைவைப்பாரென்னில், சுவாமி? அப்படி

பார்க்குமிடத்தில் நினைவைக்காணேன், ஆனால் நினைவைநோக்கி நாமரூபத்தைப்பாரென்னில், சுவாமி? அப்படி பார்க்குமிடத்தும் நாமரூபத்தைக்காணேன், ஆனால் நாமரூபமயமாகிய உலகமேதென்னில், சுவாமி? என்னுடைய நினைவுதானே, ஆனால் அந்நினைவு எங்கே நின்று தோன்றுகிறதென்னில், சுவாமி? என்னிடத்திலே நின்று தோன்றுகிறது, ஆனால் நினைவுவேறு நீவேறோவென்னில், சுவாமி? என்னினைவாகையினாலே வேறின்றி நான்றானே, ஆனால் நினைவை நீக்கி யுன்னைப்பாரென்னில், சுவாமி? யான் பிரகாசியா நிற்கின்றேன், ஆனால் நினைவு நீயெப்படியாவாயென்னில், சுவாமி? நினைவுஎன்னைவிட வேறுதானே? ஆனால் உன்னைப்பிறித்து நினைவைப்பாரென்னில், சுவாமி? அப்படிப்பார்க்குமிடத்தில் நினைவைக்காணேன், ஆனால் நினைவுயாதோவெனனில், சுவாமி? நினைவானது நானுமல்ல என்னைவிட வேறுமல்ல, ஆனால் அஃதெப்படியென்னில், சுவாமி? தங்கத்தினிடத்திலே பணிதியானது தஙகமுமல்லாமல் தங்கத்தைவிட வேறுமல்லாமல் கற்பிக்கப்பட்டதுபோல நினைவுமென்னிடத்திலே கற்பிதம் ஆனாலிந்நினைவு வேறேசத்தையோ வென்னில், சுவாமி? அதற்கு வேறேசத்தையில்லை, என்னுடைய சத்தையே தோன்றி விளங்காநிற்கிறது, ஆனால் இங்கே தோனறுமதெல்லாம் யாதெனனில், சுவாமி? இங்கே தோனறி விளங்குவதெல்லாம் நானே, ஆனால் நாமுன்னம் எல்லா நீயென்று சொன்னோமே, அதற்குனக்கு ஐயந்தோன்றித்தே, இப்போது எல்லாய நானேயென்று நீசொன்னது திரிவோ நன்றாய்ப்பாரென்னில் சுவாமி? முதற்றிரிவினாலே எல்லாய நானெப்படி யாவனென்று கேட்டேன், சுவாமி? கடாக்ஷத்தினாலே திரிவுபண்ணிக்கொண்டிருந்த அஞ்ஞான விருள் போய்த் துணிவாகத்தானே எல்லாம் நானேயெனக்கண்டேன்; ஆனால் உன்னைக்கண்டயிடத்தில் அனுபவமெப்படி யிருந்ததென்னில் சுவாமி?, அகண்டாகாரமயமாய்ச் சுட்டிறந்தசுகாதீதமாய்ப் பழுதை,

யினிடத்திற் பாம்பொருக்காலு மில்லாததுபோல், உலகமுயிர்பரமெ ன்பது ஒருக்காலு மில்லாததாய் பிரகாசியாநிற்கிறது; ஆனாலிதுவே தற்சொரூபமுத்தி : இதிற் கலக்கமில்லாமல் தேகபதன பரியந்தம் நிற்பாயாக: இதன்றி அந்தமுத்தி நீயானதுக்குக்குறி; மற்றை நாலும் நீயுன்னனுபவப்படிக்குச் சொல்லென்னில், சுவாமி? நானுவிதமாகி ய பிரபஞ்சம் என்னிடத்திலே ஆரோபிதம்; அது சங்கற்பத்தையு டையது; அந்தச்சங்கற்பத்தையுடைய ஆரோபிதமாகிய பிரபஞ்சம் அதிட்டானமாகிய என்னைவிட வேறல்லவென்று காணுதறிவினு லே எனக்குச்சனனமரணம், எல்லாம் நானேயென்றறியில் செனன மரணமில்லை: இப்படி மற்றை நாலும், சுவாமி கடாக்ஷத்தினுலே எனக்கனுபவமாயிற்று; நல்லது, நம்முடைய அனுபவமுமிதுவே: சுருதியினுடையமுடிவிலே சொல்லுவதுமிதுவே. உன்னுடையவனு பவமுமிப்படியேயாகில் இதுவே உபதேசசித்தாந்தம் என்று இதிற் கலக்கமில்லாமல் வாழ்வாயாகவென்று ஆசீர்வாதஞ்செய்தார்.

உபதேசசித்தாந்தக்கட்டளை

முற்றிற்று.

—*—

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

பதினோராவது.

# பிரமசித்தியகவல்.

எழுவகைப்பிறப்பி லெடுத்தற்கரிய
மானிடப்பிறவி வாய்ப்பிலொருவற்
காடியினதுசொண் டம்முத்தியினை
அடைகுதலேபய னஃதினையன்றிச்
சித்திபுத்திகளிற் சிந்தனைசெய்யின்
ஏதமதாகு மெதிறெலன்னில்
உலகத்தின்கண் ணொப்பிலொருவன்
அன்புகிடைத்தா லவனுலாகிய
பயன்பெறுகுதலே பழுதில்சிறப்பும்
அஃதினைப்போல வவனியின்மனிதப்
பிறப்பினைக்கொண்டே பிறவாநெறியை
அடர்ந்திடுமதனுக் கரிதற்கரிய
அவதியல்லபென் றறிந்துளபோதே
எத்தனம்பண்ணு திருப்பவன்றனக்குத்
தான்வஞ்சகனெனச் சாற்றலுமாகும்
இத்தகைவாகி னியம்பிடுசித்தி
அடைந்திடுகுதல்பய னலவோவென்னில்
அனந்தசித்தி யடைந்திடுமதற்குள

பிரமசித்தி பெறுகுதலேபயன்
அணிமாதிசித்தியடைகுதல்பயன்
றிஃங்கையுமன்றி யியம்பிடுமட்ட
யோகந்தானு மௌள்ளியபிரம்
சித்திக்கங்கஞ் செப்பியவவையின்
கருத்தறியாது கருதிமாறுக
அனுட்டித்தேயவ் வணிமாதிதன்னைப்
பெறுவர்கருத்தைப் பேசக்கேண்மின்
காமாதிகளைக் கைவிடலியமம்
விட்டபொருள்கண் மேவிடிற்றள்ளி
னிற்குதனியம நிருபாதிகமாய்
ஓராசனத்தி லுறைகுதலாசனம்
காமரூபத்தை நாடுமனத்தை
இருதயமதனி லிருக்கப்புகுத்தல்
பிராணயாமம் புறவிடயத்தைப்
பெயர்த்துளேமீட்டல் பிரத்தியாகாரம்
விடயவாதனையை விகற்பறநிறுத்தல்
தாரணையாகுந் தற்சொரூபத்தை
நாடறியான நவிற்றிடுபுறமும்
உள்ளுமறவவ் வொளிதானேயாய்
ஒத்துநின்றிடலே யோக்கியசமாதி
ஆதலினிந்த வட்டயோகமதும்
பிரமசித்தி பெறுதற்கங்கம்
என்னலுமாகு மினிப்புத்தியதும்
பயனலவோவெனிற் பகர்ந்திடுபுத்தி
இடம்பொருளுறவு மின்பங்கீர்த்தி
என்றைவிதமா மிவையைந்தினையும்

நன்றாய்த்தேறி னன்முத்தியதா ம்
இஃதினையன்றி யிம்மாயாவி த
சம்பந்தந்தனைத் தானினைத்திடுத ல்
அறியாமையாகு மஃதினைக்கேண்மி ன்
இடமுமழியா விடமேயிடமா ம்
பொருளுமழியாப் பொருளேபொருளா ம்
உறவுநீங்கா வுறவேயுறவா ய
சுகநிரதிசய சுகமேசுகமா ம்
புகழும்பெரியோர் புகழ்தலேபுகழா ய
ஆகையிற்புத்தி யாகியவிதங்க ள்
எழிலார்வீட்ட யிவ்வகையன் றி
மாயையினுளதாய் வந்திடுசித் தி
புத்திகளென்று புகலிரண்டினையு ய
அடைந்திடநினைத்த லபலமதாகு ம்
எதிருமென்னி லியம்பிடுமோ யா
சம்பந்தத்தைத் தானடைகுதற்கு ய
சத்தியமுத்தி சம்பந்தத் தை
அடைந்திடுமதற்கு மாகியவருத்த ம்
எட்டுணையாணு மிச்சையச்சங்க ள்
உள்ளின்றியேவிட் டொன்றியகாய க்
கிலேசமபண்ணிக் கிளர்தவமதனி ல்
அடைந்திடவேண்டு மாகியவிர் த
இரண்டுவகைக்கு மேற்றமுந்தாழ்வு ம்
இன்றிவருத்த மெய்தல்சமமா ம்
இத்தகைவருத்த மெய்தப்பட்டு ம்
அனித்தப்பொருளை யடைகுதலபல ம்
அழியாப்பொருளை யடைகுதல்சபல ம்

அன்றியுநன்று யறிந்தவிடத்தி ல்
அவைகளிரண்டு யசத்தாதலினா ல்
இன்பமோர்காலு மிலையவைதனினி ன்
றடைந்திடுமின்ப மலையாவறிவி ன்
ஆனந்தலேச. மஃதறியாமையி ல்
இவைகளினிடமா யெய்திவந்ததுபோ ல்
அறிந்திடுமதனா லறிவானந்த ம்
பொருந்திடிற்சகல புத்திசித்திகளு ம்
ஏககாலத்தி லெய்தினதாகு ம்
இதுவனறிவேத மெழிலாகமத்து ம்
புருடார்த்தமாகப் புகனான்கினிலு ம்
சிவமடைகுதலே சிறப்பெனவோது ம்
அச்சிவமென்னு மழகியவீட் டை
ஐயநதிரிவு மறவேயடைத ல்
எமயார்க்கத்தா லெனறடில்வே த
முடிவினின்மொழியு மொய்ந்நெறியதனி ல்
அடைந்திடவேண்டு மம்மார்க்கத்தி ன்
ஒழுங்கைக்கேண்மி னுபநிடமதனி ல்
ஏகமேவா வத்துவிதீய ம்
பிரமமேயென்று பேசிடுமதற்கு ச்
சுசாவிசாதி சுவகதபேத ம்
சொல்லியமூன்றுஞ் சொரூபத்தின் மை
என்றதுவாகி னெழில்வேதாந்த ப்
பக்கந்தனக்குப் பகர்ந்திடும்பந்த ம்.
வீடிவையிரண்டின் விவகாரத்து ணி

‡ எக்காலமென்றும் பாடம்.

வெத்தகையென்னி லியம்பிடக்கேண்மி ன்
நித்தியமாகையி னிகழ்ந்திடுகா ல
பரிச்சேதமதும் பரிபூரணத்துவ ம்
ஆகையிற்றேச வறைபரிச்சேதமு ம்
ஏகமதாகி னியம்பிடுவத் து
பரிச்சேதமதும் பகர்ந்திடவொண் ணா
தறிவாய்ச்சத்தா யானந்தமதாய் ப்
பந்தமுத்தியெனப் பகர்விகார ம்
அதீதமாகி யசைவறவிளங்கு ம்
தன்னிடந்தனிலே சங்கற்-சத் தி
சங்கற்பமல்லா தசங்கற்பசத் தி
என்றிவையிரண்டுண் டிவையிற்சங்கற் ப
சத்தியேதன்னிற் சாற்றிடக்கேண்மி ன்
நினைவுருபமதா நிகழ்ந்திடுமதற் கு
வடிவேதென்னில் வகுத்திடுநாம ம்
உருவமயமே யோரோரிடத்தி ல்
ஒருவன்கூவு முறையதுதா னே
எதிரிட்டப்படி யெழுவதுபோ ல
நினைவதுவென்று நிகழ்ந்திடுநாம ம
உருவதுவென்று மொருபேதமுமி ல்
லவிற்றிடுரூப நாமமயமு ம்
மாயாமயமே மாயையென்றதுதா ன்
யாதொன்றில்லா ததுமாயையாகு ம்
உள்ளதுமலவா யுருப்பெயர்மயமா ய்
நினைவுருபமதாய் நிகழ்சங்கற் ப
சத்திசத்தாய தற்சொருபமதா ய்
அதிட்டானத்தி லாரோபிதமா ம்

ஆரோபிதமு மதிட்டானமின் றி
விளங்காததுபோல் விளங்கிடுந்தன்னை த்
தவிரச்சங்கற்ப சத்தியுந்தோன் று
றித்திகைதோன்று மிருஞ்சங்கற் ப
சத்திமயமாகுஞ் சருவங்களையு ய
சத்தாய்நிகழுந் தற்சொரூபத்தி ல்
ஆரோபிதமென் றறிந்தமையா து
புறம்பெனச்சத்திய புத்தியைப்பண்ணி ப்
பர்த்திடுமிடத்தில் பரமுயிர்சேகமெ ன்
றுரைத்திடப்பட்ட வொருமுப்பொருளு ம்
விளங்கிடுமவையை விளம்பிடக்கேண்மி ன
சங்கற்பசத்தி தன்மயமா ன
நாமரூபமதே நாட்டிடுசெகமா ம
அவையினைநோக்கு மறிவேயுயிரா ம்
அவையினைவிளக்கு மறிவேபரமா ய
இத்தகையாக வியம்புமுப்பொருளு ம்
உதித்திடுமிந்த வுயிர்பரமிரண்டி ல்
மேற்பரஞ்சர்வவிடயமதாகு ய
சீவஞேவேக தேசவிடய ம்
இந்தச்சீவ னிப்படிப்பொய்யாய் ச்
சடமாய்த்தோன்றுஞ் சகத்தினுடை ய
புணர்ச்சியிற்சடமாய்ப் போதவடி வை
விட்டிடனிச்சை விளங்கிடுஞான க்
கிரியையுடைத்தாய்க் கிளக்குமிவையி ல்
கன்மமுண்டாய்க் கன்மந்தன்னா ல்
தோற்றமுடைத்தாய்த் தொன்றுதொட்டு ச்
செனனமரணஞ் சென்றுடன்வரு ம்

இத்தகைபுரியு மிச்சங்கற் ப
சத்தியேபந்தந் தருமசங்கற் ப
சத்தியின்வடிவினிச் சாற்றக்கேண்மி ன்
பிராந்தியிலொருவன் பிசகிமாறுக த்
திக்குகடம்மைத் தேருமிடத்தி ல்
சூரியனின்று தோற்றியதிசையை க்
கண்டுந்துணிவாய்க் காண்குதல்கூ டா
தையமாய்த்தோன்று மடுத்தபிராந் தி
உண்ணின்றுநீங்கி லுள்ளபடி யே
துணிவாய்நேரே தோற்றுமதன் றி
மந்தவிருளின் மறைந்திடுகற்றை ப்
பாம்புபோலப் பார்த்திடுமிடத்தி ல்
யாம்பலவென்றும் பழுதையேயென்று ம்
ஆறதனாலே யறிந்திடுபோது ம்
துணிவதுவாகத் தோன்றுதந் த
மந்தாந்தகார மாறிடிற்றோன்று ம்
அஃதினைப்போல வறிந்திடுசாத்தி ர
ஜென்னியஞானஞ் செப்புதலின் றி
இருதகிருத்தியனாய்க் கிளர்சாதனங்க ள்
நான்குமுடைத்தாய் ஞானாசிரிய ரி
அருளதினாலே யாரணமுடிவா ம்
மாவாக்கியத்தின் வருத்திடுபொரு ளை
விருப்பமதுடனே விசாரணைபண் ணி
இச்செகஜீவ விருபரம்மவை க்
கதிட்டானமாகிய வப்பரசொரூப [illegible]
தானேயென்று தன்னுள்ளிரு ளை
யகன்றுசமாதியென் றறைந்திடுகின் ற

சமாதானபுத்தி தானதுபிறந் து
தனதுசங்கற்ப சத்தியினு லே
ஆரோபிதமா யனேகத்துவங்க ள்
விளங்கினதென்றும் விளங்கிடுமிவைக்கதி ட்
டானந்தானே யாமெனவென்று ம்
பழுதையினிடத்திற் பாமபொருகாலு ம்
இல்லாதஃதி னிவ்வாரோபித ம்
இலயெனநீங்கி யெழிலதிட்டான ம்
ஆய்நிற்குதலே யசங்கற்பசத் தி
இதுவேமுத்தி யிசசங்கற்ப ம்
அசங்கற்பமென்ன வறைந்திடுமிவற்று க்
கதீதனேதானு னையிலவையி ன்
உளதாயபந்த மோங்கியமுத் தி
இவைதனக்கதீத னென்னலுமாகு ய
இத்தகையொருவ னெழிற்குருவருளி ல்
ஐயந்திரிவற வறிந்துசொரூப ம்
தன்னுடசந்நி தானமதனி ல்
சங்கற்பத்திற் றுணையா ய்
விரிந்ததுவென்றும் விரிந்திடுமெவையு ய
அசங்கற்பத்தி லடங்கிடுமென்று ம்
இவையேபந்த மெழில்வீடென்று ம்
இவைகளிரண்டு மென்கணேர்காலு ம்
இலயிவைவிளங்க லெம்மிடமதனி ல்
ஆரோபிதமென் றறிந்தவறி வு
கலக்கமில்லாமற் காத்திரநீங்கு ம்
தன்னளவதனுந் தயிலதாரையினி ல்
நின்றிடின்முடிவி னிகழ்பந்தமுத்தி க்
கதீதமதாகு மழகியபிர ம
சித்தியதனைச் சேருவனே ரே.

பிரமசித்தியகவல் முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாவது.

# சிவதரிசன அகவல்.

உரோமசமுனிக ளுண்மகிழ்ச்சியுடன்
பணிந்திடுகின்ற பழங்கிரிமேய
விருத்தவம்பிகையே விண்ணப்பமொன்றுண்
டெனக்கேன்யானு முன்செவிசாத்தி
அருள்செயவேண்டு மறைநீயென்னில்
கடையனேன்றனக்குங் கலையதாகச்
சுட்டிறந்தொளிருஞ் சுயம்பிரகாச
சிவதரிசனத்தைச் செப்பிடவேண்டும்
நல்லதுனக்கு நாமேயகவிருள்
நீக்கிமுன்படியே நிலையினில்வைத்த
வகைப்படியேநீ வகுத்துரையென்னில்
இருளறநீக்கி யிதுவறநோக்கில்
இவ்விடத்துண்டா யிலகுவதேசிவம்
விளம்புமச்சிவத்தை விளக்குவதேநீ
நீவிளக்குஞ்சிவ மின்றறிகுதல்யான்
இவ்வனுபவத்தி லியம்பியஞாதுரு
ஞானஞேயம்மிவை நண்ணிநிற்கையில்
சிவதரிசனமெனச் செப்பிடலாகா
என்றெனில்யானுனை யெழிலனுபவத்தில்

சிவம்நானெனச் செப்பியமூன்று ம்
உணாமாத்திரமவை யொருமுதரு னே
எப்படியோர்முத லென்றெனிற்சொல்கே ன்
சச்சிதானந்தத் தன்மயஞ்சிவமென ச்
சாற்றுதல்போலுஞ் சாற்றுமோங்கார த்
தடங்கினின்றிடுமூன் றக்கரம்போலு ம்
நீலோற்பலமென நிகழ்த்திடல்போலு ம்
கடமடமகதா காயமென வே
சாற்றுதல்போலுஞ் சாற்றியவினையி ல்
உணாயேபின்ன முளபடிநோக்கி ல்
ஏகமேயா மித்தகைபோ ல
நானீசிவமென நவிற்றிடுமூன்று ம்
சொன்மாத்திரமே சொரூபமதொன் றே
ஒன்றேயாகி லுயிர்க்கிதுவதுவெ ன்
றணைத்திடபட்ட வுருப்பெயர்மய மா
மாயைதோன்றும் வகையேதென்னி ல்
அஞ்ஞானத்தா லச்சொரூபத் தை
மறந்துயிரிதுவெனு மாயையைக்காணு ம்
ஒருமுதலான வுயிர்க்கிருளொன்று ல்
பரசிவமதற்கே பந்தமுண்டாகு ம்
மேலுமோர்சிவம் விளங்குதலிலையி ல்
ஒருகாலையினு மொருவாப்பந்த ம
என்றெனிலந்த வெழிற்சொரூபற்கு ப்
பந்தமுத்தி பகர்ந்திடலா கா.
உன்னருளதனி † லுபக்கிரமத் தை

---

† உபக்கிரமம்=எடுக்குந்துறை.

அன்றெனக்குநீ யருளியவகை யே
சொல்கேனந்தச் சொரூபவெளியி ல்
கதிரொளிதோன்றுங் கானலேபோல ப்
பேசவொண்ணாத பின்னைசத் தி
தோன்றிமெதனிற் சொரூபசிற்சத் தி
சாயைபதியிற் சகமுயிர்பரமெ ன
ஓர்முப்பொருளு முடனேவிளங்கு ம்
எத்தகையென்னி லியம்பியபின் னை
திரிகுணசமுகஞ் சேர்ந்துநிகழு ம்
சத்துவகுணத்திற் சாயையேபர ம்
எண்ணிறந்த விராசதகுணத்தி ல்
சாயைகளேவுயிர் தாமதமிரண்டா ம்
இருண்மாயையென விருளுயிரவை யை
மறைத்தேநிற்கு மாயைசெகமா ம்
தனுமுதலான சகமதுண்டாக க்
கணக்கதுவாகிக் கன்மமுநிகழு ம்
இத்தகைபின்னு மிருஞ்சத்திதன்னி ல்
ஐந்துபொருளு மன்றேநிகழு ம்
இதிற்பந்தமுத்தி யிசைத்திடலாகு ம்
இராசதகுணத்தி லிசைந்திடுசா யை
ஆகியவுயிர்க ளதிட்டானமா ன
தற்சொரூபத்தைத் தாமதவிருளா ல்
மறந்துமூவகையாய் மாயையிலுழலு ம்
சத்துவகுண்பரந் தனக்கொருகாலு ம்
இருளேயில்லா வியற்கையிலருளி ல்
தனதங்கிசமுயிர் தானெனவறிந் து
கூபத்தில்வீழ்ந்த குழந்தையெடுக்க த்

தாயேவீழ்ந்த தகைமையின்பர மே
மாயைதனிலே வந்துருவைக்கொ ண்
டைந்துதொழிலு மடைவுடனடத் தி
இருளினைமாற்றி யெழிலதிட்டா னா
தற்சொரூபத்தைத் தானடைவிக்கு ம்
இருளதுநீக்கி யிருந்தவிடத்தி ல்
உயிர்பரமிரண்டு முடலுயிர்போல ப்
பின்னுசத்தியிற் பெற்றிடுமுத் தி
உயிர்பரமிரண்டு மொன்றேயா கி
அபின்னசத்தியி லடைந்திடுமுத் தி
அபின்னையைப்பார்த்தே யதுநீயென் ன
அருமறையோது மதுவறியாம ல்
பின்னையைப்பார்த்தே பேதவாதிக ள்
பாவனையென்ற பகுத்துரைசெய்வ ர்
உயிரின்சாக்ஷி யொருவனேயா ம்
பரத்தின்சாக்ஷி பரைநீயேயா ம்
அப்பால்விளங்கு மதுசிவமேயா ம்
பின்னுசத்தியிற் பிறிவைக்குறித் தே
இவ்வகைமூன்று மியம்புவையன்றி ப்
பார்த்துடநோக்கிற் பரம்பொருளொன் றே
இப்பரம்பொருளே யெழிற்சிவதரிசன ம்
என்றேமுன்ன மியம்பியதுமை யே
சுட்டொடுநோக்கிற் றோன்றிடுமூன்று ய்
சுட்டின்றிநோக்கிற் றோன்றிடுமொன்று ய்
மூன்றுமிறந்த முப்பாழதனி ல்
தற்சிவசொரூபந் தானாய்விளங்கு ம்
பின்னுசத்தியிற் பிறந்ததுமூன்று ம்

பின்னை தனிலே பெயர்ந்தேயொடுக்கு ம்
அப்பால்மவுனத் தழகியசிவ மே
அழகியசிவத்தி லாரோபிதமாய் ய்
பின்னைநிகழும் பெயராதென்று ய்
அதிட்டானமான வச்சிவநேய ய்
உலகமாய்த்தோன்றி லுயிருமருளு ம்
விளங்கிடுஞ்சிவமாய் விளங்கிடும்போதி ல்
உயிருமருளு மொருசிவமேயா ம்
இத்தகைகண்டே னெழிற்சிவதரிசன ம்
சிவனமக்கருளிய சிவதரிசனத்தி ன்
படியேயுனக்குநம் பார்வையிலுண்டா ய்
விளங்கிற்றந்நிலை விட்டுநீங்கா து
நில்லெனவருளி னிமலநாயகி யே
மலந்தினுநாயை வளப்பயதுடை ய
சிங்காதனத்திற் சேர்த்திவைத்ததுபோ ல்
எனக்கேநகைவரு மெனதுசரித்திர ம்
எனக்குமிந்த வெழிற்சிவதரிசன ம்
அளித்தனையிதற்கோ ரறைகைம்மாறெ ன்
பளாயேயுனக்கே பரங்காணென்னை க்
காத்ததுகாத்தாய் கடைபோகக்க ண்
பார்த்தெனைவிடாது பரிந்துகொண்டரு ளே.

சிவதரிசன அகவல் முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதின்மூன்றவது.

# ஆகமநெறியகவல்.

சத்தினிபாதந் தான்பிறந்திதய ம்
சுத்தமதடைந்து தொல்லைமூவுலகு ம
கான்றசோறதனிற் கண்டெனவிடுத் து,
வீட்டின்பினையே விரும்பிடுஞக ம
விசாரணைசெய்ய வேண்டிடுமுத் தி,
உண்மையின்மும்முத லுண்மையதாகு ம
அஃதையுமன்றி யவனியுமேலார்பொரு ள்
உணர்ந்திடுமிடத்தி லுருவுடனும ம்
தோன்றா தன்முனமே தோன்றிடுஞ்சிவம தை
இருளினிற்றெரியா திதுவெனச்சுட் டி
எய்திடுமாயை யிருவினையதனி ன்
ஆசையிற்பதிப்சு வாணவமா யையு
கருமமுந்தோன்றுங் கருவிதினைக்கி ன்
மும்முதலவையின் முத்தியிற்பசு வை
விடவேண்டுமென்னும் விருப்பமதனி ல்
இருவகையாகு மிரும்பதிபசுவு ம்
மூவகையாகு மும்மலந்தனின்ம ற்
றவைதனக்குக்குறி யதுவிதுவாகு ம்
அதுவிதுநீங்கி லவைமூன்றாகலு ம்

அவையினின்மூல மாணவமாகு ம்
அறுவைக்கழுக்கை யகற்றிடுமெழுவரு ம்
சாணமும்போலச் சாற்றியவிரண் டு
மூலங்கெடுக்க மூலனேகூட் டி
உற்பவமுதலா யுரைத்திடுமைந் து
தொழில்செய்திடுவன் றொன்மையிலேசி ன்
றந்தகன்கண்ணி லப்படலந்த னை
எடுத்திடுமுனமதற் கேற்றவுடதங்க ள்
சேர்த்திடினிதமாய்த் தீர்ந்திடுகால ம்
பொருந்ததுபோலும் புகன்றிடுமாயை ப்
பிறப்பினுக்கஞ்சிப் பிறப்பைநேர்நீக்கு ம்
நெறியேதென்வந் நெறியினையுரைப்பா ர
ஆரெனத்தேடி யாரற்றிகொலையி ன்
சிவமேஞான தேசிகனுரு ம்
அவனருளாலே யாகமநெறியி ன்
ஐந்துதொழிற்கு மரனேயுரிய ன்
ஆமென்றுயிர்பொரு ளச்சார்பெவையு ம்
உடற்காவலையு மொருங்கேநீக் கி
அருளினைநோக்கி யாசானருளி ல்
உச்சியினிற்கு முபலம்போ ல
ஆணவமாயை யவையினிற்றோன்று ம்
மறப்புநினைப்பு மாற்றிடிலல்பக ல்
அற்றவீடென்றே யறைந்திடுமாகம ம்
அவ்வீட்டதனி லனுபவத்தன்னி ன்
பெத்தத்தினிற்கும் பெற்றியைப்போ ல

---

‡ அறுவைக்கு = சீலைக்கு.

இதுவெனத்தோன்று மெவையவையனைத்து ம்
நியதிசெய்ததுவாய் நிற்றல்சமா தி
சமாதியைநீக்கிய சாக்கிரந்தனிலு ம்
சிவமேயைந்து செய்கையினடித்த ல்
கண்டுதற்செயலைக் கைவிடவேண்டு ம்
இத்தகைநெறியை யெய்திப்பால ன்
பித்தன்பசாசன் பெற்றகுணங்க ண்
மருவியேநிற்றல் வாய்மைநெறியா ம்
தேசாந்தத்திற் சிவமேசேர்வ ன்
இஃதாகமநெறி யினியாரணநெ றி.

ஆகமநெறியகவல் முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பதிநான்காவது.

# வேதநெறியகவல்.

---

சாதனநான்குந் தன்னிடத்துதித் த
பின்னர்விசாரய பேதமபேத ம
எனவிரண்டவையு ளீசனுமுயிரு ம்
இருமுதலென்ற வியம்புதறிரி வு
ஒருமுதலென்ற லொள்ளியகாட் சி
ஆகையின்வேதத் தந்துவிசார ம்
செய்திடவேண்டுஞ் சிறப்பெனிலாகம ம்
அன்றதுசிறப்பா மத்தியான்மீ ம்
சொல்லியபிரபல சுருதியேசிறப் பு
இத்தகவன்றி யெழிலார்சுரு தி
அரசனதுரையி னவைமற்றெல்லா ம்
மற்றோருரையின் மறையினைப்பற் றி
நிற்குமதன்றி நிமலன்சுவாச ம்
வேதமாகமம் விளங்கியவாக்கா ம்
அதனுண்முந்திய தருமறையாகு ம்
இதற்கதிகார மின்றியவைசிய ர்
சூத்திராதி சொல்லியபேர்க்கு ம்
விசாரணைபண்ணி விளங்கிடலாகு ம்
அவரவர்சரிதை யவரவர்க்கேயா ய
பத்தியுஞானமும் பகர்வயிராகமு ம்
எக்குலத்தோர்க்கு மெய்திடலாகு ம்

அறிவேகுலமென் றறைந்திடுமுலக ம்
கற்குலம்வினையி னண்ணினதாகு ம்
மூன்றுகடனு முணமுடித்தோர்க் கே
ஞானவிசாரணை நாடிமேற்கொள்ளு ம்
காமாரிக்த நாளுவிதமா ம்
பிரபஞ்சத்தின் பிறப்பிடந்தா னே
தெவரினையுடைய தெமக்கிப்பிர வி
எய்தினதெந்த வேதுவினிஃது யு
இறந்திடுமெந்த வேதுவினென்று ம்
சேர்ந்திடவேண்டுந் தேகேந்திரியா தி
காமலசித்தே கமதாருவகில ம்
பழுதையையிரவிற் பாம்பெனபதுவி ன்
சிவமஞ்ஞானத் திருக்கினிற்றிரிவாய் ச்
சகமெனத்தோன்றுஞ் சங்கற்பத்தி ல்
பழுதையிலுளதாய்ப்பகர்ந்திடும்வடி வே
ஆரோபிதமா மாவிழுற்றங்கலி ல்
அச்சிவவடிவே யகிலந்தங்கு ஞ்
சகப்பொருளெல்லாஞ் சத்துசித்தின் ப
வடிவநாமமுமிவ் வகையைந்தியல்பி ல்
உதித்திடுமுன்ன முறைத்திடுமூன்று ய்
சொரூபசம்பந்தஞ் சொல்லுமயினிரண்டு ம்
மாயிகசம்பந்த மற்றிவைதன் னை
யூகித்துணரா துணர்வுடைத்தாகி த்
தோன்றிடும்பொருள் துவக்கிற்பிற வி
சிதைந்திடுஞ்சகலத் தியாகந்தன்னி ல்
சகலத்தியாகந் தானதுவென்னி ல்
பாம்பெனநீக்கிப் பழுதையென்றறித ல்

# வேதநெறியகவல்.

போலநாமாதி போக்கிச்சொரூப ம்
பெற்றிடலஃதெப் பெற்றியிலுண்டா ம்
அரவெனும்பிராந்தி யகன்றிடுந்தீப ம்
வந்துவிளக்கில் வகையதுபோ ல
ஆசானருளி லருமறையத் த
ஞானவிசாரமே ஞானதீபமுமா ம்
அவ்விளக்கங்கொண் டறிந்திடவேண்டு ம்
அதிட்டானந்தோன்றி லாரோபிதம்போ ம்
தனையாரென்றே தான்முதற்றேரி ன
துளபடியுணரி னொருங்கேயனைத்து ய்
தோன்றிடும்பழுதை தோன்றினவுட னே
சட்செவியென்றல் சாணுதஃதி ன்
அகிலமுநீங்க லன்றியேதோன்றி ல்
பேய்த்தேர்போல்ப் பிரவர்த்தகமு ம்
கனவதுபோலக் காண்டிடுமவையா ய்
நின்றிடலொருவி நித்திரைதன்னி ல்
கண்டிடுங்கனவிற் காட்சியீதென் று
தனைவேறாகத் தானுணர்ந்திடலி ன்
உடன்முதற்றஃளி யொருசிவனாமெ ன்
றிருளகன்றுறுதி யிதயத்துதித்து க்
கந்தர்ப்பநகரங் கண்டிடலிற்சக ம்
கண்டிவ்வுறுதி கலக்கமில்லாம ல்
நிற்றல்சமாதி நிலையிதுவாகு ம்
உடலந்தத்தி லொன்றுவன்முத் தி
இதுநின்மலமுடை யிதயருக்காகு ம்
மலினநெஞ்சுடைய மகற்குமுன் னை
விதமாமசுத்தம் விலக்கும்பொருட்டு ச்
சுத்தவர்தனையைத் தொடங் கி
மனோலயஞ்செய்யின் வாய்த்திடும்வீ டே

வேதநெறியகவல் முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

பதினைந்தாவது.

# பிரமானுபவ அகவல்

நன்னெஞ்சேவா நானுரைக்கக்கே ள்
பிரமானுபவத்தைப் பிரத்தியக்கமதா ய்
அருட்குருவருளி லறைகுவன்கேளா ய்
யாதோர்பொருளும் யாவராயினு ம்
சுருதியுத்தமதாய்ச் சொற்றிடவேண்டு ம்
மனவுரையதனின் மதித்திடவொண்ணா ச்
சச்சிதானந்தத் தற்சொரூபத்தி ல்
சிறந்தசிற்சத்தி செகசத்தியென்று ம்
இருவகைச்சத்தி யெனவன்றேயு ள
தவையினிற்பின்னை யகிலத்துக்கே து
சிற்சத்திமுத்தி தானதற்கே து
பரத்தினிலபினா பாவமாயொன்று ய்
சிற்சத்திக்குஞ் செகசத்தியது ம
தற்சொரூபத்தைத் தானதுவிடாம ல்
வேறுபோற்றோன்றி விளங்குமுக்குணமா ய்
சாத்துவிதராசத தாமதமென வே
சத்துவகுணத்திற் றுக்கியசா யை
பரமாயெங்கும் பார்த்திடுமிராச த

சாயையுயிராந் தாமதமிரண்டா ம்
இருண்மாயையென விருளுயிர்த்தடுக்கு ம்
இருளினையிரிய யிருமாயைசேர்க்க த்
கனக்கதுவாகக் கருமமுண்டாகு ம்
ஆகவைவிதமு மன்றேசிகமு ம்
இவ்வைவிதமா யிலங்கியபின் னை
பரத்தினையன்றிப் பார்த்திடிலில் லை
சர்வவிடய தற்பரஞ்சுவாச ம்
சுருதியதாகுஞ் சொல்லாகமமா ம்
என்றெண்ணவோது மெழுதிலார்சுரு தி
இஃதேதுணிவென் றெம்மையுமாண் ட
அருட்டேசிகனு மறைந்தனனன் றே
நானெனவே ஞானநந்து ளை
வினைவிடிவித்தகை விளங்கியபிரம ம்
நீயேயென்று நிச்சயமாக த்
தத்துவமசிகொடு சாற்றினனன் றே
இவ்வுரைப்படியே யிருந்தனுபவத்தி ல்
காட்டுகேனுனக்குக் கருத்தசையா து
ஒன்றாய்நோக்காய் நன்னெஞ்சக மே
அரசன்றன்சே யடாதார்சே ரி
சேர்ந்தவினம்போற் றிரிந்திடுமவ னை
அறிந்தவனொருவ னவ்விடத்தே கி
அன்னோனிடத்தி லரசலிலக்கண ம்
காட்டியுணர்த்தீங் கணக்கதுபோ ல
நீசீவன்போ னிற்குமுன்கண் ணே
சிவத்தின்குறியைச் செப்பிடக்கேளா ய்.
சாக்கிரமதனிற் றக்கிடும்பொருளி ல்

நினைவெழுமுனமே நின்றிடுநிலையே
நின்மலநிலையர் நிலையினினோக்கின்
விளங்கிடுஞேயம் விளக்கிடுஞானம்
நோக்கிடுஞாதுரு நுவலுமிம்மூன்றும்
ஏகமேயாக நன்றாய்விளங்கும்
அவ்விடத்தறிந்த தமலசத்தியினால்
அபினைபாவ மாயேகமுமாம்
அந்நிலைநின்றே யசைவுசெய்நினைவில்
அடைந்திடுமிடத்தி லைவகைப்பொருளும்
முன்பினின்றி முழுதுநிகழும்
இஃதுணர்ந்திடுத லிரும்பின்னையினில்
அசைவுசெய்நினைவி லடைந்தவக்கணமே
சுவாசமங்கிசமெனத் தோன்றிடுமவாக்கு
நான்றானெனவே நவிற்றிடாநிற்கும்
இவையேசுருதி யெழிலாகமமாம்
நிலையினிலொன்றாய் நினைவினிலைந்தாய்
விளங்குநம்மிடத்தின் மேவுசத்திகளால்
இத்தகையன்றோ யிருந்துடனிகழும்
இதனானுமே யிருஞ்சிவமாகும்
இவ்வனுபவத்தை யிலங்கிடநீயும்
கண்டுடனிருந்துங் கலக்கமீதுற்றுக்
கண்டிடும்பொருளைக் கருதிவேறாகச்
சீவனைப்போலத் தியங்கினையினிநீ
நின்றநிலையே நிலையெனநிற்கில்
கண்டிடைம்பொருளுங் கனாயுநாமைமாக
நினைவொடுநிலையே நிலையெனநிற்கில்
விளம்புமைம்பொருளும் வேறாய்விளங்கும்

நின்றமுன்னிலைக்கு நினைவொடுநிலைக்கு ம்
நாமேயிடமென நம்மையேயன் றி
விளங்காதென்றும் விளங்கிடுமுன்னி லை
சற்சத்தியென்றுஞ் சாற்றியபின்னி லை
அசற்சத்தியென்று மமையின்முற்சத் தி
சுயசத்தியென்றுஞ் சொல்லுபிற்சத் தி
கற்பிதமென்றுங் கருதியுணர்ந் தே
அனைத்துநாமெனவே யறிந்தந்தறி வே
இடைவிடாதிவ்வுட லிறந்திடு ம்
வரையுநிற்றிடில் வாய்க்குநம்வீ டே.

பிரமாணுபவ அகவல் முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

பதினாறவது.

# சிவசமரசவாத அகவல்.

கலிவலியினது கலக்கமோர்காலும்
சித்தமாயில்லாத் திருமுதுகிரிவாழ்
என்னையுபொருளா வெண்ணியாண்டருளும்
விநத்தவம்பிகையே வினையனேற்கிஃதென்
றையமிவ்வைய மனையேயின்றேல்
அனறிமற்றொருவ ராரினுநீங்கா
திவ்வையந்தனை யானின்றகற்றத்
துணிவிதுவென்னச் சுருதியின்முடிவின்
அருளியபடியே யருள்செயவேண்டும்
ஏதெனிற்சொல்கே னெழில்வேதாகமத்
துயிர்பரமேக மோரிரண்டெனவே
ஓதியவகையி லும்பர்கண்முனிவர்
ஆரியர்தந்த மகமிசைக்கொண்ட
படியினிற்சென்று பரமடைந்தனர்கள்
அவையிலொன்றை யலநெறியென்றே
தள்ளுதல்கூடாச் சமரசமாகத்
திரிவையமறச் சிவையேயுனதின்
அனுபவப்படியே யனுக்கிரகஞ்செய
வேண்டிடுமோர்நெறி மேவியேமுயலும்

இது † திரிவல்ல வெழிற்றுணிவேயா ம்
சமதருளாலே நன்றுயறிந்தா ய்
இதினீவாழ்வா யென்றனைவாழ்த் தி
இதுபிரமாண வெனவன்றனக்கு ம்
உறுதியாய்நீயே யுரைக்கிலுன்னருளி ல்
திரிவைய மறத்தேர்ந் து
சமயிகளுடனே தர்க்கித்தலற்றே ன்.

சிவசமரசவாத அகவல் முற்றிற்று.

ஸ்ரீ - குமாரதேவர் சாத்திரக்கோவை

முற்றிற்று.

---

† திரிவு=மயக்கம்.
‡ திரிவு=அஞ்ஞானம்.

[illegible] XI [illegible] 61

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ - குமாரதேவர்

திருவாய்மலர்ந்தருளிய

விருத்தாசலம்

# பெரியநாயகியம்மன்பதிகம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விரிவுறுமுருவநாமமதகற்றின் விடயங்கள்விளங்குறுவிசனுன்
மருவுறுபொறிபோய்பொறியந்தக்கரணமாய்ந்துறுங்கரணமாய்தலினுற்
புருடன்முன்னேழுஞ்சுத்தமோரைந்தும் போமிதாற்சச்சிதாநந்தங்
கிரியையற்றிலங்குமென்றனள்விருத்த கிரியமர்பெரியநாயகியே. (௧)

உளப்படுமுருவநாமமதகற்றி னுள்ளசற்சிற்சுகந்தோன்றய
வுளப்படுந்தனுலுலகுகண்ணுடி வருநிழலாநிழன்மறிந்தால் [தாள்
விளக்குறுஞானவெளியதாந்தனின் விளையுமின்பெனவெனக்கிசைத்
கிளக்குறுதவத்தோர்தரித்துவைவிருத்த கிரியமர்பெரியநாயகியே. ()

பழுதையென்றுணரிற்றன்முனர்த்தோன்றும் பாம்புமப்பழுதை
யாமதுபோன், முழுதுணரறிவாந்தன்னேயேகாணின் முரணுறுசரா
சரமெவையும், மொழுதருமறிவாவிளங்குமென்றிசைத்தா ளெழுபவந்
துடைத்தெனையளித்த, கெழுமணிமுத்தந்திசெறிவிருத்த கிரியமர்
பெரியநாயகியே. (௩)

சொருபமேதாமென்றுணர்தரிற் பரனுந்துகளுறுஞ்சீவனுஞ்சகமு
மருவுதன்னினைவிலெழுந்தமித்தைகளாம் வந்திடுந்தம்வீடிலவா [ள்
மொருவுயிர்தானென்றுணரிலம்மூன்று முளபந்தம்வீடுமுண்டென்று
திரிதலப்பயனாய்வருமொருவிருத்த கிரியமர்பெரியநாயகியே. (௪)

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
[illegible] MADRAS-41

அறிபொருளறிவோனறிவினைக்கொடுப்போனுமப்பொருளுமோர்விடயம், பொறியுறப் பிடித்தாலுமாவிதைவிடுத்தோர் பொருளைநாடுதன்முனரிடையே, பிறிவறத்தோன்றுஞ்சொருப மிந்நிலையிற்பேசமுப்பொருள்களுமிலவாங், கிறியறவறிதியென்றனள்விருத்த கிரியமர்பெரியநாயகியே. (௫)

அரவிலைபழுதை யுணர்ந்தவர்க்கதுபோ லகிலமெய்ப்பொருளினையுணர்ந்தோர், கொருவுருதிருத்தலெனையெனிற் கானலுறுசலமிலையெனவுணர்ந்துய, மருவலினுறுவிகாரமேதென்னின் மலிகனவினிலுறுமென்றாள், கிருதுசெய்மறையோர்பரவியவிருத்த கிரியமர்பெரியநாயகியே. (௬)

தடத்தின்மற்றதனிற்றங்குபல்கடத்திற் சாயையுஞ்சாயையில்லதுமாய்த், திடத்தொடுமிளங்குமிசுப்புபோலீசன் சீவனிங்கிருவர்சாட்சிகளா, மிட்டத்துறும்பினையிற்றோன்றுறுஞ்சிவமிங் கிருவர்சாட்சிகளுமொன்றென்றாள், கிடத்தநன்னிதியாயெனக்குறும் விருத்தகிரியமர்பெரியநாயகியே. (எ)

ஆருயிர்தானுமவன்மனந்தைச தகங்காரத்துதித்ததுவாகும்
பேருயிர்சாட்சியானவன்மனமோ பின்னையாமாதலாலவற்குக்
கூருறுமூலமயக்கமாமிவற்குக் குறித்ததன்லீலையாமென்றாள்
சீரனையளித்தோற்குவந்தாய்விருத்த கிரிமர்பெரியநாயகியே. (அ)

ஓதுறுநாமமகற்றிடிற்றோன்று முள்ளசற்சிற்சுகமிதுவே
தீதறுசீவசாட்சியிங்கிதனைத் தெருந்திடுஞ்சிவனுமிதுவா
யேதமொன்றில்லாப்பிரமமாமென்றெனிருளறவருள்புரிந்தளித்தாள்
கேதமிறவத்தோர்சூழ்தரும்விருத்த கிரியமர்பெரியநாயகியே. (க)

எஞ்சுறமுளத்தோடென்னையாரென்றேயிரங்கியேதிரிந்துழல்வேனை
மஞ்சுறற்காத்துக்கன்னனைக்குந்தி மகனெனவுணர்த்துதல்கடுப்ப
வஞ்சலென்றழைத்துயேதுவாகு மையமின்றெண்ணவேயளித்தாள்
இஞ்சுகவாய்பாலுஞ்சிடவிருத்த கிரியமர்பெரியநாயகியே. (க0)

பெரியநாயகியம்மன் பதிகம் முற்றிற்று.